
கல்கி



ALKI ஜூன் 21, 1953

4 அணா

கல்கி பொருளடக்கம்

மலர் 12 | இதழ் 47

1953 ஜூன் 21

விஜய ௵ ஆனி 7௨



Introducing
BINNY'S
Super Shirting
"மஸ்காட்"
பெங்களூர் உல்லன், காட்டன் அண்டு சில்க் மில்ஸ் கம்பெனி லிட்.
தயாரிப்பு
மிகவும் கவர்ச்சிகரமான பற்பல நிறங்களில் இப்போழுது கிடைக்கிறது.
VENKATESH VASTRALAYA
CITY DISTRIBUTORS for
Phone: 4688
THE BUCKINGHAM & CARNATIC MILLS.
THE BANGALORE WOOLLEN, COTTON & SILK MILLS.
Retail Showroom :
2, THAMBU CHETTY STREET, MADRAS-1.
வெங்கடேஷ் வஸ்த்ராலயா
2, தம்பு செட்டித் தெரு - சென்னை-1

கல்கி

மலர் 12 | தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் | இதழ் 47

இப்படியும் ஒரு பிரின்ஸுபால்!

இளம் பிள்ளைகள் கையில் விண்ணப்பங்களுடன் கலாசாலைகளைத் தேடி அலையும் 'ஸீஸன்' இப்போது தொடங்கி நடந்து வருகிறது. கலாசாலைகளுக்குள்ளே என்ஜினியரிங் கலாசாலைகளில் சேர்வதற்குத்தான் இன்னமும் ஆர்வம் அதிகமாயிருந்து வருவதைக் காண்கிறோம். என்ஜினியரிங் கலாசாலைகளில் சேர விரும்பும் மாணவர்கள் வரதட்சிணை வாங்கக் கூடாது என்று சட்டம் போட்டால், அதைக்கூட ஒப்புக் கொள்ளப் பல மாணவர்களும் பெற்றோர்களும் தயாராயிருப்பார்கள். "காலால் நடக்கக் கூடாது; தலையால் நடக்க வேண்டும்" என்றால், அதற்கும் சித்தமாயிருப்பார்கள். இப்படி என்ஜினியரிங் கல்வியில் ஆர்வம் இருப்பது நாட்டுக்கு நல்லது. ஏனெனில், சுதந்திர நவ இந்தியாவை வளம் மிக்க நாடாக்கும் திருப்பணி செய்ய வேண்டியவர்கள் முக்கியமாக என்ஜினியர்கள்தான்.

என்ஜினியரிங் கல்வி இவ்வளவு முக்கியமானது என்றால், அந்தக் கல்வியைப் போதித்து வருகிறவர்கள் எவ்வளவு முக்கியமான தொண்டு செய்து வருகிறார்கள் என்று சொல்ல வேண்டியதில்லை. வெறும் ஏட்டுக் கல்வி பரம்பரையில் வந்தவர்கள் கல்வித் திட்டங்களைப் பற்றிச் சொல்லும் அபிப்பிராயங்களைக் காட்டிலும் என்ஜினியரிங் ஆசிரியர்கள் சொல்லும் அபிப்பிராயங்களுக்கு மதிப்புக் கொடுத்தே யாகவேண்டும்.

நம் நாட்டிலுள்ள என்ஜினியரிங் கல்லூரிகளுக்குள்ளே கிண்டியில் உள்ள பொறி இயற் கல்லூரி தனிப்பட்ட சிறப்பு வாய்ந்தது. அந்தக் கல்லூரியின் தற்போதைய தலைமைப் பேராசிரியர் லெப்டினன்ட் கர்னல் எஸ். பால் என்பவர். இவர் முப்பது வருஷங்களாகப் பொறி இயற் கல்லூரி போதனையில் தொடர்பு கொண்டவர். சைன்யத்தின் என்ஜினியரிங் பகுதியில் இருந்தும் தொண்டு செய்தவர். ஆகவே, எல்லா விதங்களிலும் கல்வித் திட்டங்களைப் பற்றி அபிப்பிராயம் கூறத் தகுதி வாய்ந்தவர்.

சென்னை சர்க்கார் கொண்டு வந்திருக்கும் புதிய கல்வித் திட்டத்தைப் பற்றிப் பிரின்ஸ்பால் லெப்டினன்ட் கர்னல் பால் ஒரு கட்டுரை எழுதிப் பத்திரிகைகளில் அச்சாகி யிருக்கிறது. புதிய கல்வித் திட்டத்தைப் பொறி இயற் கல்லூரித் தலைவர் "ராஜாஜி தேச மக்களுக்கு வழங்கி யிருக்கும் மகா வரப் பிரசாதம்" என்று வர்ணித்து வரவேற்றிருக்கிறார். அதற்கு ஆதாரமாகத் தம் சொந்த அநுபவத்தில் கண்ட இரண்டு அநுபவங்களை எடுத்துச் சொல்லி யிருக்கிறார். அவற்றில் ஒன்று, நம் யாழ்ப்பாண நண்பர்களுக்கு மிக்க மகிழ்ச்சி அளிக்கும். அதைக் கேளுங்கள் :—

"இலங்கையில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த காரை நகரில் 13 தமிழ்ப் பள்ளிகளுக்கும் ஒரு இங்கிலீஷ் பள்ளிக்கும் என் தந்தை மானேஜராக இருந்தார். அந்தப் பள்ளிகளில் வகுப்பு நேரங்கள் காலை 10 மணியிலிருந்து மத்தியானம் 1 மணி வரையில்தான். பள்ளி மாணவர்கள் பல்வேறு தரப்பினர். சிலர் விவசாயிகளின் குழந்தைகள்; சிலர் மீன் பிடிப்பவர்களின் குழந்தைகள். மற்றும் பல்வேறு தொழில்களைச் செய்பவர்களின் குழந்தைகளும் இருந்தனர். எல்லா தரப்புக் குழந்தைகளுமே காலை 5 மணியிலிருந்து 8 மணி வரை, அவரவர் பெற்றோர்களுக்குத் தொழில் உதவி செய்வார்கள். காலை 10 மணிக்குப் பள்ளிக்கு வந்து மத்தியானம் 1 மணி வரை பாடங்களைக் கற்பார்கள். பின்னர் மீண்டும் வீடு சென்று பெற்றோர்களுக்குத் தொழிலில் உதவி செய்தும், ஆரோக்கியமான விளையாட்டுக்களில் ஈடுபட்டும் வந்தனர்.

தமிழ்ப் பள்ளிகளில் முற்றிலும் தாய்மொழி மூலம் போதனை செய்யப்பட்ட விஷயத்திலும் சரி, ஆங்கிலப் பள்ளியிலும் சரி, மாணவர்களின் கல்வி ஞானம் அற்புதமாக இருந்தது. பிரதேச மொழி, ஆங்கிலம், இலக்கணம், சரித்திரம், பூகோளம், கணக்கு ஆகியவைகளில் அவர்கள் நல்ல பயிற்சி பெற்று இருந்தார்கள். பள்ளிகளின் இன்ஸ்பெக்டர் நடத்திய வருஷாந்திரப் பரீட்சைகளில், மாணவர்களின் கல்வித் தரத்தைப் பற்றி இன்ஸ்

பெக்டர் எழுதி வைத்த குறிப்புகளை நான் பார்த்திருக்கிறேன்.

ஒரு சமயம், ஹைஸ்கூல் மாணவர்களைப் பரீட்சித்த இன்ஸ்பெக்டர், குறிப்புப் புத்தகத்திலே, "இந்த மாணவர்களின் கல்வித்தரம் இந்தத் நிலையிலேயே மிக உயர்ந்ததாக இருக்கிறது" என்று எழுதினார். அந்தப் பள்ளி மாணவர்களில் சிலர் நல்ல பாண்டித்யம் பெற்றவர்களாகி, சர்க்காரில் இன்று மிக முக்கியமான பதவிகள் வகிக்கிறார்கள். போட்டிப் பரீட்சைகளில்கூட அவர்கள் தரம் உயர்ந்தேயிருந்தது."

புதிய கல்வித் திட்டத்தினால் கல்வியின் தரம் குறைந்து விடும் என்று சொல்லும் பிரஹஸ்பதிகள் இங்கே இருக்கிறார்கள். கல்வியைப் பற்றிச் சிறிதும் அநுபவமோ, ஆராய்ச்சியோ இல்லாதவர்களும் சேர்ந்து அவ்வாறு 'தரம் குறைந்து விடும்' என்று ஓலமிடுகிறார்கள். ஆனால் போதனை முறையில் அநுபவமும் ஆராய்ச்சியும் உள்ளவரும் அபிப்பிராயம் சொல்லத் தகுதி வாய்ந்தவருமான என்ஜினியரிங் கல்லூரி பிரின்ஸ்பால் மேற்கண்டவாறு கூறுகிறார். அவர் கூறும் மற்றொரு உதாரணத்தையும் கேட்டு விடுங்கள் :—

"சிங்கப்பூரில் ஆங்கிலோ – சீன பள்ளியில் நான் 2 வருஷம் மாணவனாக இருந்தேன். சிங்கப்பூரில், பிரிட்டிஷ் அமைப்பு ரீதியும் கலாச்சாரமும் மட்டுமல்ல; அமெரிக்க முறையும் கலாச்சாரமும் கூட உண்டு. நான் மாணவனாக இருந்தபோது அந்தச் சிங்கப்பூர் பள்ளியில், காலையில் ஆரம்பித்து மத்யானம் முடிந்து விடும் வகுப்புகளும், மத்யானம் ஆரம்பித்து மாலையில் முடியும் வகுப்புகளுமாக, இரண்டு பகுதிகளாக வகுப்புகள் நடந்தன. பெற்றோர்கள் தொழிலில் மாணவர்கள் உதவி செய்வதற்காக வகை செய்வதே இப்படி இரண்டு பகுதிகளாகப் பள்ளி வகுப்புகளைப் பகுப்பதின் நோக்கம்.

ஆங்கிலோ—சீன பள்ளி மாணவன் என்ற முறையில் நான், செருப்புத் தைக்கும் தொழிலில் ஈடுபட்ட நண்பர்களுடன் சென்றேன். அந்த மாணவ நண்பர்கள், தங்கள் தொழிலை அற்புதமாகச் செய்தார்கள். மற்றும் சிலர் தச்சு வேலையில் தங்கள் பெற்றோர்களுக்கு ஒத்தாசை செய்தார்கள். இத்தகைய வேலைகள் செய்வதில் எனக்கு ஆசை அதிகம். தச்சுவேலை போன்றவை செய்யுமிடங்களில் மணிக்கணக்கில் தங்கி விடுவேன்.

மற்றும் அநேக பையன்கள், தங்கள் தந்தையர் கடைகளில் உதவி செய்யும் பையன்களாக வேலை செய்தார்கள். பல விவசாயிகளின் பையன்கள், ஐந்து மைல் தூரத்திலிருந்து கூடப் பள்ளிக்கூடத்துக்கு வருவார்கள். அவர்களுடைய தோட்டங்களுக்கு நான் போயிருக்கிறேன். காய் கறிகள், பழங்கள் முதலியவற்றை அவர்கள் பயிர்செய்திருந்த முறை கண்டு வியந்து போனேன்."

மேற்கூறிய இரண்டு உதாரணங்களும் என்ஜினியரிங் கல்லூரித் தலைவரின் சொந்த அநுபவங்கள். அவர் இளம் பிராயத்தில் செருப்புத் தைக்கும் தொழிலிலும் தச்சு வேலையிலும் விவசாயத்திலும் ஆசை கொண்டிருந்தார். அந்த வேலைகளில் பயிற்சியும் பெற்றார். அது காரணமாக அவர் மேற்பதவிகளை அடைவது எவ்விதத்திலும் தடைப்பட்டு விடவில்லை. அதனாலேயே கிண்டி என்ஜினியரிங் கல்லூரிக்கு இன்று இவ்வளவு மகிமையைத் தேடித் தந்திருக்கிறார். மேற்படி கல்லூரி மாணவர்கள் நடத்திய என்ஜினியரிங் காட்சிக்கு லட்சக் கணக்கான ஜனங்கள் சென்று பார்த்து வியந்ததைச் சென்னைவாசிகள் அறிவார்கள். இந்த அற்புதங்களையெல்லாம் வெறும் ஏட்டுக் கல்வி மரபில் வந்த பிரின்ஸிபால் சாதித்திருக்க முடியுமா என்பது சந்தேகந்தான். உண்மையில், கிண்டி என்ஜினியரிங் கல்லூரி எக்ஸிபிஷன்கள் ஏன் அவ்வளவு வெற்றிகரமாக நடந்தன என்பதன் இரகசியமே இப்போதுதான் நம்மில் பலருக்குத் தெரிய வருகிறது.

பொறியியற் கல்லூரித் தலைவர் பால் தற்சமயம் மேற்படி கல்லூரியில் சேருவதற்கு முன் வரும் மாணவர்களின் திண்டாட்டத்தைப் பற்றியும் கொஞ்சம் சொல்லியிருக்கிறார் :—

"கிண்டி என்ஜினியரிங் கல்லூரியின் பிரின்ஸிபால் என்ற முறையில் இன்ஜினியர்களாகப் பயிற்சி பெறவேண்டி இந்தக் கல்லூரியில் சேர வந்த ஆயிரக் கணக்கான மாணவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ள வாய்ப்புக் கிடைத்தது. அவர்கள் தங்கள் கைகளை உபயோகித்து எந்த வேலையும் செய்ய முடியாதவர்களாயிருந்தார்கள். என்ஜினியரிங் பயிற்சிக்குக் கையை உபயோகித்து வேலை செய்யும் திறமை அடிப்படையானது. அத்திறமை இல்லாமையினால் மாணவர்கள் திண்டாடியதைப் பார்த்துப் பரிதபிக்க நேர்ந்தது. இராணுவத்துக்கு உத்தியோகஸ்தர்களைத் தயாரிக்கும் பயிற்சிப் படைகள் சம்பந்தமாகவும் எனக்கு இருபத்தோரு ஆண்டுகளாக அநுபவம் உண்டு. இராணுவப் பயிற்சிக்கு மண் வெட்டி பிடித்து வெட்டி அகழ் எடுக்கத் தெரிந்திருத்தல் அத்தியாவசியம். நான் எவ்வித சிரமமும் இன்றிச் சர்வ சாதாரணமாக மண் வெட்டி எடுத்துக் குழி தோண்டிக் காட்டுவேன். ஆனால் என்னிடம் பயிற்சி பெற வரும் மாணாக்கர்கள் மண் வெட்டியை எப்படிப் பிடித்துக் கொள்வது என்று கூடத் தெரியாமல் தவிப்பார்கள்!"

நமது மாகாணத்தில் கல்லூரித் தலைவர் ஒருவர் இவ்வாறு எழுதியிருக்கிறார் என்று நம்புவதே கஷ்டமாயிருக்கிறது. "இப்படியும் ஒரு பிரின்ஸிபால் இருக்க முடியுமா!" என்று வியப்பாயிருக்கிறது. தீர விசாரித்து, லெப்டினண்ட் கர்னல் எஸ். பால் எழுதிய கட்டுரைதான் என்று நிச்சயமாய்த் தெரிந்து கொண்டோம். மங்களூரில் மகாநாடு கூடி அவசர அடியாகத் தலைபோகிற வேகத்தில் "புதிய கல்வித் திட்டம் பிள்ளைகளுக்குத் தீங்கு பயப்பது" என்று தீர்மானம் போட்ட ஆசிரியர்கள் மேற்படி கட்டுரையை நூறு தடவை பெயர்த்து எழுதி ஆயிரம் தடவை படித்து மனப் பாடம் செய்து கொள்வார்களாக! ஆனால், அதனாலுந்தான் உண்மையான பயன் ஏற்படுமா! மேற்படி கட்டுரையைப் பற்றிப் பரீட்சை வைத்தால் நன்றாக விடை எழுதி நூற்றுக்கு நூறு மார்க்கு வாங்கி விடுவார்கள்! ஆனால் மறுபடியும் "ஒரு நாளில் பாதி நேரம் பிள்ளைகளைக் கட்டவிழ்த்து விட்டுவிடுவதா!" என்ற பல்லவியையே பாட மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்!

நாற்பது லட்சம் குழந்தைகளுக்குக் கண்ணைக் கொடுங்கள் !

கோயமுத்தூரிலிருந்து "கோவைக் குரல்" என்ற ஒரு வாரப் பத்திரிகை சில காலமாக வெளியாகி வருகிறது. "கோவைக் குரல்" வெண்கலத்தினால் செய்த ஆலாட்சமணியின் நாதத்தைப் போல் கணகண வென்று ஒலித்து வருகிறது. சில சமயம் சங்கநாதமாகவும் சிங்க கர்ஜனையாகவும் கேட்கிறது. ஜூன் 10உ "கோவைக் குரல்" இதழில் பின்வரும் குறிப்புக் காணப்படுகிறது :—

"கோவைமா நகரில் சென்ற வாரம் ஒரு முனிசிபல் ஆரம்பப் பாடசாலையின் முன்னால் பின் வரும் வாக்கியம் எழுதி வைத்திருந்தார்கள்.

"1, 2, 3, 5, வகுப்புகளில் இடம் இல்லை."

ஆம்! அரிச்சுவடி சொல்லிக் கொடுக்கும் பள்ளிக் கூடத்தில் அ, ஆ கற்றுக் கொள்ளும் வகுப்புக்கு இடம் இல்லை!

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்று மறை சொல்கிறதே. அந்தக் கண்களையே பெறுவதற்கு இடமில்லை!

இத்தனை காலமும் காலேஜுகளில் இடம் இல்லை என்ற பல்லவியைக் கேட்டு வந்தோம். சென்னைப் பட்டணத்துக் கல்லூரிகளில், மாணவர்களின் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு இடம் தேடிக் கொடுப்பதற்குச் செய்த பகீரதப் பிரயத்தனங்களைக் கேட்டும், படித்தும், கேலிப் படங்களில் அனுபவித்தும் தெரிந்து வந்திருக்கிறோம்.

அத்தகைய துர்ப்பாக்கியம்—சின்னஞ்சிறு பிள்ளைகளுக்கும் இந்த வருஷம் நேர்ந்தது. எண்ணையும் எழுத்தையும் கற்றுக் கொள்ளக் கூட இந்தத் தேசத்தில் இடமில்லை, வசதி இல்லை என்று ஆகி விட்டதா என்று தூக்கி வாரிப் போட்டது.

கல்வி அதிகாரிகளே! நாட்டு நலனைக் கருதுவதாகப் பேத்தும் ஆசிரியன் மார்களே! பாருங்கள்! கண் கொண்டு பாருங்கள்! இதற்கு ஏதாவது மார்க்கம் தேடுங்கள்! இப்போது படிக்கும் மாணவர்களை விட இரண்டத்தனை இளம் மூளைகள் வெளியில் தவிக்கிறார்கள்! அவர்களுக்கு ஒரு வழி தேடுங்கள்! தேட முடியவில்லை என்றால் வங்காளக் குடாக் கடலில் விழுந்தாவது சாகுங்கள்! பின்னால் வருகிறவர்களாவது நிவாரணம் தேடட்டும்!"

இவ்வாறு "கோவைக் குரல்" தமிழ் நாட்டுப் பச்சிளங் குழந்தைகளின் சார்பில் கதறியிருக்கிறது. ஆனால் அப் பத்திரிகை குறிப்பிட்டிருக்கும் விபரீத சாதனத்தைக் கடைப் பிடிப்பதற்கு கவலை வேலையாக இனி அவசியம் இல்லை. அதாவது வங்காளக்குடாக் கடலில் யாரும் விழவேண்டியதில்லை! சென்னை சர்க்காரின் புதிய கல்வித் திட்டத்தை முனிசிபாலிடி உள்ள நகரங்களுக்கும் அமுலுக்குக் கொண்டு வந்தால், "அரிச்சுவடி வகுப்பில் இடமில்லை" என்று சொல்லும் அவல நிலைமை உடனே தீர்ந்து விடும். முதலில் கிராமங்களில்மட்டும் புதிய கல்வித் திட்டத்தைக்கொண்டு வரச் சர்க்கார் எண்ணினார்கள். இப்போது மேஜர் பஞ்சாயத்து உள்ள ஊர்களையும் சேர்த்திருக்கிறார்கள். அடுத்த ஆண்டில் நகரசபைகள் உள்ள நகரங்களிலும் புதிய திட்டம் அமுலுக்கு வந்தாக வேண்டும்.

புதிய கல்வித் திட்டத்தைப் பற்றிக் குண தோஷம் கூறுகிறவர்கள் பலர், அதன் முக்கியமான அம்சம் என்ன என்பதைக் கவனிப்பதில்லை. "பிள்ளைகளை ஒரு வேளை கட்டவிழ்த்து விட்டு விடுவதா!" என்று சிலர் கேட்கிறார்கள். "ஐயோ! ஐந்து வயதுச் சிறுவர் சிறுமிகளை வேலை செய்யப் பண்ணலாமா!" என்று சிலர் ஒப்பாரி வைக்கிறார்கள். (இவர்கள் ராஜாஜியை "நவீன கம்ஸன்" என்றே வர்ணிக்கிறார்கள்!) இன்னும் சிலர் "தகப்பன் தொழிலைப் புதல்வனும் செய்வதா! தாய் செய்யும் குடும்ப வேலையில் மகளும் உதவி செய்வதா! இது என்ன கேவலம்!" என்று பேசி "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பதை வற்புறுத்துகிறார்கள்!

புதிய கல்வித் திட்டமானது, இன்றைய தினம் பள்ளிக்கூடமே போகாமலிருக்கும் நாற்பது லட்சம் குழந்தைகளைப் பள்ளிக்கூடத்தில் சேர்ப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டது என்பதை அவசரக்காரர்கள் கவனிப்பதில்லையோ, அல்லது வேண்டுமென்று கண்ணைக் குருடாக்கிக் கொள்கிறார்களோ, தெரியவில்லை.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டுங்
கண்ணென்ப வாழு முயிர்க்கு"

என்றார் தெய்வப் புலமைத் திருவள்ளுவர். அவருடைய வாக்கின்படி, நாற்பது லட்சம் குழந்தைகளுக்கு எண்ணும் எழுத்தும் கற்பித்துக் கண் திறந்து விடுவதுதான் புதிய கல்வித் திட்டத்தின் முக்கியமான நோக்கம்.

புதிய கல்வித் திட்டம் சரியாக அமுல் நடந்தால், இன்று பள்ளிக்கூடம் போகாமலிருக்கும் நாற்பது லட்சம் குழந்தைகளையும் பள்ளிக் கூடங்களில் சேர்த்து எண்ணும் எழுத்தும் கற்பித்துக் கண் திறந்து விட முடியும்.

வேறு எந்தவித மாற்றுத் திட்டத்தினாலும் அது சாத்திய மாகாது.

புதிய கல்வித் திட்டம் சம்பந்தமாகச் சிலர் சாதிப் பிரச்னையைப் புகுத்தித் துவேஷப் பிரசாரம் செய்யப் பார்க்கிறார்கள். "பொது ஜனங்கள் சர்வ முட்டாள்கள்" என்று நினைத்துக் கொண்டு தான் இவர்கள் இந்தப் பிரசாரத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். ஆனால் சாதிப் பித்தர்களின் துவேஷப் பிரசாரத்துக்குச் செவி கொடுக்கக் கூடியவர்கள் தமிழ் மக்கள் அல்ல.

இன்றைய தினம் சமூகத்தில் 'மேல் வகுப்பினர்' என்று சொல்லப்படும் இனத்தாரில் பள்ளிக் கூடம் போகாத குழந்தைகள் இல்லவே இல்லை.

பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த குழந்தைகள் தான் 40 லட்சத்துக்கு மேல் எண்ணும் எழுத்தும் கற்கக்கூட வசதி இல்லாமல் இருக்கிறார்கள்.

அவர்களைப் படிப்பித்துக் கண்ணைத் திறந்து விடுவதற்குப் புதிய கல்வித் திட்டம் வசதி செய்து கொடுக்கிறது.

எனவே, சென்னை சர்க்காரின் புதிய கல்வித் திட்டத்தை எதிர்ப்பவர்கள், பிற்பட்ட வகுப்புகளைச் சேர்ந்த நாற்பது லட்சம் ஏழைக் குழந்தைகளுக்குத் துரோகம் செய்பவர்களாவார்கள்.

வாழ்க ஹெட்மாஸ்டர்கள்

இந்த ஆண்டு இம்மாகாணத்தில் எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்குப் போன பிள்ளைகளில் 100-க்கு 36 விதம்தான் பரீட்சையில் தேறினர்களாம். சென்ற வருஷத்தில் நூற்றுக்கு ஐம்பது பிள்ளைகள் விதம் தேறினர்கள். இதிலிருந்து, "பள்ளிக்கூடங்களில் போதனைத்தரம் குறைந்து வருகிறதா அல்லது பரீட்சையின் தரம் உயர்ந்து கடினமாகி வருகிறதா!" என்ற கேள்வி எழுகின்றது. இரண்டில் எது காரணமானாலும் நமது இளம் சந்ததிகளின் வருங்கால வாழ்வில் சிரத்தை உள்ளவர்கள் கவலை கொள்ளத்தான் வேண்டும்.

மொத்தத்தில் தேறுதல் சத விகிதம் இவ்வளவு குறைந்திருக்கும்போது, தமிழ் நாட்டில் சில பள்ளிக்கூடங்கள் மட்டும் முன்னணியில் நின்று புகழ் பெற்றிருக்கின்றன.

உதாரணமாக, மாயவரத்தின் தனிச் சிறப்பை அங்குள்ள மற்றொரு உயர்தரப் பள்ளிக்கூடம் (நேஷனல் ஹைஸ்கூல்) இவ்வாண்டில் நிலைநாட்டியிருக்கிறது. இப் பள்ளிக்கூடத்திலிருந்து எஸ்.எஸ். எல். ஸி. பரீட்சைக்குப் போன பிள்ளைகள் அவ்வளவு பேரும் (அதாவது நூறு சத விகிதம்) பரீட்சையில் தேறி விட்டார்களாம். காவேரி நீரத்தின் மகிமையே மகிமைதான்.

ஆனால் மேற்படி மாயவரம் நேஷனல் ஹைஸ்கூலிலிருந்து பரீட்சைக்குப் போன மாணவர்கள் மொத்தம் ஐம்பத்தி ஒன்பது பேர்தான்.

இருநூற்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளைப் பரீட்சைக்கு அனுப்பிய பெரிய பள்ளிக்கூடங்களை மட்டும் எடுத்துக் கொண்டு பார்த்தால், திருச்சிராப்பள்ளியில் உள்ள இ. ஆர். ஹைஸ்கூல் முன்னணியில் நிற்கும் என்று அறிகிறோம்.

இந்தப் பள்ளிக்கூடத்திலிருந்து எஸ். எஸ். எல். ஸி. பரீட்சைக்குச் சென்றவர்களில் நூற்றுக்கு எண்பத்தி எட்டு சத விகிதம் மாணவர்கள் தேறியிருக்கிறார்கள்.

இதில் இன்னொரு விசேஷம் என்னவென்றால், மேற்படி பள்ளிக்கூடத்தில் எஸ். எஸ். எல். ஸி. படித்த பிள்ளைகள் யாரையுமே பரீட்சைக்கு அனுப்பாமல் நிறுத்தவில்லை.

செலெக்ஷன் பரீட்சை என்னமோ நடத்தினர்கள். அதன் முடிவைப் பார்த்து விட்டு, மொத்தம் சுமார் 230 பிள்ளைகளில் நாற்பது பிள்ளைகளைப் பரீட்சைக்கு அனுப்பாமல் நிறுத்தி விடலாம் என்று முதலில் நினைத்தார்களாம். பிறகு புனராலோசனை செய்து யாரையும் நிறுத்த வேண்டாம் என்று தீர்மானித்து எல்லாப் பிள்ளைகளையும் பரீட்சைக்கு அனுப்பி விட்டார்கள்.

பரீட்சை முடிவு வந்த பிறகு பார்த்தபோது, நிறுத்த உத்தேசித்திருந்த நாற்பது பிள்ளைகளில் ஒன்பது பேர் பரீட்சையில் தேறிவிட்டதாகத் தெரிய வந்தது!

ஆகவே மேற்படி ஒன்பது பிள்ளைகளின் வாழ்க்கையை ஓராண்டு பாழாக்காமல் காப்பாற்றிய பெரும் புண்ணியத்தை மேற்படி இ. ஆர். ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீ ஆர். நடராஜன் அவர்கள் கட்டிக் கொண்டார்.

"செலக்ஷன் முறையே கூடாது" என்ற சர்க்காரின் பழைய உத்தரவை ரத்து செய்திருந்தும், ஒருவரையும் நிறுத்தாமல் அனுப்பி வைத்த இ. ஆர். ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர் ஸ்ரீ ஆர். நடராஜன் அவர்களை வாழ்த்துகிறோம்.

அவரைப் போலவே செலக்ஷன் முறையைப் பயன்படுத்திக் கொள்ளாமல் தாராள மனதுடன் இன்னும் சில ஹெட்மாஸ்டர்களும் எல்லாப் பிள்ளைகளையும் பரீட்சைக்கு அனுப்பியிருக்கிறார்கள். அவர்களுக்கும் நமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்.

ஒரு பள்ளிக்கூடம் பரீட்சை முடிவுகளில் சிறந்து விளங்குவது, ஹெட்மாஸ்டரின் நிர்வாகத்திறனையும் ஆசிரியர்களின் போதனைத் திறனையும் பிள்ளைகளின் அறிவுத் திறனையும் பொறுத்ததே அன்றி, செலக்ஷன் முதலிய செயற்கைச் சாதனங்களைப் பொறுத்ததல்ல. இதைச் சில ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர்களும் ஆசிரியர்களும் உணர்ந்து நடந்து கொண்டதைப் பெரிதும் பாராட்டுகிறோம். இந்த உண்மையை மற்ற ஹைஸ்கூல் ஹெட்மாஸ்டர்களும் ஆசிரியர்களும் உணரும் காலம் விரைவில் வரும் என்று எதிர்பார்க்கிறோம்.

களங்கம் நீங்குமா?

ஜனப் முகமது அலி பாகிஸ்தான் பிரதம மந்திரி பதவியை ஏற்றுக் கொண்டதிலிருந்து பாகிஸ்தானின் தொனி மாறியது. பாகிஸ்தான் தலைவர்கள் இந்தியாவைப் பகை நாடு என்று அடிக்கடி குறிப்பிடும் விபரீதமும் அவர்களுடைய 'ஜிஹாத்' வெறி முழக்கங்களும் ஓய்ந்தன.

அதன் பலனாக இந்தியா - பாகிஸ்தான் உறவு அபிவிருத்தி அடைவதற்கான திருப்திகரமான சூழ் நிலை உண்டாகி யிருக்கிறது.

நேரு – முகமது அலி சமரசப் பேச்சு வார்த்தைகளுக்குக் குந்தகம் ஏற்படும்படி யாரும் எதுவும் செய்யக்கூடாது என்று ஹிந்து மகா சபைத் தலைவரான டாக்டர் என். பி. கரேகடக் கேட்டுக் கொண்டிருக்கிறார். காஷ்மீரில் நடைபெற்று வரும் கிளர்ச்சியைக் காஷ்மீர் ஜனசங்கம் நிறுத்தி வைக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் யோசனை கூறியிருக்கிறார்.

லண்டனில் ஜனப் முகமது அலிக்கும் ஜவாஹர்லால்ஜிக்கும் நடந்த பூர்வாங்கப் பேச்சு வார்த்தைகள் இந்தியா – பாகிஸ்தான் எதிர்கால உறவு பற்றி மிகுந்த திருப்தியையும் நம்பிக்கையையும் உண்டாக்கி யிருப்பதாக ஜனப் முகமது அலியே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

கூடிய சீக்கிரத்தில் தாமும் ஜவாஹர்லால்ஜியும் கராச்சியில் கூடிப் பேசப் போவதாகவும் பாகிஸ்தான் பிரதம மந்திரி அறிவித்திருக்கிறார்.

இன்னும் அவர் லண்டனில் நிகழ்த்தியுள்ள பிரசங்கங்கள், பாகிஸ்தான் சமாதான வழியைப் பின்பற்ற உறுதி கொண்டிருப்பதைக் காட்டுவதாக இருக்கின்றன.

பாகிஸ்தான் சிருஷ்டிக்கப்பட்ட உடனே பாகிஸ்தான் சர்க்கார் செய்த மிகவும் ஆட்சேபகரமான காரியம் என்னவெனில், எல்லைப்புற காந்தி கான் அப்துல் கபார்கானைச் சிறைப்படுத்தியதுதான்.

இந்திய சுதந்திரப் போரின் முன்னணி வீரர்களில் ஒருவரான கான் அப்துல் கபார்கானைச் சிறைப் படுத்தியதன் மூலம் பாகிஸ்தான் சர்க்கார் தங்களுக்குப் பெரும் களங்கத்தை ஏற்படுத்திக்கொண்டு விட்டார்கள்.

பாகிஸ்தான் சர்க்காரின் மேற்படி செய்கை பாகிஸ்தானிலும் இந்தியாவிலும் மிகுந்த மனக் கொதிப்பை உண்டாக்கியது.

லண்டனில் நடந்த பாகிஸ்தான் மாணவர்கள் அடங்கிய கூட்டத்தில், அப்துல் கபார்கான் விஷயமாக ஒரு மாணவர் கேள்வி கேட்டார். அதற்கு ஜனாப் மூகமது அலி அளித்துள்ள பதில் திருப்தியளிக்கக் கூடியதாக இருக்கிறது. தாம் பதவியேற்றுச் சிறிது காலமே ஆவதால் அவ் விஷயத்தைக் கவனிக்கத் தமக்கு அவகாசம் இல்லை என்றும், கராச்சிக்குத் திரும்பிச் சென்றதும் உடனே அதைக் கவனித்து உற்ற நடவடிக்கை எடுத்துக் கொள்வதாகவும் பாகிஸ்தான் பிரதம மந்திரி வாக்கு அளித்துள்ளார்.

அருமைத் தலைவரான கான் அப்துல் கபார்கான் விடுதலை அடைந்தால், அதுவே இந்தியா – பாகிஸ்தான் சமரசப் பேச்சு வெற்றி அடைவதற்கு முதல் படியாக அமையும்.

ஆறுதல் அடையலாம்

இலங்கை இந்தியர் பிரஜா உரிமைப் பிரச்னை சம்பந்தமாக இந்தியாவின் பிரதமமந்திரி ஜவாஹர் லால்ஜிக்கும் இலங்கைப் பிரதமர் டட்லி சேனநாயகாவுக்கும் லண்டனில் நடந்த பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறவில்லை என்று பத்திரிகைச் செய்திகளிலிருந்து தெரிகிறது.

1. இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டப்படி பிரஜா உரிமை பெறுவதற்கான யோக்கியதாம்சங்கள் உள்ள நாலு லட்சம் இந்தியர்களுக்குப் பிரஜா உரிமை அளிக்க இலங்கை இணங்குகிறது.

2. இரண்டரை லட்சம் பேர்களுக்கு நிரந்தர வாச சர்டிபிகேட் அளிக்க இலங்கை தயாராக இருக்கிறது. இவர்களுக்கு வோட்டுரிமையைத் தவிர மற்ற உரிமைகள் எல்லாம் உண்டு. பத்து வருஷங்களுக்குப் பிறகு இவர்களுடைய நிலைமை மீண்டும் புனராலோசனை செய்யப்படும்.

3. மீதியுள்ள ஒன்றரை லட்சம் இந்தியத் தோட்டத் தொழிலாளர்களும் ஒரு லட்சம் இதர இந்தியர்களும் காலடைவில் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப் படுவார்கள்.—மேற்கூறிய மூன்று முக்கிய அம்சங்கள் அடங்கிய திட்டத்தை இலங்கைப் பிரதமர் வெளியிட்டாராம்.

நிரந்தர வாச சர்டிபிகேட் பெறும் இந்தியர்களின் தொகையை மூன்று லட்சமாக உயர்த்த வேண்டும் என்று ஜவாஹர்லால்ஜி கோரினாராம். அதற்கு இலங்கைப் பிரதமர் இணங்காததால், பேச்சு வார்த்தைகள் வெற்றி பெற முடியாமற் போய் விட்டனவாம்.

இவையெல்லாம் எவ்வளவு தூரம் உண்மையானவை, எவ்வளவு தூரம் ஊகிக்கப்பட்டவை என்று உறுதியாகச் சொல்ல முடியாது.

இலங்கையிலிருந்து இரகசியமாக வந்து கொண்டிருந்த செய்திகளைப் பற்றி மே மாதம் முப்பத்தொன்றும் தேதி இதழில் நாம் எழுதியிருந்தோம். "பண்டித ஜவாஹர்லால் நேரு இந்தியர்களுக்குத் துரோகம் இழைக்கும் ஒப்பந்தம் எதிலும் கையெழுத்திடமாட்டார் என்பது நமது பரிபூர்ண நம்பிக்கை" என்று அப்போது குறிப்பிட்டிருந்தோம். நமது நம்பிக்கை வீண் போகவில்லை என்பது இப்போது நிரூபணமாகி யிருக்கிறது.

இரண்டு பிரதம மந்திரிகளுக்கும் நடந்த பேச்சு உடனடியாக வெற்றிபெற வில்லை எனினும், பரஸ்பரம் நட்பும் நல்லெண்ணமும் ஏற்பட்டிருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன. எதிர்காலத்தில் இலங்கை இந்தியர் பிரச்னை திருப்திகரமாகத் தீருவதற்கு மேற்படி நட்பும் நல்லெண்ணமும் உதவியாக இருக்குமென்று இப்போதைக்கு நாம் ஆறுதல் அடையலாம்.

பிரஞ்சுக்காரர்களின் பொம்மை அல்ல

சில தினங்களுக்கு முன் இந்தோ சீனாவில் ஏற்பட்ட நெருக்கடி ஞாபகம் இருக்கலாம். வியட்மின்கள் என்று கூறப்படும் இந்தோ சீனக் கம்யூனிஸ்டுகள் மேற்படி நாட்டைச் சேர்ந்த ராஜ்யங்களில் ஒன்றான லாவோஸ் மீது படையெடுத்தார்கள். படையெடுப்பு ஆரம்பமான உடனேயே, பர்மா, சயாம், மலாயா, கம்போடியா ராஜ்யங்களைப் பேராபத்து நெருங்கி விட்டதாகப் பிரிட்டிஷ், அமெரிக்க வல்லரசுப் பிரதிநிதிகள் கூக்குரலிட்டனர். இந்தோ சீனாவில் உள்ள பிரஞ்சுத் துருப்புகளுக்கு அமெரிக்காவின் தீவிர உதவி கிடைத்தாலன்றி அந்த நாடுகள் கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்துக்கு உட்பட்டுவிடும் என்று கூறப்பட்டது. இறுதியில் மேற்படி நெருக்கடி பிசு பிசுவென்று புகைந்து விட்டது.

இந்தோ சீனாவில் உள்ள மற்றொரு ராஜ்யமான கம்போடியாவில் இப்போது மற்றொரு விதமான நெருக்கடி உண்டாகியிருக்கிறது. இந்த நெருக்கடிக்கு இந்தோ சீனக் கம்யூனிஸ்டுகள் மீது யாரும் குறை கூற முடியாது. இந்தோ சீனாவுக்குப் பாதுகாப்பு அளிப்பதாகக் கூறும் பிரஞ்சுக்காரர்களே மேற்படி நெருக்கடிக்குக் காரணம்.

பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தைச் சகிக்க முடியாமல் கம்போடியா மன்னர் நரோதம் ஸிஹனூக் ராஜ்யாதிகாரத்தைப் பிரதம மந்திரியிடம் ஒப்படைத்து விட்டு, அடுத்துள்ள சயாம் நாட்டில் அடைக்கலம் புகுந்துள்ளார்.

"கம்போடியாவுக்குச் சுயாட்சி அளிப்பதாகப் பிரஞ்சுக்காரர்கள் வாயளவில் கூறிக் கொண்டு காலம் கடத்தி வருகிறார்கள்; பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் இந்தியா எத்தகைய ஸ்தானத்தை வகிக்கின்றதோ, அது போன்ற ஸ்தானத்தைக் கம்போடியா பிரஞ்சு யூனியனில் வகிக்க விரும்புகிறது" என்று கம்போடியா மன்னர் கூறியிருக்கிறார்.

இந்தோ சீனாவில் பல ராஜ்யங்களாகப் பிரிந்து கிடக்கும் பிரதேசங்களின் மன்னர்களைப் பொம்மைகளாக வைத்துக் கொண்டு பிரஞ்சுக்காரர்கள் அந்த நாட்டை ஆட்சி புரிந்து வருகிறார்கள் என்று இந்தோ சீனாவில் உள்ள வியட்மின் கட்சியினர் கூறுகின்றனர்.

கம்போடியா மன்னர் சயாமில் அடைக்கலம் புகுந்ததன் மூலம், தாம் பிரஞ்சுக்காரர்களின் பொம்மை அல்ல என்பதை உலகம் அறியக் காட்டியிருக்கிறார்; தமது ராஜ்யம் சுதந்திரத்தை இழந்து பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தின் கீழ் அல்லல் பட்டு வருகிறது என்பதை உலக நாடுகளுக்குப் பிரகடனம் செய்திருக்கிறார்.

இந்தோ சீனாவில் மூன்னூறு ஆண்டுகளாக வேரூன்றியிருந்த பிரஞ்சு சாம்ராஜ்யம் மறையும் காலம் நெருங்கி விட்டது என்பதையே கம்போடியாவில் ஏற்பட்டுள்ள நெருக்கடி காட்டுகிறது.

$3\frac{1}{2}$ %
வரியில்லாத
வட்டி
வருஷாவருஷம்
உங்களுக்குக்
கிடைக்கும்

10 வருஷ
டிரெஷரி
சேமிப்பு
டிபாஸிட்டுகள்

பத்திரங்கள்

100 ரூபாய் பெருக்கத்தில் வழங்கப்படும்

முதலீட்டு எல்லை	எங்கே வழங்கப்படுகின்றன
ரூ. தனி நபர் 25,000 இருவர் சேர்ந்து 50,000 ஸ்தாபனங்கள் 50,000 தர்ம ஸ்தாபனங்கள் 1,00,000 மைனர் குழந்தையின் பேரில் தகப்பனாரோ, தாயாரோ டிபாஸிட் செய்யும்போது, கார்டியன் சர்டிபிகேட்டு தேவையில்லை.	(i) கல்கத்தா, பம்பாய், மதராஸ், டெல்லியில் உள்ள இந்திய ரிசர்வ் பாங்கி ஆபீஸ்களிலும் மற்ற இடங்களில் சர்க்கார் டிரெஷரி அலுவல்களைக் கவனிக்கும் இந்திய இம்பீரியல் பாங்கி கிளை ஆபீஸ்களிலும். (ii) டிரெஷரி அலுவல்களைக் கவனிக்காத இந்திய இம்பீரியல் பாங்கி உள்ள "A" பாகத்திய ராஜ்யங்களில் உள்ள எல்லா ஜில்லா டிரெஷரிகளிலும். (iii) "A" பாகத்திய ராஜ்யங்களில் உள்ள எல்லா சப்-டிரெஷரிகளிலும். (iv) புஜ் (கட்ஜ்), இம்பால் (மணிப்புரி), குடகு - மர்க்காரா (குடகு) இவ்விடங்களில் உள்ள டிரெஷரிகளிலும்.

டிபாஸிட்டுகள் ஒரு வருஷத்திற்குப் பிறகு எப்போது வேண்டுமானாலும் வட்டியில் கொஞ்சம் தள்ளுபடியாகத் திருப்பிப் பெற்றுக்கொள்ளக்கூடியவை. வட்டியில் தள்ளுபடியே தவிர முதலீடு அப்படியே இருக்கிறது.

மேற்கொண்டு செய்திகளுக்காகவும் அல்லது இந்த முதலீட்டைக் குறித்த விதிகளுக்காகவும், "கார்ட்டன் காஸில்", சிம்லா-3 என்னும் விலாசத்திலுள்ள நாஷனல் ஸேவிங்ஸ் கமிஷனருக்காவது, அல்லது உங்கள் ராஜ்யத்தின் ரீஜினல் நாஷனல் ஸேவிங்ஸ் ஆபீசருக்காவது தயவு செய்து எழுதிக் கேளுங்கள்.

AC. 437 - TM.



அத்தியாயம் 23

படைகள் வந்தன!

தஞ்சைமா நகரம் அன்று முழுதும் ஒரே அல்லோல கல்லோலப் பட்டுக் கொண்டிருந்தது. புயலையும் மழையையும் அவற்றினால் நேர்ந்த சேதங்களையும் மக்கள் அடியோடு மறந்து விட்டார்கள். "ஈழங் கொண்ட வீராதி வீரரும் சோழ நாட்டு மக்களின் இதயங்கொண்ட இளவரசருமான பொன்னியின் செல்வர் நாகைப்பட்டினத்தில் புயல் அடித்த அன்று வெளிப்பட்டு விட்டார்; பின்னர் தஞ்சையை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்; அவரைச் சிங்காதனத்தில் ஏற்றி வைத்துச் சக்கரவர்த்தியாக முடிசூட்டும் நோக்கத்துடன் பெருந் திரளான மக்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள்" என்னும் செய்திகள் முதலில் வதந்திகளாகக் காற்று வாக்கில் வந்தன. பின்னர், நேரில் இளவரசரை நாகைப் பட்டினத்தில் பார்த்தவர்களே வந்து சொன்னார்கள். இந்தச் செய்தி காரணமாக, இரண்டு தினங்களுக்கு முன் வெளியிலே அடித்த புயலைப் போலவே தஞ்சை நகர மாந்தரின் உள்ளத்தில் உத்வேகப் புயல் அடிக்கத் தொடங்கியது. தஞ்சை நகரம் என்றும் கண்டறியாத அளவில் இளவரசருக்குச் சிறப்பான வரவேற்பு அளிக்க வேண்டும் என்று மக்கள் தீர்மானம் செய்தார்கள். கோட்டைக்கு வெளியிலேயிருந்த புறநகரத்தின் வீதிகளை அலங்கரிக்கத் தொடங்கினார்கள். கூட்டங் கூட்டமாகத் தெருக்களிலே நின்று பேசலானார்கள். மேள தாளங்கள், தாரை தப்பட்டைகள் முதலிய வாத்தியங்கள் சேகரிக்கப்பட்டன. ஆடல் பாடல்களில் தேர்ந்தவர்கள் இந்த விசேஷ சந்தர்ப்பத்தில் தங்கள் ஆற்றல்களை யெல்லாம் காட்டி விடுவது என்று எண்ணி ஆயத்தம் செய்யலானார்கள். மாதர்களும் இளஞ்சிறார்களும் தங்களை அலங்கரித்துக் கொள்ளும் விதங்களைப் பற்றிச் சிந்தித்தார்கள். மற்றும் பல அவசரக்காரர்கள் இளவரசரை வரவேற்பதில் தாங்கள் முந்திக் கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன், தஞ்சையிலிருந்து நாலா திசைகளிலும் சென்ற சாலைகளில் கொஞ்ச தூரம் முன்னதாகச் சென்று காத்திருக்கத் தொடங்கினார்கள். அப்படி முன்னதாகப் புறப்பட்டவர்களை வேறு சிலர் பார்த்துப் பரிகசித்தார்கள்.

புறநகரம் இந்தப் பாடு பட்டதென்றால், கோட்டைக்குள்ளேயும் ஏதோ

முக்கியமான சம்பவங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன என்பதற்கு விரைவிலேயே அறிகுறிகள் தென்பட்டன.

காலையில் வழக்கம்போல் கோட்டை வாசல் திறந்தது. கறிகாய், தயிர், மோர் விற்பவர்களும் அரண்மனைகளில் அலுவல்களுக்குச் செல்வோரும் வழக்கம் போல் கோட்டைக்குள் சென்று கொண்டிருந்தார்கள். புயல்-மழையினால் ஏற்பட்ட சேதங்களைப் பற்றி முறையிட்டுக் கொள்ள விரும்பியவர்கள் இன்று ஒரு சிலர்தான் வந்தார்கள். அவர்களும் கோட்டைக்குள் சென்றார்கள். வழக்கம்போல வேளைக்காரப் படையும் கோட்டைக்குள் பிரவேசித்தது.

பின்னர், கோட்டை வாசற் கதவுகள் எல்லாம் சட சடவென்று சாத்தப்பட்டன. பெரிய பெரிய இரும்புத் தாள்களைக் கொண்டு கதவுகளை இறுக்கும் சத்தமும் பூட்டுக்களை மாட்டிப் பூட்டும் சத்தமும் கேட்கத் தொடங்கின. பிற்பாடு வந்தவர்கள் காவலர்களால் தடுத்து நிறுத்தப் பட்டார்கள். முற்பகல் நேரத்தில் இம்மாதிரி கோட்டைக் கதவுகளைச் சாத்தித் தாளிடும் காரணம் என்னவென்று ஜனங்கள் பேச ஆரம்பித்த சமயத்தில் இன்னொரு அதிசயம் நடந்தது. கோட்டையைச் சுற்றியிருந்த அகழியைக் கடப்பதற்கு ஏற்பட்ட பாலமும் தூக்கப்பட்டது. அதற்குப் பிறகு யாரும் கோட்டை வாசலை நெருங்குவதற்கே முடியாமல் போய் விட்டது.

கோட்டையின் பிரதான வாசலாகிய வடக்கு வாசலுக்குச் சமீபமாக இருந்தவர்கள் மேற்கு வாசலையும் தெற்கு வாசலையும் பற்றி விசாரித்தார்கள். அந்த வாசல்களும் வடக்கு வாசலைப் போலவே சாத்திப் பூட்டப்பட்டன என்றும், பாலங்கள் தூக்கிவிடப்பட்டன என்றும் அறிந்ததும் மிக்க வியப்படைந்தார்கள்.

“இது என்ன? யுத்தம் ஒன்றும் நடக்கவில்லையே? பகைவர்களின் சைன்யங்கள் படை எடுத்து வருவதாகத் தெரியவில்லையே? அப்படிப் படையெடுத்து வருவதற்கு ஆற்றல் வாய்ந்த பகைவர்கள் வடக்கே, தெற்கே, மேற்கே, கிழக்கே,— எங்கும் சமீபப் பிரதேசத்தில் இல்லையே? அப்படி ஒருவேளை வடக்கே இரட்டை மண்டலத்திலிருந்து பகைவர்கள் திடீர்ப் பாய்ச்சலில் வந்து விடுவதாக இருந்தாலும் கொள்ளிடத்தையும் காவேரியையும் மற்றுமுள்ள நதிகளையும் தாண்டி இப்போது எப்படி வர முடியும்? அந்த மாநதிகளில் வெள்ளம் பூரணப் பிரவாகமாக அல்லவா போய்க் கொண்டிருக்கிறது?”— இவ்விதமெல்லாம் தஞ்சைக் கோட்டையின் புற நகரத்தில் வசித்த ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். ஒருவேளை பொன்னியின் செல்வரைக் கோட்டைக்குள் பிரவேசியாமல் தடுப்பதற்காகவே இந்த ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்படுகின்றனவோ என்று சிலர் கேள்விகளைப் போட்டுக் கொண்டு, “அப்படித்தான் இருக்க வேண்டும்” என்று மறுமொழி கூறிக் கொண்டார்கள். இந்த வதந்தி பரவப் பரவ, நகர மாந்தரின் உத்வேகம் அதிகமாயிற்று. “விஜயாலய சோழரின் வம்சத்தில் வழி வழியாக வந்த இளவரசரைக் கோட்டைக்குள்ளே வராமல் தடுப்பதற்கு இந்தப் பழுவேட்டரையர்கள் யார்? அப்படிப் பழுவேட்டரையர்கள் உண்மையில் முயல்வதாயிருந்தால், கோட்டை மதில்களையே இடித்துத் தகர்த்துவிட வேண்டியதுதான்!” என்னும் தோரணையில் பேசுவோரும் இருந்தனர்.

வதந்தி என்னும் மாயா பூதம் எப்படிக் கிளம்புகின்றது, எப்படி அவ்வளவு விரைவில் பிரயாணம் செய்கின்றது என்று யாராலும் கண்டு பிடிக்க முடியாத மர்மமான காரியந்தான். திடீரென்று இன்னொரு பயங்கரமான வதந்தி மக்களிடையே பரவத் தொடங்கியது. வெகு காலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த சுந்தர சோழ சக்கரவர்த்தியின் மரணம் நேர்ந்து விட்டது என்பதுதான் அவ் வதந்தி. “சக்கரவர்த்தி காலமாகி விட்டாராமே? அது உண்மையா?” என்று முதலில் கேட்டார்கள். அன்று அதி காலையில் வால் நட்சத்திரம் ஒரு நிமிடம் ஜோதி மயமாக ஒளி விசிவிட்டுப் பூமியை நோக்கி விழுந்து மறைந்ததைப் பார்த்தவர்கள் சிலர், அதையே அத்தாட்சியாகக் கொண்டு சுந்தர சோழர் காலமானதை ஊர்ஜிதம் செய்தார்கள். “இது உண்மையாயின், மேலே என்ன நடக்கப் போகிறது?” என்பது பற்றிக் கவலையுடன் விவாதிக்கப் பட்டதும் இயல்பே யல்லவா? இராஜ்ய உரிமை சம்பந்தமாகத் தகராறுகள் ஏற்படுமா? சிற்றரசர்கள் இரு கட்சியாகப் பிரிந்து நின்று சண்டை யிடுவார்களா? இத்தகைய உள்நாட்டுச் சச்சரவுகள் காரணமாகச் சோழ சாம்ராஜ்யமே சின்னாபின்னமாகிவிடுமா? நூறு ஆண்டுக

ளாகத் தழைத்து ஓங்கி வளர்ந்து வந்த சாம்ராஜ்யத்தில் மீண்டும் பகைவர்களின் படைகள் உட்புகுமா?

இவ்விதமெல்லாம் ஜனங்கள் பேசிக் கொண்டிருக்கும் போதே "அதோ படை வருகிறது!" என்ற கூக்குரல் ஒன்று எழுந்தது. பலரும் அங்குமிங்கும் ஓடிச் சென்று பார்த்தார்கள். உயர்ந்த கட்டிடங்களின் மீதும் உயரமான மரங்களின் மீதும் ஏறிப் பார்த்தார்கள். அவ்வாறு பார்த்தவர்கள் கண்ட காட்சி ஒரேயடியாக வியப்பையும், திகைப்பையும் அளிப்பதாக இருந்தது.

தஞ்சையிலிருந்து மேற்கேயும் தென் மேற்குத் திசையிலேயும் புறப்பட்டுச் சென்ற மூன்று பெரிய சாலைகள் அக்காலத்தில் இருந்தன. ஒன்று கொடும்பாளூர் வழியாக இராமேசுவரம் போகும் சாலை; மற்றொன்று மதுரை வழியாகத் தென் பாண்டிய நாட்டுக்குச் சென்ற சாலை; இன்னொன்று உறையூர் வழியாகக் கருருக்கும் சேர நாட்டுக்கும் சென்ற நீண்டு அகன்ற சாலை.

அன்று பிற்பகலில் மேற்கூறிய மூன்று சாலைகள் வழியாகவும் படைகள் அணி வகுத்து வந்து கொண்டிருந்தன. அவற்றில் முன்னால் வந்த அணிகள் கண்ணுக்குத் தெரிந்தனவே தவிர, பின்னால் அந்த அணி வரிசைகள் எங்கே முடிகின்றன என்பதே தெரியவில்லை. அவ்வாறு அப்படை வீரர்களின் அணிகள் பின்னால் பின்னால் பின்னால் தொடர்ந்து வந்து கொண்டே யிருந்தன.

நல்ல வேளையாக, அப் படைகளின் முன்னணியில் பெரிய புலிக் கொடிகள் பறந்து கொண்டிருந்தபடியால் பகைவர்களின் படைகள் என்று சந்தேகிக்க இடம் ஏற்படவில்லை. சோழ சாம்ராஜ்யத்துச் சைன்யங்கள் தான் அவை! ஆனால் எதற்காக வருகின்றன? எங்கிருந்து வருகின்றன?

இன்னும் சற்றருகில் அப்படைகள் நெருங்கி வந்தபோது, புலி உருவம் தாங்கிய கொடிகளில் சிறிய அளவில் பதித்திருந்த இலச்சினைகளும் கண்ணில் பட்டன. அவற்றிலிருந்து, கொடும்பாளூர் தலைமைக்கு உட்பட்ட பராந்தக சோழப் பெரும் படையும், தென் பாண்டிய நாட்டிலிருந்த தெரிந்த கைக்கோளர் பெரும் படையும், ஈழத்துப் போரில் ஈடுபட்டிருந்த அரிஞ்சய சோழப் பெரும் படையும் சேர்ந்து வந்து கொண்டிருந்தன வென்று தெரியவந்தது. இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம், தென் திசைச் சேனாதிபதியான பூதி விக்கிரம கேசரியே மேற் கூறிய படைகளுடன் வந்து கொண்டிருக்கிறார் என்பது தஞ்சை நகர மாந்தர்களுக்குத் தெரிந்து போய் விட்டது. இதிலிருந்து, சைன்யங்கள் எதற்காக வருகின்றன என்பதை ஊகித்து உணர்வதும் எளிதாயிற்று. கொடும்பாளூர்ப் பெரிய வேளாரான பூதி விக்கிரம கேசரி, ஈழத்துப் பட்ட சிறிய வேளாரின் திருமகளாகிய வானதியைப் பொன்னியின் செல்வருக்கு மணம் புரிந்து கொடுத்து, அவரையே சோழ நாட்டுச் சிம்மாதனத்தில் ஏற்றி வைக்க விரும்புகிறார் என்பது சோழ நாட்டில் எல்லாருக்கும் தெரிந்திருந்த செய்தியே யாகும். கிழக்கேயிருந்து இளவரசர் அருள்மொழி வர்மர் பொது ஜனங்களின் ஆரவாரத்துடன் அழைத்து வரப் படுவதும், மேற்கேயிருந்து சேனாதிபதி பூதி விக்கிரம கேசரி மாபெரும் சைன்யத்துடன் அதே சமயத்தில் தஞ்சையை நோக்கி வருவதும் ஒன்றுக்கொன்று பொருத்தமா யிருந்தன.

பழுவேட்டரையர்களும் அவர்களுடன் தோழமை பூண்ட சிற்றரசர்களும் மதுராந்தகருக்குப் பட்டம் சூட்டப் பிரயத்தனம் செய்கிறார்கள் என்பதை ஏற்கெனவே மக்கள் அறிந்திருந்தார்கள்.

ஆதலின் அவர்களுடைய அன்புக்கு உகந்த அருள்மொழிச் செல்வரைச் சிங்காதனம் ஏற்றுவதற்காகவே கொடும்பாளூர்ப் பூதிவிக்கிரம கேசரி தமக்கு உட்பட்ட மாபெரும் தென்திசைப் படைகளுடன் வருகிறார் என்று தஞ்சை நகர மக்கள் ஊகித்துக் கொண்டார்கள். இதனால் அவர்களுடைய உற்சாகம் மேலும் கரைபுரண்டு ஓடத் தொடங்கியது. சமுத்திரம் போல் பொங்கிவந்த படை வீரர்கள் அனைவரையும் வரவேற்று உபசரிக்கவும் விருந்து அளிக்கவும் அவர்கள் சித்தமானார்கள்.

தஞ்சை நகரில் அக்காலத்தில் பல பெரிய வர்த்தகக் குழுவினர் நடத்திய சத்திரங்கள் இருந்தன. கொடும்பாளூர் மணிக் கிராமத்தார், திருப்புறம்பயம் வலஞ்சியர், உறையூர்த் தர்ம வணிகர், நானு தேசத் திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர் ஆகிய வர்த்தகக் குழுவினர் நடத்திய சத்திரங்களில் அன்று பிற்பகலிலிருந்தே ஆயிரக் கணக்கானவர்களுக்கு

உணவு அளிக்க ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன.

இதை அறிந்ததும் நகர மாந்தர்களின் உல்லாசம் அதிகமாகி விட்டது. அங்குமிங்கும் திரிவதும் கூடிக் கூடிப் பேசுவதுமாக இருந்தார்கள். அவர்களில் நூற்றுக்கு நூறு பேரும் அருள்மொழி வர்மரின் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருந்தபடியால், வரப்போகும் சம்பவங்களைப் பற்றிப் பேசுவதில் ஒளிவு மறைவு ஒன்றும் அவசியமாகக் கருதவில்லை. படை வீரர்கள் தஞ்சையை அணுகி வந்து ஆங்காங்கே கூடாரம் அடித்து முகாம் போடத் தொடங்கியதும், நகர மாந்தர்கள் அந்த முகாம்களுக்கே சென்று வீரர்களுடன் சல்லாபம் செய்யத் தொடங்கி விட்டார்கள்.

சூரியன் மறைந்து நன்றாக இருட்டுவதற்குள்ளே தஞ்சை நகரின் மூன்று பக்கங்களையும் சேனை வீரர்கள் சூழ்ந்து கொண்டு விட்டார்கள். நாலாவது பக்கத்தில் வடவாறு தஞ்சைக் கோட்டையை யொட்டிச் சென்றபடியாலும், வடவாற்றில் பெரு வெள்ளம் போய்க் கொண்டிருந்த படியாலும், அந்தப் பக்கம் வீரர்கள் போவதற்கு வசதியாக இல்லை. அதற்கு அவசியமுமில்லை யென்று கருதி விட்டு விட்டார்கள்.

தஞ்சைக் கோட்டையின் பிரதான வடக்கு வாசலை முன்னம் நாம் பார்த்திருக்கிறோம் அல்லவா? முதன் முதலாக, நந்தினி தேவியைத் தொடர்ந்து வந்தியத்தேவன் கோட்டைக்குள் பிரவேசித்த வாசல் அதுவன்றோ? அந்தக் கோட்டை வாசல் கண்ணுக்குத் தெரியும்படியான இடத்தில் சேநாதிபதி பூதி விக்கிரம கேசரியின் ஜாகை அமைக்கப்பட்டது.

இருட்டி ஒரு ஜாமம் ஆனபிறகு சேநாதிபதி கோட்டையைச் சுற்றிப் பார்த்து விட்டுத் தமது ஜாகைக்கு வந்து சேர்ந்தார். அவருக்கு முன்னாலேயே அங்கே ஏறக்குறைய நூறுபேர் வந்து சேர்ந்திருந்தார்கள். அவர்களில் வேளிர் படைத் தலைவர்களும், கைக்கோளர் படைத்தலைவர்களும், பாண்டிய மண்டலத்தின் தலைவர்களும், கொங்கு நாட்டுத் தலைவர்களும் இருந்தார்கள். ஈழ நாட்டுப் போரில் வெற்றி கண்ட சோழர் படைத் தலைவர்களும் பலர் இருந்தார்கள். இவர்களைத் தவிர பற்பல வர்த்தகர் மகா சபைகளின் தலைவர்கள் இருந்தார்கள். முக்கியமாக, 'நானாதேசத் திசை ஆயிரத்து ஐந்நூற்றுவர்' என்று உலகமெல்லாம் புகழ் பெற்ற வர்த்தக மண்டலத்தின் தலைவர்கள் வந்திருந்தார்கள். இவர்கள் அயல் நாடுகளுடன் கப்பல் வாணிகம் செய்யும் பெரும் தனவந்தர்கள். வர்த்தகப் பொருள்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களைக் காவல் புரிவதற்காகத் தாங்களே யுத்தக் கப்பல்களை அனுப்பக் கூடிய வசதி வாய்ந்தவர்கள். இவர்களைத் தவிர. தஞ்சாவூர் நகரத்தைச் சேர்ந்த ஐம்பெருங் குழுவினரும் எண்பேர் ஆயத்தின் தலைவர்களும் அழைக்கப்பட்டு அந்தக் கூடாரத்தில் வந்து கூடியிருந்தார்கள்.

அத்தியாயம் 24

மந்திராலோசனை

ஆரம்பத்தில் வழக்கமான யோக க்ஷேம விசாரணைக்குப் பிறகு கொடும்பாளூர்ப் பெரிய வேளார் அங்கே கூடியிருந்தவர்களைப் பார்த்துக் கூறலுற்றார்:—

"நான் யார் யாருக்குத் தூது அனுப்பினேனோ, அவர்களில் ஏறக்குறைய எல்லாரும் வந்து இங்கே கூடியிருக்கிறீர்கள். திருக்கோவலூர் முதுகிழவரான மலையமான் அரசர் மட்டும் வரவில்லை. அவர் வர முடியாததற்குத் தக்க காரணம் இருக்கும் என்றே நினைக்கிறேன். மிகவும் அபாயகரமான காரியம் என்று பலரும் கருதக்கூடிய காரியத்தைப் பற்றி யோசிக்க நாம் இங்கே வந்திருக்கிறோம். சோழ குலத்தாரிடமும் சுந்தர சோழ சக்கரவர்த்தியிடமும் நாம் எல்லாரும் எவ்வளவு பக்தி கொண்டவர்கள் என்பது உலகம் அறிந்தது. அதை எவ்வளவோ தடவை எவ்வளவோ காரியங்களில் நிரூபித்திருக்கிறோம். ஆனாலும் நாம் சக்கரவர்த்தியின் விருப்பத்துக்கு விரோதமாக இங்கே கூடியிருக்கிறோம் என்று நம் எதிரிகள் குற்றம் சாட்டக் கூடும். சக்கரவர்த்தியை எதிர்த்து யுத்தம் செய்யப் படை திரட்டி வந்திருக்கிறோம் என்று கூட அவர்கள் சொல்லலாம். ஆனால் சக்கரவர்த்தியின் விருப்பம் இன்னதென்பதை நாம் நேர்முகமாகத் தெரிந்து கொள்வதற்குச் சில

காலமாக வசதி கிடைக்கவில்லை. சக்கரவர்த்தியை நாம் தனிப்படப் பார்க்க முடிகிறதில்லை. அவருடைய அந்தரங்க விருப்பத்தை அறிய ஒரு நிமிஷங்கூட அவரிடம் தனித்துப் பேச முடிவதில்லை. ஏன் என்பது எல்லாருக்கும் தெரிந்ததே. சக்கரவர்த்தியின் தேக சுகத்தை உத்தேசித்து அவரைத் தஞ்சைக் கோட்டையில் வைத்திருப்பதாகச் சொல்லப்படுகிறது. உண்மையில் பழுவேட்டரையர்கள் அவரைச் சிறைப்படுத்தி வைத்திருக்கிறார்கள் என்றே எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் எல்லாரும் என்ன கருதுகிறீர்களோ, தெரியவில்லை..."

சேனாதிபதி இந்த இடத்தில் சிறிது நின்றதும், "ஆம், ஆம்". "அதுதான் உண்மை!" "சக்கரவர்த்தியைச் சிறையில்தான் வைத்திருக்கிறார்கள்" என்று அக் கூட்டத்தில் பல குரல்கள் எழுந்தன.

"உங்கள் ஆமோதிப்பிலிருந்து நாம் எல்லோரும் ஒத்த உணர்ச்சியும் ஒரே நோக்கமும் கொண்டவர்கள் என்று ஏற்படுகிறது. விஜயாலய சோழர் காலத்திலிருந்து எத்தனையோ ஆயிரமாயிரம் வீரர்கள் தங்கள் இன்னுயிரைப் போர்க்களத்தில் பலிகொடுத்து இந்தச் சோழ சாம்ராஜ்யம் இந்த மகோந்நத நிலைக்கு வந்திருக்கிறது. சோழ நாட்டைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளவே நமக்கெல்லாம் பெருமையாயிருக்கிறது. அப்படிப்பட்ட சோழ குலத்துக்கும் சாம்ராஜ்யத்துக்கும் எவ்விதக் குறைவும் ஏற்படாமல் பாது காப்பதற்கே நாம் இங்கே கூடியிருக்கிறோம். சக்கரவர்த்திக்கு எதிராகச் சதி செய்வதற்கு அல்ல. சக்கரவர்த்தியின் எதிரிகள் அவரை மூன்று வருஷ காலமாகச் சிறையில் அடைத்து வைத்திருக்கிறார்கள். அவருக்கு உடல் நிலை சரியாக இல்லை என்று காரணம் சொல்கிறார்கள். தொண்ணூறும் ஆறும் புண் சுமந்த திருமேனியரான விஜயாலய சோழர், எண்பதாவது பிராயத்தில் திருப்புறம்பயம் போர்க்களத்தில் வந்து இரண்டு கைகளிலும் இரண்டு கத்திகளை ஏந்திச் சக்ராகாரமாகச் சுழற்றி அவர் புகுந்து சென்ற விடமெல்லாம் எதிரிகளின் தலைகளை மலை மலையாகக் குவித்தார்! அத்தகைய வீரர் வம்சத்தில் பிறந்த சுந்தர சோழர் தேக அசௌக்யத்தைக் காரணமாகச் சொல்லிக் கொண்டு வெளியில் வரவே மறுக்கிறார் என்றால், அது நம்பக்கூடிய காரியமா? சக்கரவர்த்தியைச் சிறை வைத்திருக்கும் துரோக சிந்தனையாளர், பில்லி சூனிய மாய மந்திர வித்தைகளைக் கொண்டு அவருக்குச் சித்தக் குழப்பத்தையும் உண்டாக்கி விட்டார்கள் என்று தோன்றுகிறது. சக்கரவர்த்தியின் சித்தம் சரியான நிலையில் இருந்தால், தமக்குப் பீமார்ஜுனர்களைப் போன்ற இரண்டு வீராதி வீரப் புதல்வர்கள் இருக்கும் போது, போர்க்களத்தையே கண்ணால் கண்டறியாத மதுராந்தகனுக்குப் பட்டம் கட்ட விரும்புவாரா?......"

இப்போது பலர் ஒரே சமயத்தில் "சக்கரவர்த்தியின் விருப்பம் அது வென்று நமக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டார்கள்.

"நமக்கு நேர்முகமாகத் தெரியாது தான். பழுவேட்டரையர்கள் கட்டிவிட்ட கதையாக இருக்கலாம். ஆனால் நம் முதன் மந்திரி அநிருத்தப் பிரம்மராயர் கூட அதை நம்புகிறார்......"

"அநிருத்தரும் அவர்களோடு சேர்ந்திருக்கலாம்; யார் கண்டது?" என்றார் கூட்டத்தில் ஒருவர்.

"அப்படியும் இருக்கலாம். அதன் உண்மையை அறிந்து கொள்வது நாம் இங்கே கூடியிருப்பதன் ஒரு முக்கிய நோக்கம். இன்றைய தினம் இத்தஞ்சை மாநகரில் உலாவிவரும் வதந்தியை நீங்களும் அறிந்திருப்பீர்கள். நான் அதை நம்பவில்லை. சக்கரவர்த்தியை உயிரோடு தரிசிக்கும் பாக்கியம் நமக்கெல்லாம் கிடைக்கும் என்றே நம்பி யிருக்கிறேன். அப்படி அவரைத் தரிசிக்கும் போது பட்டத்தைப் பற்றி அவருடைய விருப்பம் என்னவென்பதை நேரில் கேட்டுத் தெரிந்து கொள்வோம். ஒருவேளை சக்கரவர்த்தியே மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டும் விருப்பத்தைத் தெரிவித்தார் என்றால், அதை நீங்கள் எல்லாரும் ஒப்புக் கொள்வீர்களா?......"

"மாட்டோம்! மாட்டோம்!" என்ற பெருங் கோஷம் எழுந்தது.


"நானும் ஒப்புக்கொள்ள மாட்டேன். ஏனென்றால், சக்கரவர்த்தி தெளிவுள்ள சித்தமுடையவரா யிருந்தால் அவ்விதம் ஒருநாளும் தெரிவிக்க மாட்டார். பராந்தகச் சக்கரவர்த்தியின் காலத்திலேயே பட்டத்து உரிமை பற்றி விஷயம் தீர்ந்து முடிவாகி விட்டது. சுந்தர சோழரும் அவருடைய சந்ததிகளுமே தஞ்சைச் சிங்காதனம் ஏற வேண்டும் என்று அந்த மன்னர் உயிர்விடும் தறு

வாயில் கூறியதை நானே என் செவிகளினால் கேட்டேன். கேட்டவர்கள் இன்னும் பலரும் இங்கே இருப்பார்கள். காலஞ் சென்ற மகானாகிய கண்டராதித்தர் தம் குமாரனுக்கு இராஜ்யம் ஆளும் ஆசையே உண்டாகாத விதத்தில் அவனை வளர்க்க முயன்றார். அவருடைய தர்மபத்தினியாகிய பெரிய பிராட்டியார்,—சிவபக்தியே உருக் கொண்டவரான செம்பியன் மாதேவடிகள், — மதுராந்தகனுக்குப் பட்டம் கட்டக்கூடாதென்பதில் பிடிவாதமாயிருப்பதை நாம் எல்லாரும் அறிந்திருக்கிறோம். இதற்கெல்லாம் ஏதோ ஒரு முக்கிய காரணம் இருக்கத்தான் வேண்டும். அப்படியிருக்கும்போது, சுந்தர சோழர் ஏன் மதுராந்தகனுக்குப் பட்டம் கட்ட ஆசைப்படுகிறார்? அவர் சித்தம் சரியாயில்லை என்பதற்கு இன்னும் ஓர் உதாரணமும் கூறுகிறேன். வீர பாண்டியனைக் கொன்று பாண்டிய சைன்யத்தை நிர்மூலம் செய்த பிறகு, பாண்டியனுக்கு உதவிசெய்ய முன்வந்த ஈழத்து அரசனைத் தண்டிப்பதற்காக என் சகோதரன் படை எடுத்துச் சென்றான். அவனுக்கு உதவியாகப் போதிய சைன்யங்களையும் தளவாடங்களையும் அனுப்பத் தவறி விட்டோம். அதனால் அவன் போர்க் களத்தில் வீர மரணம் எய்த நேர்ந்தது. சோழ நாட்டின் வீரப் புகழுக்கு நேர்ந்த அந்தக் களங்கத்தைத் துடைத்துக் கொள்ளும் பொருட்டு நானும் பொன்னியின் செல்வரும் சென்றோம். ஈழத்துப் படைகளை நிர்மூலமாக்கினோம். அநுராதபுரத்தைக் கைப்பற்றினோம். மகிந்தனை மலை நாட்டுக்குள் ஓடி ஒளிந்து கொள்ளச் செய்தோம். தனாதிகாரி பழுவேட்டரையர் எங்களுடன் ஒத்துழைக்கவில்லையென்பது உங்களுக்கெல்லாம் தெரியும். உங்களில் இங்கே வந்திருக்கும் வர்த்தக மகாஜனத் தலைவர்கள் உணவுப் பொருள்களை அனுப்பிப் பேருதவி செய்தீர்கள். ஆனாலும் நம் வீரர்கள் எவ்வளவோ கஷ்டங்களை அநுபவிக்கும்படி நேர்ந்தது. அவ்வளவையும் அவர்கள் பொறுத்துக் கொண்டு மகிந்தன் படைகளை நிர்மூலமாக்கியது எதனால்? சோழ குலத்து மா வீரர்களுக்குள்ளே ஈடில்லா மா வீரராகிய பொன்னியின் செல்வர் அளித்த உற்சாகத்தினாலேதான்! அப்படிப்பட்ட வீரப் புதல்வனுக்குத் தந்தையாகிய சக்கரவர்த்தி அளித்த பரிசு என்ன? இராஜத் துரோகம் செய்து விட்டதாக அபாண்டம் சுமத்தி இளவரசரைச் சிறைப்படுத்திக் கொண்டு வரும்படி கட்டளையிட்டதுதான்! சித்த சுவாதீனம் உடைய ஒருவர் இவ்வாறு கட்டளை பிறப்பித்திருக்க முடியுமா?......"

"சேநாதிபதி! மறுபடியும் சக்கரவர்த்தியின் கட்டளையைப் பற்றியே பேசுகிறீர்கள். சக்கரவர்த்திதான் அக்கட்டளையை அனுப்பினார் என்பதற்கு என்ன அத்தாட்சி?" என்று சபையிலிருந்தவர்களில் ஒருவர் கேட்டார்.

"அதற்கு அத்தாட்சி ஒன்றுமில்லை. அதன் உண்மையைப் பற்றி நேரில் கேட்டுத் தெரிந்து கொள்ள விரும்பியுந்தான் இங்கே நாம் வந்து சேர்ந்திருக்கிறோம். சக்கரவர்த்தியின் சம்மதமின்றி இத்தகைய கட்டளை பிறந்திருக்கக் கூடுமானால், இந்தச் சோழ சாம்ராஜ்யம் எவ்வளவு பயங்கரமான நிலைமையில் இருக்கிறது என்பதைச் சிந்தித்துப் பாருங்கள். பின்னால் நிகழ்ந்தவற்றையும் எண்ணிப் பாருங்கள். சிறைப் படுத்த வந்த வீரர்கள் இளவரசரைச் சிறைப்படுத்த மறுத்து விட்டார்கள். இளவரசர் தாமாகவே தந்தையின் கட்டளைக்குக் கீழ்ப் படிந்து பார்த்திபேந்திர பல்லவனுடைய கப்பலில் ஏறி வந்தார். அந்தக் கப்பல் புயலில் சிக்கிக் கொண்டதாம். அப்போது இளவரசர் கடலில் மூழ்கி மாண்டதாக ஒரு வதந்தி புறப்பட்டது. இதை நான் நம்பவேயில்லை. பொன்னியின் செல்வனைச் சமுத்திரராஜன் அபகரித்திருக்க மாட்டான் என்று உறுதியாக நம்பினேன். அந்தக் கப்பலில் வந்த மற்ற எல்லாரும் உயிர் பிழைத்திருக்கும் போது இளவரசர் மட்டும் எப்படிக் கடலில் மூழ்கி மாண்டிருக்க முடியும்?— ஆகையால் இளவரசர் கரை ஏறியதும் அவரைச் சிறைப்படுத்தச் சதி நடந்திருக்க வேண்டும். அந்தச் சூழ்ச்சியை அறிந்து கொண்ட இளவரசர் தப்பிச் சென்று எங்கேயோ பத்திரமாயிருக்கிறார். சரியான சமயத்தில் வெளிப்புறப்பட்டு வருவார் என்று நம்பியிருந்தேன். உங்களில் பலரும் அப்படி நம்பியதாகத் தெரிவித்தீர்கள். நமது நம்பிக்கை நிறைவேறியது. நாகைப்பட்டினத்தில் புயல் அடித்த அன்று இளவரசர் வெளிப்பட்டார் என்பதாகவும், சோழ நாட்டு மக்கள் அவரை விஜய கோலாகலத்துடன் வரவேற்றுத் தஞ்சைக்கு அழைத்து வருகிறார்கள் என்பதாகவும் அறிந்தோம். அவர்களுக்குப் பக்க பல

முந்தி விட்டார்!



பிரஜா-சோஷலிஸ்டுக் கட்சியின் விசேஷ மகாநாடு ஆச்சாரிய கிருபளானியின் தலைமையில் சென்ற வாரம் சிறப்பாக நடைபெற்றது.

மாக இருக்கும் உத்தேசத்துடனேயே நாமும் இவ்விடம் வந்து சேர்ந்தோம். ஆனால் வஞ்சகச் சூழ்ச்சிக்காரர்கள் மறுபடியும் தங்கள் கை வரிசையைக் காட்டி விட்டார்கள்......"

"என்ன? என்ன?" என்று பலர் கவலைக் குரலில் கேட்டார்கள்.

"நான் இந்தக் கூட்டத்துக்கு வருவதற்குச் சில நிமிடங்களுக்கு முன்புதான் அச்செய்தி கிடைத்தது. இன்று காலையில் திருவாரூரிலிருந்து இளவரசர் புறப்பட விருந்த சமயத்தில், அவர் ஏறி வந்த யானைக்கு மதம் பிடித்து யானைப் பாகனைத் தூக்கி எறிந்து விட்டதாம். யானை தெறி கெட்டு ஓடி விட்டதாம். அப்போது ஏற்பட்ட குழப்பத்தில் இளவரசரும் காணமற் போய் விட்டாராம்!..."

"ஐயையோ!" "இது என்ன விபரீதம்?" "தெய்வமும் வஞ்சகர்களின் கட்சியில் இருக்கிறதா?"—என்று இப்படிப் பலர் அங்கலாய்க்கத் தொடங்கினார்கள். அவர்களைச் சேநாபதி கையமர்த்தி அமைதியாயிருக்கச் செய்தார்.

"செய்தியை முதலில் கேட்டதும் நானும் கதிகலங்கிப் போனேன். ஒருவாறு சமாளித்துக் கொண்டுதான் இந்தக் கூட்டத்திற்கு வந்து சேர்ந்தேன். இளவரசர் அருள்மொழி வர்மர் போர் முனையில் எத்தகைய நிகரில்லாத வீரம் உடையவரோ, அப்படியே அறிவாற்றலிலும் நிகரற்றவர். வஞ்சகர்களின் சூழ்ச்சி வலையில் அவ்வளவு சுலபமாக அகப்பட்டுக் கொண்டு விடமாட்டார். சீக்கிரத்தில் அவரைப் பற்றி நல்ல செய்தி ஏதேனும் கிடைக்கும் என்று எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறேன். அதற்கிடையில் நாம் என்ன செய்ய வேண்டும், இந்த இக்கட்டான நிலைமையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி உங்கள் அபிப்பிராயங்களைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்!"

இவ்விதம் சேநாதிபதி தாம் சொல்ல வேண்டியதைச் சொல்லி முடித்ததும், மற்றவர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தார்கள். அவர்களுடைய கருத்துக்கள் முக்கியமான விஷயங்களில் ஏறக்குறைய ஒரு மாதிரியாகவே இருந்தன. சில்லறை விவரங்களில் மட்டுமே மாறுபட்டன. அங்கே உள்ளவர்களின்

பிரதிநிதிகள் நாளைய தினம் சக்கரவர்த்தியை நேரில் சந்தித்துப் பேச வசதி கோர வேண்டும் என்றும், அதற்கு வாய்ப்புக் கிடைத்தால் சக்கரவர்த்தியிடம் "மதுராந்தகன் சோழ சிங்காதனம் ஏறுவதை நாங்கள் விரும்பவில்லை" என்று தெளிவாகத் தெரிவித்துவிடவேண்டும் என்றும் பலர் கூறினார்கள். "ஒன்று, பழுவேட்டரையர்களுடைய சர்வாதிகாரப் பதவிகளிலிருந்து சக்கரவர்த்தி அவர்களை நீக்கிவிட வேண்டும்; அல்லது சக்கரவர்த்தி தஞ்சாவூரை விட்டுப் பழையாறைக்குப் போய்விடவேண்டும்" என்று இன்னும் சிலர் வற்புறுத்தினார்கள்.

"ஆதித்த கரிகாலருக்கு ஏற்கெனவே யுவராஜ்ய பட்டாபிஷேகம் ஆகியிருப்பதால் அவரே அடுத்த பட்டத்துக்கு உரியவர்; அவராகப் பட்டம் வேண்டாம் என்று மறுதளித்தால், அடுத்தபடி சிங்காதனத்துக்கு உரிமையாளர் அருள்மொழி வர்மர்தான். இதைச் சந்தேகத்துக்கு இடம் வையாமல் சக்கரவர்த்தியிடம் தெரிவித்து அவரையும் ஒப்புக்கொள்ளப் பண்ண வேண்டும்" என்றார்கள் வேறு சிலர். சக்கரவர்த்தியைச் சந்திப்பதற்கே வாய்ப்புக் கிடைக்காவிட்டால், கோட்டைக் கதவுகளைத் திறப்பதற்கு மறுத்தால், கோட்டையை முற்றுகையிட வேண்டியதுதான் என்று சிலர் சொன்னார்கள். "முற்றுகை எதற்காக? உடனடியாகக் கோட்டைக் கதவுகளையும் மதில்களையும் தகர்க்கும்படி வீரர்களை ஏவ வேண்டியதுதான்!" என்று இன்னும் சிலர் கூறினார்கள். இளவரசரைப் பற்றிச் செய்தி வரும் வரையில் காத்திருப்பது நல்லது என்றும் ஆதித்த கரிகாலருக்கு ஆள் அனுப்பி அவரையும் தருவித்துக் கொள்ள வேண்டும் என்றும் சிலர் கருதினார்கள்.

"அதற்காகவெல்லாம் காத்திருப்பதில் என்ன பயன்? பழுவேட்டரையர்களின் ஆதிக்கத்திலுள்ள சுந்தர சோழப் பெரும்படை கொள்ளிடத்துக்கு அக்கரையில் மழ நாட்டில் இருந்து வருகிறது. தற்சமயம் கொள்ளிடத்திலும் மற்ற நதிகளிலும் பெரு வெள்ளம் போவதால் அப் படைகள் இங்கு வர முடியாது. ஆகையால் கோட்டையைத் தகர்த்துச் சக்கரவர்த்தியைப் பழுவேட்டரையர்களின் சிறையிலிருந்து மீட்பதற்கு இதுவே தக்க சமயம்" என்று வற்புறுத்தினார்கள் வேறு சிலர்.

இவ்வாறு விவாதம் நடந்து கொண்டிருக்கையில், கூடாரத்தின் வாசலில் காவல் புரிந்துகொண்டிருந்த வீரன் ஒருவன் அவசரமாக உள்ளே வந்து சேநாதிபதியின் காதில் ஏதோ கூறினான். அவர் கூட்டத்தினரைப் பார்த்து, "இதோ வந்து விடுகிறேன். சற்றுப் பேசிக்கொண்டிருங்கள்" என்று சொல்லி விட்டு வெளியேறினார். (தொடரும்)

★ ★ ★ ★ ★ ★

அட்டைப்பட விளக்கம்

அவள் பெற்ற ஆனந்தம்!

"சீவி வகுப்பெடுத்து,
சேர்த்துக் குழல் முடித்து"

அழகிய வண்ணப் பட்டுகளில் பாவாடைகளையும் சட்டைகளையும் தைத்துக் கொடுத்து அழகு பார்க்கும் பேறு பெண்ணைப் பெற்ற தாய்க்குத்தானே உண்டு!

குழந்தையின் காதிலும் கழுத்திலும் அணிகள் பூட்டி மகிழும் பாக்கியம் தங்கப் பதுமையெனப் பெண்ணைப் பெற்ற தாய்க்குத்தானே உண்டு!

வாசனைத் தைலம் தடவி, வித விதமான பின்னல்கள் போட்டுக் கூந்தலை முடித்து, நெற்றிக்கும் திலகமிட்டு அழகு பார்க்கும் ஆனந்தம் மகளைப் பெற்ற தாய்க்குத்தானே உண்டு!

இப்படிப் பலவிதங்களில் பெண் பெற்றதால் தனக்குக் கிடைத்துள்ள பாக்கியங்களை எண்ணினாள் அந்தத் தாயார். கைகள் மேலே பின்ன ஓடவில்லை. அப்படியே சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள்.

இதையுணர்ந்த பெண், "அம்மா, இந்த வாரத்திய 'கல்கி' வந்து விட்டது! படிக்க வேண்டாமா! சீக்கிரம், பின்னி விடு!" என்று கூறுவது இயல்பே யல்லவா!

பக்ரா-நங்கல் திட்டம்

நீண்டநாள் நிலைத்து பலன் கொடுக்கும் ஏ.சி.சி. சிமெண்டினால் கட்டப்பட்டது.

பிரம்மாண்டமான பக்ரா-நங்கல் திட்டம் சட்லஜ் நதித்தண்ணீரை நீர்ப்பாசனத்திற்கும் மின்சார சக்திக்கும் பயன்படச்செய்யும். பக்ரா, நங்கல் ஆகிய இடங்களில் இரண்டு மாபெரும் அணைக்கட்டுகளும் மேலும் ஐந்து பெரிய மின்விசை நிலையங்களும் அதில் அமைந்துள்ளன. பூர்த்தியடைந்தபின் இத்திட்டம் கோடிக்கணக்கான ஏகரா நிலத்திற்கு நீர்ப்பாசன வசதியும் சுற்றுவட்டாரங்களுக்கு மின்சார சக்தியும் அளிக்கும். நாட்டின் சுபிட்சத்தைப் பெருக்கும் இவ்வேலையில் அதி முக்கியப் பங்கெடுப்பது ஏ.சி.சி. சிமெண்ட்.



ACC சிமெண்ட்

தீ அஸோஸியேடட் சிமெண்டு கம்பெனீஸ் லிமிடெட்

இவர்களின் வியாபார மானேஜர்கள்

தீ சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிட்.

மட்டக்களப்பில் மகத்தான விழா

சோம. லெ.

இரண்டாண்டுகளுக்கு முன்பு யாழ்ப்பாணத்தில் தமிழ் வளர்ச்சிக் கழகத்தார் தங்களுடைய நான்காம் தமிழ் விழாவை நடத்தியதிலிருந்து ஈழ நாடெங்கும் தமிழ் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடிக் கொண்டேயிருக்கிறது. ஈழ நாட்டில் தமிழர் வாழுகின்ற பகுதிகளிலே முக்கியமான தொன்று மட்டக்களப்பு என்பதாகும். யாழ் நூல் இயற்றிய விபுலானந்த அடிகள் தோன்றிய காரணத்தாலேயே மட்டக்களப்பு என்ற ஒரு பகுதி இருப்பதைத் தமிழன்பர்கள் அறிந்தனர். விபுலானந்தர் வித்திட்ட தமிழ் ஆர்வம் தங்களிடம் வேரூன்றி இருப்பதைக் காட்டுவதற்கான ஒரு வாய்ப்பை மட்டக்களப்பு மக்கள் ஏற்படுத்திக் கொண்டார்கள். ஜூன் 5 6, 7 தேதிகளில் அவர்கள் ஒரு தமிழ் விழாவை நடத்தினார்கள்.

குன்றக்குடி மகா சந்நிதானம் அருணாசல தேசிக சுவாமிகள் தலைமை தாங்கியது விழாவுக்குத் தனிச் சிறப்பாக இருந்தது. தமிழ் வளர்க்கும் தனிநாயக அடிகள், சித்தாந்த கலாநிதி ஔவை துரைசாமிப் பிள்ளை, பேராசிரியர் ஞான சம்பந்தம் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டு விழாவிற்கு மேலும் பெருமை அளித்தனர். இருபது முப்பது ஆண்டுகளாக இலங்கையில் வாழ்ந்து வருபவர்கள்கூட இந்த விழாவை ஒட்டியே முதல் முறையாக மட்டக்களப்பிற்கு வந்தனர். அவ்வாறு வந்தவர்களுக்கு, மட்டத்திற்கும் களப்பு (உணவு விடுதி)க்கும் ஒன்றும் தொடர்பு இல்லையென்றும், "ஆழமில்லாத ஏரி" யென்பதே அதன் பொருள் என்றும் மட்டக்களப்புத் தமிழ்க் கலை மன்றத்தார் எடுத்து இயம்பினர். இம்மன்றம் 1941-ல் தொடங்கப் பெற்றது. இப்பொழுது 150 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். மொழிக்கும், கலைக்கும் பணியாற்றி வருகிறார்கள். ஞாயிறுதோறும் இரண்டு மணி நியாலத்திற்கு இலக்கியச் சொற்பொழிவு நடத்துகிறார்கள். விபுலானந்த அடிகளுடைய கட்டுரைகளைச் சேகரித்து வைத்திருக்கிறார்கள். அவை விரைவில் வெளியிடப்படுமென்று அறிகிறோம். ஊரி (பௌர்ணமி நாளில் இரவில் பாடுகின்ற கடல் மீன்) பாடுகின்ற சிறப்பு இருப்பது போலவே ஏராளமான நாட்டுப் பாடல்கள் வழங்கி வருகின்ற பெருமையும் கிழக்கு மாகாணத்திற்கு உண்டு. அன்றாட வாழ்வில் நாட்டுப் பாடல்கள் பெரிதும் பயன்படுகின்றன. உதாரணத்திற்காகச் சிறு பகுதியைத் தருவோம்.

"ஆற்றோரம் போற மயில்
ஆண் மயிலோ அது பெண் மயிலோ
பார்த்துவாடா தேன் சேரியான்
பாவற்பழமும் மாலை தாறேன்"

என்றும்,

"கடலே இரையாதே
கற்கிணறே பொங்காதே
நிலவே எரியாதே—என்
நிலவண்டார் வருமளவும்"

என்றெல்லாம் காதலர்கள் பாடுவது மட்டக்களப்புப் பகுதியில்தான். நூற்றுக் கணக்கான பாடல்களைச் சேமித்து வைத்திருக்கின்ற இம்மன்றத்தார் இவற்றை வெளியிடத் திட்டமிட்டிருக்கிறார்கள். மட்டக்களப்புத் தமிழ் என்ற ஒரு சிறு நூலையும் இவர்கள் வெளியிட்டால் புதிதாக மட்டக்களப்புக்குப் போகும் அன்பர்களுக்கு உதவியாக இருக்கும். ஏனென்றால் அங்கே "படுவான்" என்பது மேற்கையும், "எழுவான்" என்பது கிழக்கையும், "ஒயில்" என்பது அழகையும், "மூடுகடி" என்பது சமீபத்தில் என்பதையும் குறிக்கும்.

வெள்ளிக்கிழமை இரவு எட்டுச் சுவடிகள் ஊர்வலத்தோடு விழா தொடங்கியது. ஊர்வலத்திலும் சரி, மற்ற நிகழ்ச்சிகளிலும் சரி, எல்லாச் சமயத்தினரும் கலந்து கொண்டார்கள். இது குறிப்பிடத்தக்க செய்தி. தமிழ் பேசும் மக்கள் வருங்காலத்தில் மொழியின் அடிப்படையில் ஒன்றுபடுவார்கள் என்பதற்கு அறிகுறி. கண்ணகி வழக்குரை, அநிருத்த நாடகம், கந்த புராண ஏடுகள், வசந்தன் நாடகம் ஆகிய இலக்கியச் செல்வங்கள் மட்டக்களப்புப் பகுதி மக்களின் வாழ்க்கையோடு இயைந்தவை. இந்த ஏடுகள் யானை மீதேற்றி வைக்கப் பெற்றிருந்தன. குன்றக்குடி மகா சந்நிதானமும், ஏனைய அறிஞர்களும் கோவில் மரியாதைகளுடன் இந்த ஊர்வலத்தில் சிவானந்த வாசகசாலையிலிருந்து நகர மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். வெள்ளை உடை அணிந்த பெண்கள் இரு மருங்கிலும் அணிவகுத்துச் சென்றனர். ஊர்வலக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

இலங்கையில் ஒரு சிறப்பு, அரசாங்க அதிகாரிகள் பலர் சைவசமயம், தமிழ் மொழி இவற்றின் வளர்ச்சியில் ஈடுபாடு உடையவர்களாக இருப்பதாகும். இத்தகைய பண்பாடு நிறைந்த பெருமக்களில் ஒருவர் மட்டக்களப்பு வாசியும், கண்டி உதவி மாகாண அதிபதியும் ஆகிய ஆ. தட்சணாமூர்த்தி சி. சி. எஸ். அவர்கள். இவர் இனிமையோடும், உள்ளன்போடும் பேசித் தமிழ்க் கொடியை ஏற்றி வைத்தார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் தமிழ்த் தாய் வணக்கத்தோடு ஆரம்பமாயின. மன்றத் தலைவர் பண்டிதர் சபாபதி அவர்கள் வரவேற்புரை கூறினார்கள். விபுலானந்த அடிகளுடைய சமாதியிலிருந்து நேரே மேடைக்கு வந்த குன்றக்குடி மகா சந்நிதானம் விபுலானந்தரின் படத்தைத் "திரை நீக்கம்" செய்தார்கள். தீண்டாமைதான் சைவ சமய வளர்ச்சிக்குப் புல்லுருவியாக இருந்தது என்ற விபுலானந்தர் கருத்தையும், தாழ்த்தப் பட்டவர்களை உயர்த்துவதே சமயப்பணி என்று கருதி அவர்கள் ஞாயிறுதோறும் அண்ணாமலை நகரில் சேரிக்குச் சென்றதையும், குன்றக்குடி மகா சந்நிதானம் குறிப்பிட்டார்கள். விபுலானந்தர் வழிநின்று மட்டக்களப்பு ஒரு தமிழ்ப் பண்ணையாக விளங்க வேண்டுமென்றும் மொழி புணர்ச்சியால் மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டுமென்றும் மகா சந்நிதானம் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

"ஈழநாடும் தமிழும்" என்ற தலைப்பில் இலங்கைப் பல்கலைத் தமிழ்ப் பேராசிரியர் கலாநிதி கணபதிப் பிள்ளை அவர்கள் அபிநயங்களோடு பேசினார். சங்க காலத்தில் ஈழநாட்டுப் புலவர்கள் கள்ளத் தோணிகளில் இங்கிருந்து சென்று தமிழ்ச் சங்க நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டதாகவும் சுவைபடக் கூறினர்.

உசிலம்பட்டி
௨-6-53

கல்கி மாமாவுக்கு,

எங்கள் பள்ளிக்கூடத்தில் இரண்டு நேரம் வகுப்பு நடப்பதால் வீட்டு வேலை செய்து பழகுவதற்கு நேரம் இல்லாமலிருந்தது. புது கல்வித் திட்டப்படி ஒரு நேரம் மட்டும் வகுப்பு நடக்கப் போவதை கேள்விப்பட்டு மகிழ்ச்சி அடைந்தோம். வீட்டில் சமையல் வேலை, கற்றுக்கொள்வதற்கும் மற்றும் தையல் வேலை, பின்னல் வேலை) முதலியவைகள் செய்து பழகுவதற்கும் நிறைய அவகாசம் இருக்கிறது. அதனால் இந்த திட்டத்தை கொண்டு வந்த ராஜாஜி அவர்களுக்கு எங்களின் கோடி கோடி வணக்கம்.

இப்படிக்கு
ஆ.மாலதி
ஆ.மருதுளா
4-ம் வகுப்பு மாணவிகள்
போர்டுபெண் பாடசாலை
உசிலம்பட்டி

உபநிஷதக் கருத்துக்கள் பலவும் திருக்குறளில் இருப்பதை இனிய எளிய நடையில் சுருங்கச் சொல்லிச் சச்சிதானந்த யோகி அவர்கள் ஒப்புக் காட்டினார்கள். இவர் சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களின் சீடர்.

பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தம் அவர்கள் "அடியவர் பெருமை" "திருக்குறட் செல்வம்" என்னும் தலைப்புக்களில் இரண்டு சொற்பொழிவு செய்தார். இவற்றைக் கேட்டுச் சபையோர் அனைவரும் பெரிதும் மகிழ்ந்தார்கள். இரண்டு சொற்பொழிவுகள் நிகழ்த்திய மற்றொரு அறிஞர் சைவ சித்தாந்தப் புலவரும், "பேராசிரியர்" என்று புலவர் மாநாட்டில் சிறப்பிக்கப் பட்டவருமான ஔவை துரைசாமிப் பிள்ளை அவர்கள். "தனித் தமிழ்" "சங்கத் தமிழ் வளம்" ஆகிய பொருள் பற்றி இனிமையோடு கலந்த தமிழிசையாக, தனித் தமிழில் பேசிச் சபையை இவர் மகிழ்வித்தார். "தமிழ்ப் பண்பு" என்னும் ஆங்கிலச் சஞ்சிகையின் ஆசிரியரும், கத்தோலிக்கரிடையே தமிழுணர்ச்சி பெருகப் பெரிதும் பாடுபட்டிருப்பவரும் ஆகிய சேவியர் தனிநாயக அடிகள் "தமிழரும் அவர்களின் கலைகளும்" என்னும் பொருள் பற்றி ஆராய்ச்சிக் கருத்துக்களோடு சொற்பொழிவாற்றினார்கள். ஆசிரியர் ஜனாப் எஸ். எம். கமால்தீன் முஸ்லிம்கள் தமிழிலக்கியத்திற்குச் செய்திருக்கிற பணிகளை எடுத்துரைத்தார். திருமதி கங்கேஸ்வரி கந்தையா, திருமதி கமலபூஷணி திருநாவுக்கரசு ஆகிய இரு அம்மையார்களும் இயல்பாகவே அமைந்த நல்ல சொல்லோட்டத்தோடும், நகைச்சுவையோடும் பேசிச் சீர்திருத்தக் கருத்துக்களை வெளியிட்டார்கள். விழாவின் ஒரு பகுதிக்குத் தலைமை தாங்கிய புலவர்மணி பெரிய தம்பிப் பிள்ளை அவர்கள் கிழக்கு மாகாணத்தில் இப்போது வாழும் தமிழ்ப் புலவர்களில் தலைசிறந்தவர்; கம்பராமாயணத்தில் பெரிதும் ஈடுபாடுடையவர். இப்புலவரை, வாய்ப்பு நேரும்பொழுதெல்லாம் தமிழ்க் கலை மன்றத்தார் பாராட்டி, சிறப்பித்து, பெருமைப் படுத்தி வருகின்றனர். நகைச்சுவைக் கலைஞர் அன்புப்பழம்நீ அவர்கள் தமிழ்ப் பேச்சாளர் பலருடைய குரல்களை அவரவர்கள் பேசுவதுபோலவே பேசிக் காட்டினார். அந்த அரைமணித் தியாலமும் சபையோர் வயிறு வெடிக்கச் சிரித்த காட்சி மட்டக்களப்பு விழாவில் பங்குபற்றியவர்கள் மனத்தை விட்டு அகலாது. சங்கீதபூஷணம் க. இராசா இடையிடையே நிகழ்த்திய இசை விருந்தில் சங்கதிகளும், கமகங்களும், பலவகைப் பிடிகளும் இசையன்பர்களுக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்தன.

மகா சந்நிதானம் அவர்களுடைய தலைமையுரையும் குறிப்புரைகளும் முடிவுரையும் வழக்கம்போல கடல்மடை திறந்துவிட்டதுபோல இருந்தன. அதன் பலனாக, கிழக்கு மாகாணத்தில் தமிழார்வம் சுடர் விட்டு எரியும் என்பதில் ஒரு சிறிதும் சந்தேகமில்லை.

மட்டக்களப்புத் தமிழ் விழாவின் வெற்றிக்கு அல்லும் பகலும் பாடுபட்ட அன்பர் பலர். அவர்களில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியவர் நடராசதுர மாஸ்டர். இவர் இராமகிருஷ்ண மடத்தைச் சேர்ந்தவர். உற்சாகமாகப் பணியாற்றுபவர். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் சொற்றொடரை வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர். பெருந்திரளான மக்கள் கூட்டத்தில் கல்மனமும் கரையும்படி பேசும் ஆற்றல் நிறைந்தவர். டாக்டர் பஞ்சாட்சரம் என்பவர் மூன்று தலைமுறைகளாக விபுலானந்த அடிகளோடு தொடர்பு கொண்டவர். அவர் அமைத்த கட்டிடத்திற்கு டாக்டர் பஞ்சாட்சரத்தின் குடும்பத்தார் 21 ஏக்கர் காணி கொடுத்து உதவியிருக்கிறார்கள். தொழுநோய் நீக்கி வரும்

இந்த டாக்டர் கல்கத்தாவிலுள்ள வெலிங்டன் ஆஸ்பத்திரிக்குச் சென்று தம் தொழிலில் பயிற்சி பெறுவார் என்று தெரிகிறது. மட்டக்களப்புத் தமிழ்க் கலை மன்றத்தின் காரியதரிசி பண்டிதர் வி. சீ. கந்தையா அவர்கள் நல்ல எழுத்தாளர். கீழ் மாகாணத்திலுள்ள தமிழ் ஆசிரியர்களில் இளைஞர். காரியதரிசியின் மனைவியும், பொருளாளரின் மனைவியும் பேசிய விழா மட்டக்களப்பு ஒன்றில்தான் நடைபெற்றது. பிற இடங்களிலும் விழாக்கள் சிறப்பாக நடைபெற வேண்டுமானால் அதில் ஆர்வம் காட்டுகின்ற அன்பர்களின் குடும்பத்தினரும் பங்கு பற்ற வேண்டுமென்ற கருத்து மட்டுநகரிலிருந்த நாட்களில் எனக்கு ஏற்பட்டது. திருமதி திருநாவுக்கரசு பேசிய போது தமிழ்ப் புலவர்கள் மெல்லிய இடையும் உடலும் உடைய பெண்களையே பாடி விருக்கின்றார்கள் என்று சொல்லி ஏங்கினார்கள்!

மற்ற மாஸ்டர்கள் யாவரும் விழா நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து கொண்டிருக்க ஒரு மாஸ்டர் மட்டும் விருந்தினருக்கு உணவு தரும் பகுதியை மேற்பார்த்துக் கொண்டிருந்தார். பண்டிதர் பூபாலப் பிள்ளையைத்தான் குறிப்பிடுகிறேன். இவர் உணவு உற்பத்தியில் அக்கறை காட்டி வருபவர். நாலு மாதத்தில் உண்டாகும் பிலிப்பைன் கிழங்கு, ஹாலந்து முருங்கைக்காய், கரும்பு, வெங்காயம் ஆகியவற்றை இரண்டு ஏக்கர் பரப்புள்ள பாலைவனத்தில் கிணற்று நீரைப் பாய்ச்சி உற்பத்தி செய்பவர் இந்தப் பண்டிதர். தமிழ் நாட்டிலுள்ள ஆசிரியர்களும் பூபாலப் பிள்ளையைப் பின்பற்றுவார்களானால் அவர்களும் வரவு செலவைச் சரிக்கட்டலாம். உணவு உற்பத்தியும் கூடுதலாக இருக்கும்.

மட்டக்களப்பில் கூடியிருந்த மக்கள் அரிய இலக்கியப் பேச்சுக்களைத் தொடர்ந்து கேட்டது இது முதல் தடவையாகும். காலை 8-30 மணிக்கு முன்னரே மண்டபம் ஒவ்வொரு நாளும் நிறைந்து விட்டது. இவ்வளவு சிறப்பாக நடந்த நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி நிலையத்தார் அஞ்சல் செய்யாதது ஒரு பெருங் குறையே ஆகும். இனிக் கொழும்பில் இன்னும் சில மாதங்களில் ஒரு தமிழ் விழா நடைபெற இருக்கிறது. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் புதிய தலைவராகிய வி. ஏ. கந்தையா அவர்களும் சிறப்பான விழாக்கள் பலவற்றை நடத்தி நிலையான தொண்டு செய்ய வேண்டுமென்று கனவு கொண்டிருக்கிறார். அந்த வாய்ப்புக்களாவது தமிழ் அன்பர்கள் எல்லோருக்கும் பயன்பட இலங்கை வானொலி நிலையத்தார் உதவ வேண்டும்.

நன்றி கூறும்போது மக்கள் எழுந்து சென்று விடுகிறார்கள் என்பதற்காக, மட்டக்களப்புத் தமிழ்க்கலை மன்றத்தார் குன்றக்குடி அடிகளாரின் முடிவுரைக்கு முன்னரே நன்றி கூறிவிட்டார்கள். ஏனைய இடங்களில் விழா நடத்துபவர்களுக்கு இது ஒரு முன்மாதிரி.

தமிழ்க்கலை மன்றத்தாரின் தமிழ்ப் பணிகள் விரைவில் உருவாகி நாட்டில் நிலவிப் பயன் படுமென்ற நம்பிக்கையை மீன்பாடத் தேன் பாயும் மேதக்க வளநாட்டுப் பயணம் உறுதி செய்கிறது. இவர்களுடைய ஊக்கமும், பணியும் தமிழ் வளர்ச்சிக்கு ஆக்கமும் அரணும் ஆகுக.

அகில உலகச் சிறு கதைப் போட்டி

- இரண்டாவது தடவையாக நடைபெறும் அகில உலகச் சிறு கதைப் போட்டிக்குக் கதை அனுப்புவோர் ஜூலை மாதம் முப்பத்தொன்றும் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.
- சகல எழுத்தாளர்களுக்கும் அதிக அவகாசம் அளிக்க வேண்டும் என்பதற்காகவே முடிவு தேதியை ஜூன் 30–லிருந்து ஜூலை 31ந் தேதிக்கு ஒத்திவைத்திருக்கிறார்கள்.
- இந்தியாவில் தமிழ் உள்பட முக்கியமான பன்னிரண்டு பாஷைகளிலாவது, ஆங்கிலத்திலாவது மேற்படி போட்டிக்குச் சிறு கதை எழுதலாம்.
- இந்தியாவில் எழுதப்படும் சிறந்த எட்டுக் கதைகளுக்கு "ஹிந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகை மொத்தம் ரூ. 5,250 பரிசு அளிக்கும். அதில் முதல் பரிசு ரூ. 1,500.
- அந்த எட்டுக் கதைகளிலிருந்து அகில உலகச் சிறு கதைப் போட்டிக்காக நாலு கதைகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புவார்கள்.
- இதில் கலந்துகொள்ளும் பத்திரிகைகள் தங்கள் தங்கள் பாஷைக் கதைகளுக்குப் பரிசு அளிக்கும்.
- பரிசு பெறும் சகல கதைகளும் போட்டியை நடத்தும் பத்திரிகைகளில் வெளிவரும்.
- கதைகள் பிரசுரமாகி முடிந்த பின், அந்தக் கதைகளில் எது சிறந்தது என்பதை, போட்டியை நடத்தும் பத்திரிகைகளிடையே வோட்டு எடுத்து முடிவு செய்வார்கள்.
- அந்தக் கதைக்கே அகில உலகச் சிறு கதைப் போட்டியான ஐயாயிரம் டாலர் (ரூ. 23,750) கொடுக்கப்படும்.
- தமிழ்க் கதைகளை ஆசிரியர், "கல்கி", கீழ்ப்பாக்கம், சென்னை-10 என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- சிறு கதை அனுப்புவோர், அது தங்களுடைய சொந்தக் கற்பனையைக் கொண்டு எழுதப்பட்டது என்று உறுதி கூறவேண்டும். ஏற்கெனவே எந்த இடத்திலும் பிரசுரிக்கப்பட்டதல்ல என்ற உத்தரவாதம் அளிக்க வேண்டும்.
- தயவு செய்து உறையின் மேல் "அகில உலகச் சிறு கதைப் போட்டி" என்று குறிப்பிட வேண்டுகிறோம்.
- அகில உலகச் சிறு கதைப் போட்டிக்குப் பொறுக்கி எடுக்கப்படும் நாலு தமிழ்க் கதைகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 125 வீதம் சன்மானம் அளிக்கப்படும்.

வட்ட மேஜை

தமிழ்நாடும் கேரளமும்

'கல்கி' 31-5-1953 இதழில் வெளியான "பலே மலையாளிகள்" என்ற தலையங்கத்தைப் படித்துக் கலக்க மடைந்தனேன் என்றால் மிகையாகாது. இன்னும் என்னைப் போல் கோடிக் கணக்கான தமிழர்கள் நான் அடைந்த அதிர்ச்சியையே அடைந்திருக்கக் கூடும். காரணம் யாதெனில் ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு, "குமரி முனையில் தமிழர் தவம்" என்ற தலைப்பின் கீழ் தொடர் கட்டுரைகளை வெளியிட்டவரும், இன்னும் கேரள எல்லைக்குள் அகப்பட்டுக் கொண்டு தவிக்கும் தமிழருடைய அவல நிலையைப் பற்றிப் பன் முறை எழுதி, தமிழினத்துக்கு ஆறுதல் தந்தவருமாகிய தாங்களா இந்தத் தலையங்கத்தை எழுதத் துணிந்தீர்கள் என்பதுதான்.

ஏற்கெனவே கேரளப் பிரதேசத்தில் வாழும் தமிழ் மக்கள், தங்கள் தாய்த் தமிழகத்துடன் இணையும் நன்னாள் என்று வரும் என்று எண்ணி ஏங்குகிறார்கள். அதில் இரண்டு விதமான மகிழ்ச்சியுண்டு. ஒன்று தாயகத்துடன் இணைவது. இரண்டாவது கேரளப் பிரமுகர்களிடமிருந்து விடுதலை பெறுவது. இவ்வாறான ஒரு விடுதலையை நோக்கி நிற்கும் இந்நாளில், இந்தத் தலையங்கம் தமிழினத்திற்குப் பெரும் கலக்கத்தை உண்டு பண்ணுகிறது என்றால் அதில் வியப்பில்லை அல்லவா!

தமிழ் மக்களாகிய நாம், எம்மொழி பேசுபவருடனும், எந்தவித நாகரிக முடையவருடனும் சுமுகமாகவும், சகோதர பாவத்துடனும் நடந்து கொண்டு வந்திருக்கிறோம். அதுபோல இன்னும் நடந்து கொள்ளத் தயாராகவு மிருக்கிறோம். ஆனால் அந்தக் காரணத்துக்காக "வினையை விலை கொடுத்து வாங்கு"வதற்கு நாம் தயாராயில்லை.

மலையாளிகள் மிகவும் புத்திசாலிக ளென்றும், பண்டித நேருவே இவர்களைப் பற்றிப் பல முறை புகழ்ந்து கூறியிருக்கிறார் என்றும் கூறுகிறீர்கள். நூற்றுக்கு நூறு உண்மை. இத்தனை பாராட்டுதல்களுக்கும் உரிய மலையாள சகோதரர்களை நாம் என்றும் நம்முடைய சகோதரர்களாகவே பாவித்து நடப்போம். ஆனால் சகோதரன் புத்திசாலி என்பதற்காக, இரு குடும்பத்தையும் ஒரு வீட்டில் குடித்தனம் வைத்து, வீடு என்றும் இரண்டு பட்டு வாழ்வதை நாம் வரவேற்கவில்லை.

எவ்விதமான நெருங்கிய தொடர்புள்ள சகோதரரா யிருப்பினும்கூட ஒரு நாள் அல்லது இன்னொரு நாள் பிரிந்து தனியே வாழ வேண்டியது தான். இது நம் தமிழக மரபும்கூட.

ஆந்திர சகோதரரும் நாமும் வெள்ளையரின் ஆட்சி காலம் தோன்றியது முதல் இன்றுவரை ஒன்றாகவே வாழ்ந்து வந்தோம். அதுவும் மிகவும் அந்நியோன்னியமாகவே வாழ்ந்தோம். முடிவில் என்ன நேர்ந்தது! பிரிந்து தனிக் குடித்தனம் ஆரம்பிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

இதே நிலைமை மலையாளிகளுக்கும் தமிழருக்குமிடையே ஏற்பட்டு விடும். அப்படிப்பட்ட சச்சரவுகளுக்கும் சமாதானக் குறைவுகளுக்கும், பிற்கால சந்ததியினை ஆளாக்குவதை விட, அதை இப்பொழுதே தடை செய்வது உசிதமல்லவா!

அதற்காகவே வள்ளுவர் பெருமான்,

"எண்ணித் துணிக கருமம் - துணிந்தபின்
எண்ணுவம் என்ப(து) இழுக்கு."

என்று அருளியிருக்கிறார்.

மேற்கூறிய காரணங்களை முன்னிட்டு, கேரளம் தமிழ் நாட்டோடு இணையும் கோரிக்கையை ஆதரிக்காமல் விட்டு விடுவதோடு, ஐக்கிய கேரளம் அமையும் முயற்சியைக் கைக்கொள்ளுமாறு வேண்டுகிறேன்.

மச்குண்டு. ஒரிஸ்ஸா
9—6—53

வி. ஒய். நேசன்

[தற்சமயம் திருவாங்கூர் ராஜ்யத்தில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களின் விருப்பம் இந்த நிருபரின் அபிப்பிராயத்தை ஆதரிக்கும் என்று தோன்றவில்லை. திருவாங்கூர் ரெவின்யூ மந்திரியான ஸ்ரீ சிதம்பர நாடார் அவர்கள், தமிழ் நாட்டுடன் மலையாளமும் திருவாங்கூரும் இணைந்து விடும் யோசனையை வரவேற்றிருக்கிறார். நாஞ்சில் நாட்டுத் தமிழர்களின் கருத்தை அறிய விரும்புகிறோம். ஆசிரியர்.]

●

ஏன் கிளறக் கூடாது?

"பிரிட்டிஷ் சர்க்காருக்கு உபயோகமான சேவைகள் செய்ததற்காக ஆகாகானுக்கு வருஷம் 12 ஆயிரம் ரூபாய் பென்ஷன் கொடுக்கப்படுகிறது. 1844-ல் இப்போதுள்ள ஆகாகானின் தாத்தா காலத்தில் இந்தப் பென்ஷன் ஆரம்பமாயிற்று. தாத்தா காலத்தில் கொடுக்கப்பட்ட பென்ஷன் இப்போதும் ஏன் நீடிக்கப்பட வேண்டும்!" என்று பார்லிமெண்டில் ஒரு மெம்பர் கேட்டார். தலைவர் "இதெல்லாம் பழைய சர்க்கார் விட்டுப்போன சொத்துக்கள். பழைய சரித்திரத்தை இப்போது கிளற வேண்டாம்" என்று சொல்லி மழுப்பி விட்டார்.

மேற்படி செய்தியை வாசித்த பொழுது எனக்கு அழுவதா, சிரிப்பதா என்றே தெரியவில்லை. பிரிட்டிஷ் சர்க்காரின் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது என்கிற ஒரு காரணத்துக்காக, மக்களின் வரிப் பணத்திலிருந்து 12000 ரூபாய் வருஷந்தோறும் வீணாகச் செலவிடப்படுகிறது. வேறு நியாயமான எவ்வளவோ செலவுகளுக்குப் "பணம் இல்லை" என்கிற பதில் தரும் சர்க்கார் கேலிக் கூத்தான செலவுகளுக்குப் பணம் கிடைக்கும்படி பார்த்துக் கொள்கிறது. மேற்படி பணத்தைக் கொண்டு 50000 ஏழைகளுக்கு ஒருவேளை உணவு அளிக்கலாமே! உலக கோடீஸ்வரரான ஆகாகானிடமிருந்து பாராட்டுதலைப் பெறுவது அவ்வளவு வருவானதா! சபாஷ், இந்திய அரசாங்கமே! சபாஷ்! "பழைய சரித்திர"த்தைக் கிளறாமல் நீ முன்னேறிக் கொண்டிரு. இப்படிச் செய்வதால் யார்தான் உன்னை என்ன செய்துவிட முடியும்!

பட்டாம்பி
14-5-53

கே. எஸ். ராமையா

●

ஏமாற வேண்டாம்!

இன்று தெருவில் விஜயவாடாவிலிருந்து வந்த ராம்தாஸ் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவர் என்னிடம் வந்து ஜோதிடம் கூறினார். அவர் பெயர் கோபண்ணாவாம். அவர் சோதிடம் கூறுமுன் 'பாவே ராம், பாவே ராம்' என்று கூறிச் சில நடைபெற்ற சம்பவங்களைக் கூறினார். முதலில் சரியாக இருந்தது என்று நினைத்தேன். முடிவில் உமக்குத் தோஷமிருக்கிறது என்று கூறி ஒரு

சொம்பு ஜலம், ஊதுவத்தி, கல்கத்தா காளி படம், செம்புத் தகட்டில் ஓம் காளி என்ற படம் முதலியன வைத்துச் சூடமேற்றிப் பரிகாரம் கொடுத்தார். பிறகு காளி உத்தரவு தெரியும் என்று கூறி, ரூபாய் 1—8—0 பெற்றுக் கொண்டு ஏமாற்றி விட்டார். அவர் போன பிறகுதான், இன்னும் பலரிடமும் ஏமாற்றி யிருக்கிறார் என்ற விஷயம் எனக்குத் தெரிய வந்தது. இதுமாதிரி பொது ஜனங்கள் தெருச் சோதிடர்களை நம்பிச் சிறிதும் ஏமாற வேண்டாம்.

கும்பகோணம்
25—5—53

எஸ். ஸ்ரீனிவாசன்

●

காங்கிரஸ் தொண்டர்கள்

கல்கி 7-6-53 இதழில் வந்த ஸ்ரீ பவானி நடேசன் அவர்களுடைய கடிதத்தையும் தங்களுடைய குறிப்பையும் படித்தேன். காங்கிரஸ் தியாகிகளுக்குத் தகுந்தபடி உதவிகள் செய்து அவர்களை மேலும் தேச சேவை செய்ய ஊக்கம் கொடுக்க வேண்டும் என்பதைப் பரிபூரணமாக வரவேற்கிறேன். இதன் விஷயமாக, காங்கிரஸ் மேலிடத்தார் ஒரு கமிட்டியை நியமித்து, தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டு, தியாகிகளுடைய உண்மையான நிலைமை அறிய வேண்டும்.

எனக்குத் தெரிந்த வரையில், அநேக தியாகிகள் வெளியில் சொல்வதற்கும் இல்லாமல், தங்களால் சகிக்கவும் முடியாத கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். இப்படித் தவித்துக் கொண்டு இருக்கும் தியாகிகளில் அநேகமாக 1940-ம் வருஷத்துக்கு முன்னால் தேச சேவை செய்தவர்களே அதிகம் இருக்கிறார்கள்.


நிற்க, இது விஷயமாகத் தியாகிகளுக்கு நிலமான்யம் மூலமாகவே உதவி செய்யக் கூடும் என்று நான் அபிப்பிராயப் படவில்லை. அவரவர்களுக்கு எந்தெந்தத் துறைகளில் அனுபவமும் ஆற்றலும் இருக்கிறதோ அந்த அந்தத் துறைகளில் அவரவர்களுக்கு ஊக்கம் கொடுத்தால், அவர்கள் அந்தந்தத் துறைகளில் வேலை செய்து, தம்முடைய குடும்பத்துக்கு வேண்டிய அத்தியாவசியச் செலவுகளுக்குச் சம்பாதித்துக் கொள்ள வசதி ஏற்படும். அப்படி ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்கள் மென்மேலும் சேவை செய்து, இப்பொழுது பலமிழந்து வரும் காங்கிரஸைப் பழைய ஸ்தானத்துக்குக் கண்டிப்பாய்க் கொண்டு வருவார்கள் என்பது என் திடமான நம்பிக்கை.

நமது போற்றத் தகுந்த தலைவர்கள் அந்தக் காலத்தில் செய்த பிரசங்கங்களைக் கேட்டு உடனே மாணவர்கள் பள்ளிகளை விட்டும், உத்தியோகஸ்தர்கள் தங்கள் உத்தியோகங்களை விட்டும், பெற்றோர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு ஆளாகியும், வீட்டிற்கே செல்ல முடியாத நிலைமைகள் ஏற்பட்டும், சேவையே நோக்கமாகக் கொண்டு செய்திருக்கிறார்கள். அநேகர் தங்களிடம் இருந்த சொற்ப செல்வங்களையும் கூட இழந்திருக்கிறார்கள்.

தியாகிகள் செய்த சேவைகள், அவர்கள் குழந்தைகளின் முன்போக்குக்கு முட்டுக் கட்டையாக இருந்து விட்டன என்னும் எண்ணம் அக்குழந்தைகளின் மனதில் ஏற்பட இடம் கொடுக்கலாமா?

தர்மபுரி
6—6—53

எஸ். சுந்தரம்





ஜூன் மாதம் 5ந் தேதி முதல் 7ந் தேதி வரை மூன்று தினங்கள் மட்டக்களப்பில் சிறப்பாகத் தமிழ் விழா நடைபெற்றது. மேற்படி விழாக் காட்சிகளையும் அதில் பங்கு பற்றியவர்களையும் இரண்டு பக்கங்களிலும் காணலாம்.

1. யோகி சச்சிதானந்தர் பேசுகிறார். அருகில் அமர்ந்திருப்பவர்தான் குன்றக்குடி மகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணாசல தேசிக சுவாமிகள். 2. விழா நடைபெற்ற விபுலானந்த அரங்கத்தின் தோற்றம். 3. விழாவிற்கு வந்திருந்த கூட்டத்தில் ஒரு பகுதி. 4. சுவாமி விபுலானந்த அடிகளின் திரு உருவப் படம். 5. திருமதி கமலபூஷணி திருநாவுக்கரசு. 6. டாக்டர் பஞ்சாட்சரம். 7. தமிழ்க்கலை மன்றப் பொருளாளர் திரு வே. திருநாவுக்கரசு. 8. மட்டக்களப்பு நகர சபை மண்டபம். இதில்தான் விழா







வுக்கென விபுலானந்த அரங்கம் அமைக்கப்பட்டது. 9. மட்டக்களப்புத் தமிழ் விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த பிரமுகர்கள்.

1. யானைமீது ஏட்டுச் சுவடிகளின் ஊர்வலம். 2. திரு க. நடராஜன். 3. சேவியர் தனிநாயகம் அடிகள். 4. திருமதி கங்கேஸ்வரி கந்தையா பேசுகிறார். 5. திரு என். இராஜதுரை. 6. விழாவில் இடை இடையே இன்னிசை வழங்கிய சங்கீதபூஷணம் நா. இராசு. 7. ஆண்களோடு போட்டி போட்டுக்கொண்டு விழாவுக்குவந்திருந்த பெண்மணிகளின் கூட்டம். 8. திரு வி. நல்லையா எம்.பி. 9. தமிழ்க் கலை மன்றத்துச் செயலாளர் பண்டித திரு வி. சீ. கந்தையா.







குருவின் ஆணை

'சாஸவன்'

"பிள்ளைவாள்! ஏதோ தெரியாத்தனம். நீங்கள் மன்னிக்க வேண்டும். என்ன இருந்தாலும், ரத்தினம் உங்கள் சிஷ்யனல்லவா!" என்று கெஞ்சினார் மாணிக்கம் பிள்ளை.

வேலுப் பிள்ளையின் கோபம் அதிகரித்தது. "என்ன சொன்னீர்! என் சிஷ்யனா! மறுமுறை அம்மாதிரி சொல்லாதேயும். அவன் என் சிஷ்யன் என்பதை நேற்றுடன் மறந்தேன். நன்றி கெட்டவன். நீங்கள் போய் வரலாம்" என்று கூறித் துண்டை உதறிப் போட்டுக் கொண்டு எழுந்தார். மாணிக்கம் பிள்ளை பெரும் ஏமாற்றத்துடன் திரும்பினார்.

கோவிலூர் வேலுப் பிள்ளை பிரசித்தமான கர்நாடக சங்கீத வித்வான். அந்தக் காலத்திலே மேடைக் கச்சேரி செய்யும் வித்வானாகப் பெயரும் புகழும் வாங்கிப் பணமும் நிரம்ப சேர்த்தவர். அவரிடம் சங்கீதம் பயின்ற பல இளைஞர்கள் பின்னர் பிரபலமானார்கள். ஆனால் கச்சேரி மேடைகளில் அல்ல; நாடகம், சினிமா முதலிய துறைகளில்தான்.

சுமார் முப்பது வருஷங்கள் சங்கீத உலகையே ஒரு கலக்குக் கலக்கிவிட்ட வேலுப் பிள்ளைக்கு, ஒரு குறை மட்டும் பல காலமாய் இருந்து வந்தது. தம்மிடம் சங்கீதம் பயின்ற சீடர்கள், தம்மைப் போல் மேடைக் கச்சேரி செய்து பிரபலமடைந்து தம் பெயரைக் காப்பாற்றாமல், கேவலம் பணத்திற்காக வேறு வழிகளில் இறங்கியது அவருக்குப் பெரிய குறையாகத்தான் இருந்தது.

தம் வித்தையைத் தமக்குப் பின் போஷித்துக் காப்பாற்ற ஒருவனும் முன்வரவில்லையே என்று ஏங்கித் தவித்தார். தம்மிடம் பயின்ற அத்தனை பிள்ளைகளில் ஒருவனுக்குக்கூட அம்மாதிரித் தோன்றவில்லையே என்று எண்ணிப் புழுங்கினார். அவர்களின் பேரில் வெறுப்பும் ஆத்திரமும் கொண்டு, "சே! சே! அவர்கள் உருப்படவா போகிறார்கள்! எக்கேடாகிலும் கெட்டுப் போகட்டும்" என்று சபித்தார். தம் சீடர்களால் தமக்கேற்பட்ட ஏமாற்றத்தின் காரணமாக, நாளடைவில் யாரையும் சிஷ்யனாக ஏற்றுக் கொள்வதில்லை என்றும் தீர்மானித்தார்.

அவருக்கு வேண்டிய நண்பர்கள் தொந்தரவு செய்தார்கள். "பிள்ளைவாள்! இத்தனை வைராக்கியம் உதவாது. உங்கள் சங்கீதம் உங்களுக்குப் பின்னும் தழைத்தோங்க வேண்டாமா! உங்களுடன் உங்கள் கலை மடிய நாங்கள் சம்மதிக்க மாட்டோம். உங்கள் விருப்பத்திற்கொப்ப ஓர் நல்ல சிஷ்யனைக் கொண்டு வந்து உங்களிடம் சேர்ப்பது எங்களுடைய பொறுப்பு. உங்கள் அபிலாஷைகளை எல்லாம் அவன் இம்மியும் வழுவாமல் பூர்த்தி செய்வான்" என்றார்கள்.

"அது நடக்கிற காரியமில்லை. ஆண்டவனுக்கு என் சங்கீதம் என்னுடன் மடிய வேண்டும் என்ற விருப்பமோ என்னமோ! யார் கண்டது! இல்லாவிட்டால், என்னிடம் கற்ற இந்தப் பத்து பிள்ளைகளும் ஏன் சங்கீதத்தை விட்டு வேறு வழிகளில் போய்ச் சேர வேண்டும்! சிஷ்யன் ஒருவன் உத்தமனாய்க் கிடைப்பதென்பதும் ஓர் புண்ணிய வசத்தினால்தான். அதை நான் செய்து வைக்கவில்லை. அவ்வளவுதான்!" என்று மிகத் துயரத்துடன் கூறினார் பிள்ளை.

ஆனால் பிள்ளையின் அபிமானிகள் தளர்ந்து விடவில்லை. பிள்ளையிடம் பாடம் கற்கத் தகுந்த ஒரு பையனைத் தேடிக் கொண்டு வந்துவிட்டுத்தான் மறு காரியம் என்று தீர்மானித்தார்கள்.

அடுத்த ஊர் நாட்டு வைத்தியர் மாணிக்கம் பிள்ளையின் மகன் ரத்தினம் கேள்வி ஞானத்தைக் கொண்டு அபாரமாய்ப் பாடினான். பஜனை மடத்திலும், கோவிலிலும், பள்ளியிலும் அவன் பாடிய பாட்டைக் கேட்டு ஊரே அதிசயித்தது.

ரத்தினத்தைப் பற்றிய செய்தி கோவிலூருக்கும் எட்டியது. உடனே பிள்ளையின் அபிமானிகள் அடுத்த ஊருக்கு ஓடி வைத்தியர் மாணிக்கம் பிள்ளையைச் சந்தித்துப் பேசி அவரைச் சம்மதிக்கச் செய்தார்கள். அவர்களுடைய விடாமுயற்சியின் பயனாக ரத்தினத்திற்குப் பாடம் ஆரம்பமாயிற்று.

பாடம் ஆரம்பமான சில தினங்களுக்குள்ளேயே வேலுப் பிள்ளையின் அன்பையும் அபிமானத்தையும் பெற்று விட்டான் ரத்தினம்.

ரத்தினம் வேலுப் பிள்ளையிடம் கற்க வந்த போது வயது பதினொன்று. வேலுப் பிள்ளை கச்சேரிகளுக்குச் செல்லும்போது, ஆரம்பத்தில் ரத்தினம் தம்புரா மட்டுமே மீட்டி வந்தான். நாளடைவில், கூடவே அனுசரணையுடன் பாடவும் அனுமதித்தார் பிள்ளை. பிள்ளையின் பழுத்த அனுபவத்தின் பயனாய் வெளியாகும் அபூர்வ விஷயங்களை, ரத்தினம் அனாயாசமாய்ப் பாடுவதைக் கேட்ட ரசிகர்கள் பிரமாதமாய்ப் புகழ்ந்து கொண்டிருந்தார்கள்; பிள்ளையின் சரியான வாரிசு ரத்தினந்தான் என்றும் தீர்மானித்தார்கள்.

ஒரு சமயம், சென்னையில் ஒரு பெரிய சபையில் பிள்ளையின் கச்சேரிக்கு ஏற்பாடாகி யிருந்தது. பிள்ளையின் கச்சேரி என்றால் கூட்டத்திற்குக் கேட்க வேண்டுமா!

கச்சேரி ஆரம்பமாயிற்று. கிரமப்படி வர்ணம், வாதாபி கணபதிம் முதலியவைகளுக்குப் பின் சில கீர்த்தனங்களைப் பாடி முடித்த பிள்ளை கல்யாணி ராகம் தொடங்கினார்.

ஆனால், என்ன துரதிர்ஷ்டம்! பிள்ளையின் சாரீரம் இடக்குப் பண்ணியது. என்னென்னவோ செய்து பார்த்தார். சாரீரம் ஒத்துழைக்கவில்லை. ரசிகர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தனர். எல்லோர் முகத்திலும் ஏமாற்றம் கிழலாடியது.

பார்த்தார் பிள்ளை. சட்டென்று பின்னால் திரும்பினார். ரத்தினத்திடம் ஏதோ ரகசியமாகப் பேசி

ஞர். அவர் முகம் மலர்ந்தது. அருகில் உட்கார்ந்திருந்த சபைக் காரியதரிசியைக் கூப்பிட்டுக் காதோடு ஏதோ சொன்னார்.

காரியதரிசி எழுந்து சபையோரைப் பார்த்து, "அன்பர்களே! நமது பிள்ளையவர்களுக்குச் சரீரம் கொஞ்சம் இடைஞ்சல் செய்வதால், அவருடைய சிஷ்யர் ரத்தினம் இப்பொழுது தொடர்ந்து பாடுவார்!" என்றார்.

ரத்தினம் கொஞ்சம் முன்னுக்கு நகர்ந்து உட்கார்ந்தான். தன் குரு சுருதி போட, குரு விட்ட கல்யாணி ராகத்தையே தொடர்ந்தான். சபையில் ஊசி போட்டாலும் கேட்கக் கூடிய நிசப்தம் நிலவியது. ரஸிக மகாஜனங்கள் தங்களை மறந்து அநுபவித்தார்கள்.

பிள்ளையின் உற்சாகம் கரை புரண்டோடியது. தம் சிஷ்யனின் திறமையை அன்றுதான் அவர் உணர முடிந்தது. கச்சேரி முடிந்ததும் அவனை அன்புடன் தழுவிக் கொண்டார். ரத்தினம் உணர்ச்சி வசமானான்.

அதற்குப் பின் பல கச்சேரிகளில், குருவுக்கு ஏர்வையாக ஒத்துழைத்துக் கச்சேரிகளைப் பரிமளிக்கச் செய்தான் ரத்தினம்.

காளடைவில், லேசாக ஓர் எண்ணம் மனத்திலே தோன்ற ஆரம்பித்தது அவனுக்கு. தனக்கு இப்போது தனிமையில் கச்சேரி செய்யும் திறமை ஏற்பட்டுவிட்டது. ஏன் குருவிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்து, அவருடைய அநுமதி பெற்று, கச்சேரி செய்யக் கூடாது என்பது தான் அந்த எண்ணம். ஆரம்பத்திலே இலேசாகத் தோன்றிய அந்த எண்ணம் சில ரஸிக இளைஞர்களின் சேர்க்கையினால் வளர்ந்தது.

இம்மாதிரி சந்தர்ப்பத்தில்தான் வேலுப் பிள்ளைக்குத் திடீரென்று காச நோய் ஏற்பட்டது. கச்சேரி செய்யக் கூடாது என்று டாக்டர்கள் கூறினார்கள். எனவே ரத்தினம் தன் குருவின் அநுமதி தனக்குக் கிடைத்துவிடும் என்று குதூகலமடைந்தான்.

அன்று குருவையே கேட்டு விடுவது என்று அவன் தீர்மானித்த பொழுதுதான் குருவே அந்த விஷயத்தை ஆரம்பித்து அவனுக்கு ஆச்சரியத்தை விளைவித்தார்.

"அப்பா, ரத்தினம்! நான் இனி கச்சேரி செய்யப் போவதில்லை. என் சங்கீதம் இனி உன் மூலம் தான் வெளியாக வேண்டும். என்னிடம் கற்ற பல சிஷ்யர்களில் உன்னைத்தான் நான் உத்தமனாக மதிக்கிறேன். உன்னால்தான் என் பெருமை நிலைக்கப் போகிறதென்று நம்புகிறேன். இப்போது சில காலமாய் உனக்கு ஏற்பட்டிருக்கும் எண்ணம் எனக்குத் தெரியும். பொறு, அவசரப் படாதே. என்னுடைய இருபத்திரண்டாவது வயதில் என் குருவின் அநுமதியுடன் அவர் அருகில் உட்கார்ந்து கொண்டு அநுபவிக்க, நான் என் வித்தையை அரங்கேற்றினேன். இந்த முறையே வாழையடி வாழையாக வழங்கி வர வேண்டும் என்று என் குருநாதர் என்னிடம் கூறியிருக்கிறார். எனவே இன்னும் மூன்று வருஷங்கள் பொறுத்துக் கொள். உன் இருபத்திரண்டாம் வயதில் அரங்கேற்றம் செய்யலாம். உன் க்ஷேமத்தில் எனக்குள்ள அக்கறையால்தான் சொல்கிறேன்" என்றார்.

குருவின் வார்த்தைகள் ரத்தினத்தின் கற்பனைக் கோட்டைகளைத் தகர்த்தெறிந்தன. ஆ! இன்னும் மூன்று வருஷங்கள் பொறுப்பதா! அதுவரை தன் சங்கீதம் அடங்கிக் கிடப்பதா! தன் குருநாதர் வேண்டுமென்றே தடை விதிப்பதாய்த்தான் தோன்றியது.

தன் குருநாதர் தன்னிடம் கூறியவற்றைத் தன் நண்பர்களிடம் கூறியபோது, "ரத்தினம்! உன் குரு ஏன் இம்மாதிரி தடை சொல்கிறார், தெரியுமா! நீ எங்கே அவரையும் மிஞ்சி விடுவாயோ என்ற பொறாமைதான். ஏற்கெனவே நீ சங்கீத அபிமானிகளின் மதிப்பையும் ஆதரவையும் பெற்றிருக்கிறாய். இப்போது தனிமையில் கச்சேரி செய்யத் தொடங்கினால், அவருடைய பெயர் மங்கி விடுமல்லவா!" என்றனர்.

நண்பர்கள் கூறியதை ஆய்ந்தோய்ந்து பார்த்த போது, ரத்தினத்திற்கும் அவர்கள் கூறுவதில் உண்மை இருப்பதாகவே பட்டது.

ஆம்; அப்படித்தான் தோன்றுகிறது. இல்லாவிட்டால், எல்லா வித்தையும் முடிந்து விட்ட பின்பும், ஏன் அவர் தன்னைத் தனிக் கச்சேரிக்கு அனுப்ப மறுக்க வேண்டும்! வித்துவத் காய்ச்சல்தான் காரணமாயிருக்க வேண்டும்—என்று கருதினான் ரத்தினம். அவர் சொல்லை மீறித் தனிக் கச்சேரி செய்தால் என்ன என்ற கேள்வி அவன் உள்ளத்தில் எழுந்தது.

தன் தந்தையாரிடம் சென்று அவன் தன் தீர்மானத்தைத் தெரிவித்தபோது, அவர் சீறினார். "அடே, குருத் துரோகி! அவருடைய விருப்பத்துக்கு விரோதமாகவா நடக்கப் பார்க்கிறாய்! வேண்டாம். அவர் சொன்னபடியே கொஞ்சம் பொறுமையுடன் இரு. வீணில் குருவின் சாபத்துக்கு ஆளாகாதே!" என்று கூச்சலிட்டார் மாணிக்கம் பிள்ளை.



இளங் கன்று பயம் அறியாது அல்லவா! தன் தந்தை, குரு இருவருடைய சொல்லையும் மீறித் தன்னுடைய நண்பன் ஒருவன் வீட்டில் கல்யாணக் கச்சேரிக்கு ஒப்புக் கொண்டான். அவன் செய்கையைக் கண்ட அவன் தந்தை மிகவும் மன வேதனைக்குள்ளாகிக் குருவிடம் மன்னிப்புக் கோரத் தாமே நேரில் சென்றார்.

★

கச்சேரி செய்து விட்டு, இரண்டு தினங்கள் கழிந்த பின்பு, ரத்தினம் வீடு திரும்பினான். உள்ளே நுழைந்ததும், தன் தந்தை யாருடனோ பேசக் கொடுத்துக் கொண்டிருந்ததைக் கேட்டான். தன் பெயர் அடிபடவே, அப்படியே ரேழியில் நின்றபடி ஒட்டுக் கேட்டான்.

"ஐயா! என் துரதிர்ஷ்டந்தான் இது. வேலுப் பிள்ளையிடம் பாடம் கற்கும் பாக்கியம் என் பையனுக்குக் கிடைத்தும், பயனில்லாமல் போய் விட்டது. அவருடைய சாபத்திற்கு ஆளாகப் போகிறான் அவன். குருவின் சாபம் பொல்லாதது என்பதைப் பற்றி எத்தனையோ தடவை சொன்னேன். கேட்கவில்லை அவன். அவனுடைய செயலுக்காக நான் நேரில் சென்று மன்னிப்பு வேண்டினேன் அவரிடம். அவருடைய கோபம் தணியவில்லை.

"கேளுங்கள்! அந்த நாளில் நானும் என் குருநாதரின் சாபத்துக்கு ஆளானவன்தான். அதனால்தான் இன்று இம்மாதிரி திண்டாடுகிறேன். வைத்திய முறைகளை நான் அவரிடம் ஏழு வருஷங்கள் கற்றேன். எல்லாம் தெரிந்து விட்டதாய் எண்ணி இறுமாந்தேன். என்னை அவ்வப்போது எச்சரிக்கை செய்துகொண்டே வந்தார் குரு.

"எனக்குத் தனிமையில் தொழில் செய்யவேண்டும் என்று தோன்றியது. அவரிடம் கூறியபோது இன்னும் சில வருஷங்கள் பொறுத்திருக்கும்படியும், இன்னும் எத்தனையோ விஷயங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும் கூறித் தடுத்தார். என் மூளையில் விபரீதமான எண்ணம் உதித்தது. தன் பெயர் மங்கி, தனக்கு வருவாய் குறைந்து விடுமோ என்ற காரணத்தால்தான் என்னைத் தடை செய்கிறார் என்று கருதினேன். வளர்த்து வானேன்! அவர் விருப்பத்துக்கு மாறாகத் தொழில் ஆரம்பித்தேன். அவருக்குத் துரோகம் விளைவித்து அவர் சாபத்தையும் கட்டிக் கொண்டேன்.

"சுமார் இருபது வருஷங்களாக ஏதோ தொழில் என்று செய்து வருகிறேனே ஒழிய என் தொழில் சோபிக்கவில்லை. என் விஷயந்தான் இப்படி என்றால், என் பிள்ளையுமா என்னையே கொள்ள வேண்டும், குருவுக்குத் துரோகம் விளைவிக்கும் விஷயத்தில்! மொத்தத்தில் நான் கொடுத்து வைத்தவனும் அல்ல; பாக்கியசாலியுமல்ல!"

மாணிக்கம் பிள்ளை சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டிருந்த ரத்தினம் வெறி பிடித்தவன்போல ஓடினான் கோவிலூருக்கு. தன் குருவின் வீட்டை அடைந்து, குருவின்முன் சாஷ்டாங்கமாய் விழுந்து அவர் பாதங்களைப் பற்றிக் கொண்டான். கண்களில் நீர் மல்கி நின்றது.

வேலுப் பிள்ளைக்கு ஒன்றும் புரியவில்லை.

"ரத்தினம்! எழுந்திரு!" என்று தூக்கினார்.

"அண்ணா! என்னை மனப்பூர்வமாய் மன்னித்தேன் என்று சொன்னால்தான் எழுந்திருப்பேன்" என்று கண்ணீர் பெருகியவாறு விம்மினான்.

மெதுவாய் அவனைத் தூக்கி நிறுத்தினார் பிள்ளை. ரத்தினம் வந்த வேகத்தையும், அவன் விழுந்த தோரணையையும் கண்டு, ஏற்கனவே அவர் மனம் இளகி யிருந்தது.

முகத்திலே புன்முறுவலைக் காட்டி "ரத்தினம்! கச்சேரி பலம்தானா!" என்றார்.

"அண்ணா! போதும். என்னை இடிக்காதீர்கள். மோசம் போனேன். என் பொறுப்பற்ற தன்மையாலும், அநுபவ மின்மையாலும், துர்ப்போதனையினாலும் தங்களுக்குத் துரோகம் விளைவித்து விட்டேன். தவிர, தங்களைப் பற்றியும் தவறாய் எண்ணி விட்டேன். நான் விவரமறியாத சிறு பிள்ளை. என்னை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று கெஞ்சினான்.

அவர் முகத்திலே காணப்பட்ட மகிழ்ச்சியே அவர் ரத்தினத்தை மன்னித்ததற்கு அத்தாட்சியாய் இருந்தது. ரத்தினத்தை அவர் அன்புடன் அணைத்துக் கொண்டு, "ரத்தினம்! ஏதோ சிறு பிள்ளைத்தனமாய் நடந்து கொண்டு விட்டாய். போனால் போகிறது. மறந்துவிடு. நீ செய்த தவறை உணர்ந்து வருந்தினாயே, அதுவே மன்னிப்புத்தான். இதோ பார், ஊற்று நீரை வெள்ளம் கொண்டு போய்விடாது. சம்பிரதாயமாய் ஏற்பட்டுள்ள வழியைத்தான், என் குருவின் ஆக்ஞைப்படி பின்பற்றினேன். அது நம்மை ஒருபோதும் திசை தப்பிக் கொண்டு செல்லாது" என்று கூறினார்.


இந்தக் காட்சியை வெளியில் நின்றபடியே பார்த்துக் கொண்டிருந்த மாணிக்கம் பிள்ளை உணர்ச்சி வசமானார். பாய்ந்து வந்து தன் மைந்தனைக் கட்டிக் கொண்டார்.

"ரத்தினம்! குருத் துரோகத்திலிருந்து இந்த மட்டுமாவது தப்பினாயே! பிள்ளைவாள்! ஏதோ தவறி நடந்து விட்டாலும், உங்கள் பெருந்தன்மையால் அவனை மன்னித்து ஏற்றுக் கொண்டதற்கு நாங்கள் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறோம்" என்று கூறி நின்றார் மாணிக்கம் பிள்ளை.



"அப்பா! நீங்கள்தான் என்னைக் குரு சாபத்தி லிருந்து காப்பாற்றினீர்கள். சற்று முன்பு நீங்கள் யாருடனோ பேசிக் கொண்டிருந்ததை யெல்லாம் வெளியே இருந்தபடி கேட்டேன். உடனே என் தவறை உணர்ந்தேன். அண்ணாவிடம் ஓடோடியும் வந்தேன் மன்னிப்புப் பெற. தங்கள் அநுபவத்தை என்னிடம் முன்பே கூறி யிருந்தால், இம்மாதிரி ஒருபோதும் நடந்து கொண்டிருக்கவும் மாட்டேன்; உங்கள் இருவருடைய மனம் நோகவும் செய்திருக்க மாட்டேன்" என்று உணர்ச்சி ததும்பக் கூறினான் ரத்தினம்.

மூன்று வருஷங்கள் ஓடிவிட்டன. ரத்தினத்தின் கச்சேரி அரங்கேற்றமாயிற்று. வேலுப் பிள்ளையின் ஆசியுடனும், அவர் முன்னிலையிலும். இப்போது பிரபலமாய் விளங்கும் குளத்தூர் ரத்தினசாமிப் பிள்ளை வேறு யாரோ என்று நினைத்து விடவேண்டாம். நமது ரத்தினம்தான்!



"சிவநேசா, நான் இன்னும் சிறிது நேரமே இப்பூவுலகில் இருப்பேன். எனக்குப் பிறகு இந்த ராஜ்யத்தை ஆள வேண்டிய என் மகன் குலசேகரன் இளைஞன்; உலகம் தெரியாதவன். அவனை வீரனுக்கு நிழல் போல் அவனை நீங்காமல் இருக்க வேண்டியது உன் கடமை. நமது ரத்தின மாளிகையைக் குலசேகரனுக்குக் காண்பி. அம்மாளிகையின் மேன் மாடியிலுள்ள பதின் மூன்று அறைகளில் பன்னிரண்டு அறைகளை அவன் பார்க்கலாம். பதின் மூன்றாவது அறையை மட்டும் அவன் பார்க்க வேண்டாம். அந்த அறையின் பூட்டையே திறக்காதே. அந்த அறையில் பொன்னழகியின் வர்ண சித்திரம் இருக்கிறது. அந்த இணையற்ற சித்திரத்தைக் குலசேகரன் பார்க்க நேர்ந்தால் உடனே அவளது உவமை கூற முடியாத வனப்பில் சொக்கிப் போய் மயக்கமடைந்து கீழே விழுந்து விடுவான். பிறகு அதுவே அவன் உயிருக்கு யமனாகக் கூடும். பொன்னழகியை அடைவது என்பது யாராலும் முடியாத காரியம்!" என்று பெருமூச்சுக்கிடையில் கூறி மகாராஜா கொஞ்சம் நிறுத்தினார்.

சிவநேசர் அரசரை மிகவும் நன்றி உணர்ச்சியோடு பார்த்து "மகாராஜா, தங்கள் கட்டளைப்படியே நடக்கிறேன். இளவரசர் குலசேகரனை விட்டு ஒரு நொடியும் பிரியமாட்டேன். இந்த அரண்மனை உப்பைத் தின்று வளர்ந்த தங்கள் ஊழியனை நம்புங்கள்!" என்று கூறி அவர் அருகில் கண்களில் நீர் மல்க நின்றார்.

மகாராஜா, சிறிது நேரத்துக்கெல்லாம் கண்களை மூடிவிட்டார். குலசேகரன் கதறியழுதான். சிவநேசருக்கும் துக்கம் தாங்க முடியாமல் கதறினார்.

சிவநேசர் மகாராஜாவின் பால்யத் தோழர். அரசரோடு ஓடி, விளையாடி, ஆடிப் பாடிப் பழகியவர்; ராஜ குடும்பத்தோடு அநாதையான சிவநேசர் சிறு வயது முதற்கொண்டே ஈடுபட்டு விட்டதனால், மகாராஜா அவரைத் தம் சொந்தச் சகோதரர் மாதிரியே நடத்தி வந்தார். அரண்மனையில் அவருக்கு நல்ல செல்வாக்கு இருந்தது.

மகாராஜா இறந்து இரண்டு மூன்று வாரங்களுக்குப் பிறகு, கொஞ்சம் கொஞ்சமாகக் குலசேகரன் மனம் தேறினான். சிவநேசரின் அன்பு காரணமாக, ராஜகுமாரன் குலசேகரன் தன் தகப்பனார் இறந்த துக்கத்தைக் கொஞ்சம் மறந்து, ராஜ்ய நிர்வாகத்தைக் கவனிக்கலானான்.

மகாராஜா சொல்லி விட்டுப் போனபடி இரத்தின மாளிகையை இளவரசனுக்குக் காட்டுவதற்கு இதுதான் தகுந்த சந்தர்ப்பம் என்று தீர்மானித்தார் சிவநேசர்.

அன்று பொழுது புலர்ந்ததும் சிவநேசர் கையில் அரண்மனைச் சாவிக் கொத்துடன் குலசேகரனிடம் வந்தார்.

"இளவரசே, மகாராஜாவின் உத்தரவுப்படி நாம் இன்று இரத்தின மாளிகையைப்



பார்க்க வேண்டும். அந்த மாளிகையை மகாராஜா தம் உயிரைவிட அருமையாகப் பாதுகாத்து வந்தார். அவரது இளம் பிராயத்திலிருந்து அது அவருடைய மேற்பார்வையிலேயே இருந்து வந்திருக்கிறது."

"நண்பரே, நானே தங்களைக் கேட்க வேண்டும் என்றிருந்தேன். பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று. இப்பொழுதே போகலாமா?" என்று மிகவும் உற்சாகத்துடன் கேட்டான் குலசேகரன்.

"ஆகா, போகலாம்!" என்று கூறினார் சிவநேசர். இருவரும் குதிரைகளில் ஏறிக் கொண்டு இரத்தின மாளிகை யிருந்த அமைதியான இடத்திற்குப் புறப்பட்டனர்.

இரத்தின மாளிகை ஒரு இணையற்ற பொருட் காட்சிச் சாலையாக விளங்கியது. அந்த மாளிகையைச் சுற்றி வைக்கப் பட்டிருந்த நந்தவனம் வண்ண மலர்களின் வாசனை வீச மிகவும் செழிப்பாக இருந்தது. எங்கும் ஒரே பசுமை. தேச தேசங்களிலிருந்தெல்லாம் விதவிதமான பறவையினங்கள் கொண்டு வரப்பட்டு, வலைக் கம்பிகள் கட்டிய விசாலமான கூண்டுகளில் வளர்க்கப்பட்டு வந்தன.

குலசேகரன் இரத்தின மாளிகையில் நுழைந்ததும் ஒரே அதிசயக் கடலில் ஆழ்ந்து விட்டான்.

"நண்பரே, இத்தகைய ஓர் அற்புத மாளிகை நமது நகரத்திலிருக்கிறதென்று இது வரையில் எனக்குத் தெரியாது! மகாராஜா ஏன் இந்த மாளிகையை ஒரே புதல்வனை எனக்குக் கூடக் காட்டவில்லை!"

"இளவரசே, உங்களுக்குத் தக்க சமயத்தில் இந்த இரத்தின மாளிகையைக் காட்ட வேண்டும் என்று முன்னாலேயே என்னிடம் சொல்லியிருந்தார். விலை மதிக்க முடியாத எத்தனையோ சர்வ தேசப் பொருள்கள் அரும் பிரயாசையுடன் சேகரித்து வைக்கப் பட்டிருக்கும் இந்த மாளிகையின் மதிப்பைத் தெரிந்து கொள்ளும் ஆற்றலைத் தாங்கள் பெற்ற பிறகு இங்கு வரவேண்டும் என்பதே மன்னரின் அபிப்பிராயம். மாளிகைக்குள்ளே போய்ப் பார்த்தால் அது முற்றிலும் நியாயம் என்பதை நீங்களே உணர்வீர்கள்!"

இரத்தின மாளிகைக்குள் புகுந்து ஒவ்வொரு பொருளையும் பார்த்ததும் குலசேகரனுக்குத் தாங்க முடியாத வியப்பின் காரணமாக அவனுக்கு மூச்சே நின்று விடும்போல் இருந்தது.

எத்தனை எத்தனை அதிசயமான பொருள்கள்! நவரத்தினங்கள்! வைடூரியங்கள்! கோமேதகங்கள்! மாணிக்கங்கள்! எல்லாம் விலை மதிக்க முடியாதவை! அம்மம்மா! குலசேகரனுக்குத் தான் காண்பது கனவா நினைவா என்று சந்தேகமாய்ப் போய் விட்டது. இவ்வளவு சிறந்த கலைப் பொருள்களை அரும்பாடுபட்டுச் சேகரித்து வைத்த தன் தகப்பனாரைப் பற்றி நினைத்த போது அவனுக்கு அவரிடம் மதிப்பும் மரியாதையும் உண்டாயின.

இரத்தின மாளிகையின் மேல் மாடியிலுள்ள அறைகளை ஒவ்வொன்றாகத் திறந்து சிவநேசர் குலசேகரனுக்குக் காட்டினார். ஒவ்வொரு அறையிலும் உள்ள அதிசயப் பொருள்களைப் பார்த்து, அவன் ஆச்சரியத்தினால் அயர்ந்து போனான்.

பன்னிரண்டு அறைகளையும் பார்த்தாயிற்று. பதின்மூன்றாவது அறையின் அருகே வந்ததும் சிவநேசர் அதைக் கவனியாதவர் போல் குலசேகரனை அழைத்துக் கொண்டு வேகமாக, அடுத்த பக்கத்துத் தாழ்வாரத்துக்குப் போனார்.

"நண்பரே, இந்த அறையைப் பார்க்க வில்லையே!" என்றான் குலசேகரன்.

சிவநேசர், "அந்த... அறையில்... ஒன்றும் இல்லை!" என்று தயங்கினார்.

"ஒன்றும் இல்லா விட்டால் பாதகம் இல்லை. இந்த மாளிகையில் இருக்கும் காலி அறையும் அழகாய்த் தானிருக்கும் பார்க்கலாம், திறவுங்கள்!"

"மகாராஜாவின் உத்தரவு. அந்த அறையை நீங்கள் பார்க்கக் கூடாது!"

"ஏன்?"

"பார்த்தால் கெடுதி சம்பவிக்கும்!"

அடுத்த நிமிஷம் சிவநேசரின் கையிலிருந்த சாவிக் கொத்தைப் பலவந்தமாகப் பிடுங்கிக் கொண்டு, குலசேகரன் அந்தப் பதின்மூன்றாவது அறையைத் திறந்தான்.

என்ன ஆச்சரியம்! பொன்னழகியின் இணையற்ற, தத்ரூபமான வர்ண சித்திரம் புன் முறுவலுடன் குலசேகரனை வரவேற்றது. குலசேகரனால் அதிசயமான பிரமையைத் தாங்க முடியவில்லை. அடுத்த நிமிஷம் மயக்கமடைந்து இளவரசன் தடாலென்று கீழே சாய்ந்தான். (தொடரும்)



பிரிவுக்குப் பின்

பி.எஸ்.மணி

மாலை வெய்யில் மனோரம்மியமாயிருந்தது. தோட்டத்தில் சாய்வு நாற்காலியை சனிசேரை எடுத்துப் போட்டுக் கொண்டு அதில் சாய்ந்தேன். அசதி என் கண்களை மூடச் செய்தது.

என் குழந்தையின் அழுகுரல் என்னைக் கண் விழிக்கச் செய்தது. என் முன்னே ஜயம் அழும் குழந்தையைச் சமாதானப் படுத்திக் கொண்டு நின்று கொண்டிருந்தாள்.

"ஜயம்! உன்னிடம் சொல்ல மறந்து விட்டேனே! என்னுடைய தோழன் பாலுவுக்குப் பெரிய பணக்கார இடத்தில் கல்யாணம் நிச்சயமாகியிருக்கிறது. அடித்தாலும் இப்படியல்லவா அதிர்ஷ்டம் அடிக்க வேண்டும்!" என்றேன்.

"போதுமே! உங்கள் பாராட்டு! உங்கள் நண்பரின் வாழ்க்கை சந்தோஷமாகவா இருக்கும் என்று எண்ணுகிறீர்கள்! தரத்துக்கேற்ற இடத்தில் சம்பந்தம் செய்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் பக்கத்துப் பங்களாவில் நடந்த படிதான் நடக்கும்" என்ற புதிரைப் போட்டு விட்டு, அதற்குள் என் தாயார் கூப்பிடவே வீட்டினுள் சென்று விட்டாள். அப்புதிருக்கு அவள் விடை அளிக்கவில்லை. அவளுடைய புதிர் என்னுடைய உள்ளத்தில் ஆயிரம் கேள்வி-பதில்களைத் தயாரித்து விடை காணுவதற்கு முயன்று கொண்டிருந்தது.

அடுத்த பங்களாவில் பிரபல பணக்காரர் லக்ஷ்மணய்யர் இருந்தார். அவருக்கு ஒரு பெண்ணும் பிள்ளையுமிருப்பதாகவும், பெண்ணுக்குக் கல்யாணமாகி விட்டதாகவும் கேள்விப்பட்டிருந்தேன். ஆனால் அவர்கள் வீட்டில் நடந்த எந்தவைய கசப்பு சம்பவம் ஜயத்தின் புதிருக்குத் தகுந்த விடையாயிருக்கும் என்று மட்டும் என்னால் தெரிந்துகொள்ள முடியவில்லை. அதை அறிந்துகொள்ள என் மனம் துடிதுடித்தது. ஆனால் ஜயத்தைப் போய்க் கேட்டால் பிகு அல்லவா பண்ணிக் கொள்வாள்!

ஆனால் அதைப்பற்றி ஜயத்தைக் கேட்காமலே காணுகவே தெரிந்து கொள்ளும்படி நேரும் என்று கனவிலும் கருதவில்லை.

* * *

எங்கள் வீட்டில் எலி உபத்திரவம் அதிகம். அதற்காக இரண்டு பூனைகளை வளர்த்து வந்தேன். பூனை வளர்ப்பதற்கு எங்கள் வீட்டில் பலத்த எதிர்ப்பு இருந்தது. பூனையின் முகத்தில் விழித்தால் அபசகுனம் என்று முணங்கிக் கொண்டிருந்தாள் எனது தாயார். ஆனால் என்னுடைய பிடிவாதத்தினால் தான் பூனைகள் இரண்டும் என் வீட்டில் இருந்து வந்தன.

அன்று மாலையில் இரண்டு பூனைகளும் வராந்தாவில் விளையாடிக்கொண்டிருந்தன. பக்கத்து வீட்டிலுள்ள சிறுவன் சுவர் மேல் ஏறிப் பூனைகள் விளையாடுவதைக் கண் கொட்டாமல், ஆவலுடன் பார்த்துக் கொண்டிருந்தான். அந்தப் பாலகனின் அருள் தருகின்ற பார்வையும், கள்ளங் கபடற்ற முகமும் என்னைப் பெரிதும் கவர்ந்து விட்டன.

"அம்பி! ஏன் இப்படிச் சிரமப்பட்டு எட்டி எட்டிப் பார்க்கிறாய்! வீட்டுக்குள் வந்து பூனைகள் விளையாடுவதைப் பாரேன்" என்றேன்.

நான் சொன்னதுதான் தாமதம்; அடுத்த நிமிஷம் எங்கள் வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு அச்சின்னஞ் சிறு பையன் வந்து சேர்ந்தான். என்னைச் சிறிதும் பொருட்படுத்தாமல் பூனைகளின் அருகில் சென்று அதற்குத் தடவிக் கொடுத்தான்.

"அம்பி, உங்கள் வீட்டில் பூனை இல்லையா!" என்று கேட்டேன்.

"இல்லை!" என்று பூனைகளுக்குத் தடவிக் கொடுத்தபடியே பதிலளித்தான் அவன்.

"ஏன்! உனக்குத்தான் பூனைகளிடம் பிரியம் அதிகமிருக்கிறதே! உன் அப்பாவிடம் சொன்னால் வாங்கி வந்து தர மாட்டாரா!"

"என் அப்பாதான் இங்கே இல்லையே!" என்று கண் கலங்கக் கூறினான் அந்தப் பையன்.

மேலும் அவன் குடும்பத்தைப் பற்றிக் கேட்டு அவன் வருத்தத்தைக் கிளறாமல், "அப்படியானால் நீ இந்தப் பூனைகளில் ஒன்றை எடுத்துப் போகிறாயா?" என்று வினவினேன்.

"என்ன! எனக்குப் பூனையைத் தந்து விடுவீர்களா! உங்களுக்கு வேண்டாமா!"

"பரவாயில்லை! எங்கள் வீட்டில் ஒரு பூனை இருந்தால் போதும். நீ ஒன்றை எடுத்துச் சென்றால் எப்பொழுதும் அதனுடன் நீ விளையாடிக் கொண்டிருக்கலாம்."

அச்சிறுவன் அடைந்த ஆனந்தத்துக்கு அளவில்லை. பூனைகளில் ஒன்றை அலக்காகத் தூக்கிக் கொண்டு வீட்டை நோக்கி ஓடினான். அப்பா! அச்சமயத்தில் அவன் முகம் எவ்வளவு பிரகாசமாயிருந்தது! அதைக் கண்டு எனக்குத்தான் எவ்வளவு ஆனந்தமாயிருந்தது! வீட்டிலிருந்து ஒரு பூனை போய் விட்டதில் என் தாயாருக்குத்தான் எத்தனை மகிழ்ச்சி!

மாலைக் கதிரவன் கொஞ்சம் கொஞ்சமாக மலை வாயிலில் சாய்ந்தான். இருள் எங்கும் சூழத் தொடங்கியது. அடுத்த வீட்டுப் பையன் பூனை

யுடன் திரும்பி வந்தான். அவன் முகம் தோல்வியினால் வாடிப் போயிருந்தது. கண்களில் நீர் முத்து முத்தாகத் தேங்கி யிருந்தது.

" அம்மா பூனையை வைத்துக்கொள்ளக் கூடாது என்று சொல்லி விட்டாள். பூனை வளர்ப்பது பாவமாம் !" என்று கம்மிய குரலில் சொன்னான் அந்தச் சிறுவன். அவன் கையிலிருந்த பூனை தாவி மற்றொரு பூனையை ஆவலுடன் அணுகியது.

" அழாதே, அம்பி ! பூனை இங்கே யிருந்தால் என்ன ! நீ எப்பொழுது வேண்டுமானாலும் இங்கு வந்து அவைகளுடன் விளையாடலாம் " என்றேன், அவன் கண்களில் ஆறாக வழிந்த நீரைத் துடைத்த வண்ணம்.

அச் சின்னஞ் சிறுவனும் 'ஆகட்டும்' என்று தலை யசைத்தான்.

" உன் பெயர் என்ன ! சமர்த்தாக யிருக்கிறாயே !" என்றேன்.

" சீனு !" என்று பதிலளித்துவிட்டு, " மாமா ! நாழிகையாகி விட்டது. அம்மா ரொம்பக் கோவிச்சுப்பா !" என்று கூறி விட்டுத் தன் வீட்டை நோக்கி விரைந்தான்.

தினம் மாலையானதும் சீனு எங்கள் வீட்டுக் கதவைத் திறந்து கொண்டு பூனைகளுடன் விளையாட வந்து விடுவான். ஒரு மணி நேரம் அதனுடன் குதித்துக் குதித்து விளையாடுவான். அவனுடைய பிஞ்சு உள்ளத்தில் எழும் பேரானந்தத்தைக் கண்டு நானும் சந்தோஷ மடைவேன்.

ஒரு நாள் சீனு பூனைகளுடன் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது புதிய மனிதர் ஒருவர் வீட்டினுள் வந்தார். அடையாளந் தெரியாததால் அவரை வியப்புடன் நோக்கினேன். சீனு செருப்பின் சத்தம் கேட்டுத் திரும்பிய பொழுது வந்த மனிதரை அடையாளந் தெரிந்து கொண்டு " அப்பா !" என்று கூவி அவர் காலைப் பலமாகக் கட்டிக் கொண்டான்.

"என்ன அப்பா! என்னைத் தனியாக விட்டுவிட்டு நீ எங்கேயோ போய் விட்டாயே ! இன்று நீ என்னை உன்னுடன் அழைத்துப் போக வேண்டும் " என்று கூறினான் சீனு.

வந்தவர் அவனைத் தூக்கித் தன் மடியிலிருத்திக் கொண்டார். இந்த அதிசயக் காட்சியைக் கண்டு நான் வியப்புற்று நின்றேன். என்னுடைய வியப்பைப் புரிந்து கொண்டுதானோ என்னவோ அவர் தாமாகவே தம்முடைய கதையைக் கூறத் தொடங்கினார்.

* * *

சீனுவின் தகப்பனார் ரகுராமன் எளிய குடும்பத்தில் பிறந்தவர். லக்ஷ்மி தேவியின் அருள் இல்லாவிட்டாலும் கலைவாணியின் பூரண கடாட்சம் அவருக்கிருந்தது. எம். ஏ. வகுப்பில் அவர் மாகாணத்திலேயே முதன்மையாகத் தேறினார்.

அவருடைய புத்திசாலித் தனத்தைக் கண்டு வியந்த சென்னையில் லட்சாதிபதியா யிருந்த லக்ஷ்மணய்யர் தம் பெண் கமலாவை அவருக்கு மணம் முடித்து வைத்தார். அதோடு அவரைத் தம் வீட்டோடு வைத்துக் கொண்டார்.


பிரும்மாண்டமான பங்களா, வெளியில் போய் வரக் கார், கூப்பிட்ட குரலுக்குக் கேட்க வேலையாள், இத்தகைய நவ நாகரிக வசதிகளைத்தும் மாமனார் வீட்டில் ரகுராமனுக்குக் கிடைத்த போது அவர் தாம் சொர்க்க லோகத்தில் வாழ்ந்து கொண்டிருப்பதாகவே கனவு கண்டார்.

ரகுராமனுக்கு அத்தகைய படாடோப வாழ்க்கை சிறிது நாட்களுக்குத்தான் பேரின்ப மளித்தது. மாமனார் வீட்டிலே மாப்பிள்ளை அடைக்கலம் புகுந்தால் இளக்காரம்தானே ! வீட்டிலுள்ள அனைவரும் அவரை அலட்சியப்படுத்திய பொழுது அவருக்கு வாழ்க்கை வேம்பாகக் கசந்தது. ஆனால் அதைவிட அவருக்கு மிகுந்த வேதனையை யளித்தது அவர் மனைவி கமலா அவரைச் சிறிதும் மதிக்காததுதான். பணமும் பவிஷும் இருந்துவிட்டால் மட்டு மரியாதையை அல்லவா அழுக்கி விடுகிறது !

ஒரு நாள் மாலை ரகுராமன் தன் அருமை மனைவி கமலாவிடம், " நாமிருவரும் சேர்ந்து நாட்டியத்துக்குப் போய் விட்டு வரலாமா !" என்று அன்பு கலந்த குரலில் வினவினார்.

" நான் வருவதற்கில்லை. இன்று ஜில்லா கலெக்டர் மனைவிக்குப் பிரிவுபசார விருந்து நடக்கப் போகிறது. அதற்கு நான் போகவேண்டும்......" என்று கூறினாள் கமலா அலட்சியமாக.

பேஷான யோசனை !



"கமலா நீ போகத்தான் வேண்டுமா!" என்று தளர்ந்த குரலில் கேட்டார் ரகுராமன்.

"நாம் நாட்டியத்துக்கு என்றைக்கு வேண்டுமானாலும் போகலாம். விருந்து இன்னொரு நாளைக்கு மாற்றி வைத்துக்கொள்ள முடியுமா! ......கார் இருக்கிறது. நீங்கள் வேணுமானால் சீனுவை அழைத்துக்கொண்டு போய் வாருங்கள்" என்று கூறி விட்டு 'விர்'ரென்று போய் விட்டாள். ரகுராமனுக்குக் கமலாவின் மரியாதையற்ற பேச்சு அளவற்ற துயரை யளித்தது.

ஆனால் அன்று நடந்ததை விட மற்றொரு நாள் நிகழ்ந்த சம்பவம் ரகுராமனை வீட்டை விட்டே வெளியேறும்படி செய்துவிட்டது.

ரகுராமன் தன்னந் தனியாய்ப் புத்தகமே கதியென்று தன்னறையில் அமர்ந்திருந்தார். என்றுமே அந்த அறையை நெருங்கியிராத கமலா திடுதிப்பென்று பிரவேசித்து, "என்ன! என் தம்பி ராஜுவைப் பற்றி ஏதாவது சொன்னீர்களா!" என்று கேட்டாள்.

"நான் ஒன்றும் சொல்லவில்லையே! உன் தம்பியைப் பற்றி அவதூறாகப் பேசுவதற்கு எனக்கு என்ன பைத்தியமா பிடித்திருக்கிறது!"

"நீங்கள் நம் வீட்டு மானேஜரிடம் என் தம்பியைப் பற்றி என்ன குறை கூறினீர்களாம்!" என்று மறுபடியும் பன்னிப் பன்னிக் கேட்டாள்.

"பெரிய வழக்கு விசாரிப்பது போல அல்லவா இருக்கிறது நீ கேட்கும் கேள்வி!"

"நீங்கள் கையில் பரீட்சை 'ரிஸல்ட்' வந்த பத்திரிகையை வைத்துக் கொண்டு அஸ்திவாரம் பலமாக இருந்தால்தான் கட்டிடம் ஸ்திரமாக இருக்கும் என்று கூறவில்லையா!"

"அட ஈஸ்வராமே! வீட்டுக்கு அஸ்திவாரம் பலமாக இருக்க வேண்டும் என்று அவரிடம் கூறியது வாஸ்தவந்தான். அதற்கும் உன் தம்பிக்கும்' என்ன சம்பந்தம்!"

"அவன் மூன்று வருஷங்களாகப் 'பெயிலாகி' விட்டதைக் கேலியாகக் கூறினீர்களாம். என் தாயாரிடம் கேவிக் கேவி அழுது கொண்டிருக்கிறான். நீங்கள்தான் அவனைச் சமாதானப்படுத்த வேண்டும்" என்று கூறி விட்டு அங்கிருந்து போய் விட்டாள் கமலா.

ரகுராமனுக்குக் கமலாவின் விபரீதமான குற்றச் சாட்டு மன வருத்தத்தை யளித்தது.

இச்சமயத்தில் சமையற்காரன் அவரைச் சாப்பிட அழைக்கவே உள்ளத் தாங்கலோடு உணவு உட்கொள்ளச் சென்றார்.

தயாராக அவருக்கு இலைபோட்டுக் காத்திருந்தது. சிறிது தூரத்தில் அவரது மைத்துனன் ராஜு 'உம்'மென்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு சாப்பிடத் தயாராக உட்கார்ந்திருந்தான்.

ரகுராமன் சாப்பிட உட்கார்ந்தார். சமையற்காரன் பரிமாறத் தொடங்கினான். அவருடைய மனக் கசப்புக்குத் தகுந்தபடி அன்றையச் சமையலும் கசப்பை யளித்தது. சமையற்காரன் கறி வகைகளிலெல்லாம் உப்புப் போடுவதற்கு மறந்து விட்டான். அவருக்குச் சாப்பாடு உள்ளே செல்லவில்லை.

சமையற்காரன் வந்ததும், "என்ன அப்பா! கறி வகைகள் எல்லாவற்றிலும் உப்புப் போடவில்லையே!" என்று அவனைக் கொஞ்சம் கடிந்து கொண்டார் ரகுராமன்.


சமையற்காரன், "ஓகோ! அவசரத்தில் உப்புப் போட மறந்து விட்டேன். மன்னித்து விடுங்கள்" என்று கூறிவிட்டு உப்பு எடுத்து வருவதற்கு ஓடினான்.

இத்தருணத்தில் ராஜு ரகுராமன் காதில் படும்படியாக, "அவருக்குத்தான் உப்பு தேவையில்லையே! தேவையிருந்தால் மாமனார் வீட்டில் இப்படி அடைக்கலமாகி யிருப்பாரா!" என்று தன் கோபத்தை யெல்லாம் காட்டி முணுமுணுத்து விட்டான்.

ராஜுவின் பரிகாசம் அவருடைய இதயத்தைச் சம்மட்டி கொண்டு பிளப்பது போல் உடைத்துத் தள்ளிவிட்டது. வேதனை குமுற, கோபம் கண்களில் பொறி பறக்கப் பாதி சாப்பாட்டிலேயே எழுந்து வந்து விட்டார் அவர்.

தம்முடைய அறையில் படுக்கையில் போய்ப் பொத்தென்று விழுந்தார். அவர் இதயத்தை அழுத்திக் கொண்டிருந்த துயரமெல்லாம் கண்ணீராக உருவெடுத்தது. பட்டமும், பணமும், பதவியுமிருந்து விட்டால் பிறரை அலட்சியப் படுத்துவது என்பது மனிதர்களுக்கு இயல்பாக அமைந்து விடும் குணமோ! மட்டும் மரியாதையுமற்ற இவ் வீட்டில் இருந்தால் அவமானப்பட்டுச் சாக வேண்டியதுதான். சுதந்திரமற்ற அடிமை வாழ்வை யாரால்தான் ஏற்க முடியும்! இதற்கு என்ன வழி! வீட்டை விட்டு வெளியேறி மானமாகப் பிழைக்க வழிதேட வேண்டியதுதான். இத்தகைய சிந்தனைகள் அவர் மனத்தில் அலைமோதி அவரை ஒரு முடிவுக்கு வரச் செய்தன.

அவர் முடிவை உருவாக்குவதற்கு ஏற்றாற்போல் அவர் நண்பருடைய கல்யாணம் திருச்சியில் நடக்க



விருந்தது. நண்பர் கல்யாணத்துக்குப் போய்த் திரும்பிய பொழுது அவர் தனி இடம் தேடிக் கொண்டு போய் விட்டார். வேலையும் கிடைத்து விட்டது. அதற்குப் பிறகு ரகுராமன் கமலாவின் வீட்டை ஏறெடுத்தும் பார்க்க வில்லை.


ரகுராமன் தனி வீடு பார்த்துக் கொண்டு விட்டதையறிந்ததும் கமலா தன் தம்பி ராஜுவை அனுப்பி அவரை அழைத்து வரச் சொன்னாள். ராஜு அவரிடம் இரண்டு மூன்று தடவைகள் வந்து, "கமலா உங்களை அழைத்து வரச் சொன்னாள். ஏதாவது தவறு செய்திருந்தால் மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டாள். நீங்கள் அங்கு வந்து விடவேணும். அங்குள்ள சௌகரியம் இங்கு கிடைக்குமா!" என்று கூறினான்.

"எனக்கு எளிய வாழ்க்கைதான் பிடித்திருக்கிறது. எனக்கு அங்கு வரப் பிரியமில்லை" என்று பிடிவாதமாகக் கூறிவிட்டார் ரகுராமன். அவன் போய் விட்டான்.

அவர்கள் வீட்டுக்குப் பிடிவாதமாகப் போக மறுத்தாலும் குழந்தை சீனுவைப் பார்க்கவேண்டுமென்கிற ஆவல் அவர் மனத்தில் இருந்து கொண்டே தானிருந்தது. அந்த ஆசையை எப்படி நிறைவேற்றிக் கொள்வது என்பதுதான் அவருக்குத் தெரியவில்லை. தற்செயலாக இன்று தெருவின் பக்கம் வந்தவர் சீனு தன் மாமனாரின் பங்களாவுக்குப் பக்கத்து வீட்டில் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டதும் அவனைப் பார்க்க அவர் மனம் விழைந்தது.

*   *   *

ரகுராமன் தன் கதையைக் கூறி முடித்ததும், அவர், "என் வாழ்க்கையில் சுதந்திரம் இருக்கிறது. பிறரை எதிர்பார்த்து நடக்க வேண்டியதுமில்லை. ஆனால் என் அருமைக் குமாரன் சீனு என் அருகில் இல்லாததுதான் எனக்குப் பெருங் குறையாக இருக்கிறது" என்றார். அவருடைய கண்களில் கண்ணீர் முட்டி நின்றது.



"அப்பா, நானும் உங்களுடன் வந்துவிடுகிறேன்" என்று கூறி அவர் கழுத்தைக் கட்டிக் கொண்டான் சீனு.

"சீனு! உன்னை இன்னொருநாள் வந்து அழைத்துப் போகிறேன். நீ அழாமல் சமர்த்தாயிருக்க வேண்டும். தெரிந்ததா!" என்று கூறிச் செல்லமாக அவன் கன்னத்தில் தட்டினார். பிறகு என் பக்கம் திரும்பி, "நீங்கள் என் குமாரனிடம் அன்பாக நடந்து கொள்வதற்கு என் நன்றி. உங்கள் வீட்டில் அழையாமல் நுழைந்ததற்கு என்னைத் தாங்கள் மன்னித்துவிட வேண்டும்" என்று கூறிவிட்டுப் போய்விட்டார் ரகுராமன். சீனு அவர் போவதைக் கண்டதும் விசித்து விசித்து அழத் தொடங்கினான்.

ரகுராமன் வந்து பேசிக் கொண்டிருந்ததில் எனக்குப் பொழுது போனதே தெரியவில்லை. இருட்டி விட்டது என்பதற் கறிகுறியாக வேலைக்காரன் மின்சார விளக்கைப் பொருத்தினான்.

"சீனு! நேரமாகவில்லையா! உங்கள் வீட்டுக்குப் போனால் அம்மா கோபித்துக் கொள்ள மாட்டாளா!" என்றேன்.

சீனு பதிலே பேசவில்லை. அப்பாவைப் பிரிந்த ஏக்கத்தினால் 'உம்'மென்று முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்தான்.

இச்சமயத்தில் யாரோ இருவர் என் வீட்டுக்குள் வரவே, "சீனு, உன்னைத் தேடி வந்துவிட்டார்கள்!" என்றேன்.


சீனு நெருங்கி வந்த இருவர்களைப் பார்த்ததும் "அப்பா! அம்மா!" என்று கூவிக்கொண்டே அவர்களைக் கட்டிக் கொண்டான். ரகுராமனோடு வந்தவள் அவர் மனைவி என்று அறிந்தபோது நான் திகைத்துப் போனேன்.

"நான் உங்களிடம் கூறிய என் கதையெல்லாம் என் மனைவி கமலாவின் காதிலும் விழுந்துவிட்டது ஆபத்தாகப் போய்விட்டது. பணமும் பதவியும் அவள் கண்களை மறைத்து விட்டதாம். என்னைப் பிரிந்த பிறகு அவளை எல்லோரும் பலவிதமாக ஏசிக் காட்டத் தொடங்கி விட்டார்களாம். வீட்டை விட்டு அவளால் வெளியே வர முடியவில்லையாம். தன்னை மன்னித்து ஏற்றுக்கொள்ள வேண்டும் என்கிறாள். அவள் என்னோடு என் வீட்டுக்கு வருவேன் என்று பிடிவாதம் பிடிக்கிறாள். பெரிய பங்களா, கார் வசதி யெல்லாம் துறந்து என்னுடன் வரப் போகிறாளாம்......" என்று கூறிக்கொண்டே போனார் ரகுராமன். வியப்பினால் ஸ்தம்பித்துச் சிலைபோல் இருந்தேன்.

"அப்பா! நானும் உன்னிடந்தான் இருப்பேன்" என்று குதித்தான் சீனு.

"நீ இல்லாமலா, கண்ணு! வா போகலாம்!" என்று அவனிடம் கூறிவிட்டு என் பக்கம் திரும்பி, "ஸார்! போய் வருகிறோம். எங்கள் புதிய வீட்டுக்கு நீங்கள் ஒரு நாள் அவசியம் வரவேண்டும்!" என்று வேண்டிக் கொண்டார். நானும் 'ஆகட்டும்' என்று தலையசைத்தேன்.

ரகுராமன் தம்பதிகள் குழந்தை சீனு சகிதமாகப் புறப்பட்டார்கள். சீனுவிடம் போகும் பொழுது அவனுக்குப் பிரியமான பூனை ஒன்றைக் கொடுத்து அனுப்பினேன். ரகுராமன் தம்பதிகளைப் பின் தொடர்ந்து சீனு தன் தோழன் பூனையுடன் ஓடிக் கொண்டிருந்தான். அந்த அதிசயக் காட்சியைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்ததில் எனக்கு நேரம் போனதே தெரியவில்லை.





செம்மையான செய்முறை 2.

போர்க்கு, பிரேம், மட்கார்டு இவைகள் பிரத்தியேகமான இனாமல் இயந்திரங்களில் சுத்தமான பிடிப்புடனும் பளபளப்புடனும் இனாமல் பூசப்பட்டவை.

ஹிந்த் சைகிள்

இந்தியாவிற்கே சொந்தமானது

இந்தியாவில் மிகப் பெரியதும், மிகவும் நூதனமான சைக்கிள் தயாரிக்கும் இயந்திரங்களில் செம்மையாகத் தயாரிக்கப்பட்ட ஹிந்த் சைக்கிள்கள் உயர்ந்தரக இயந்திரங்களை நியாயமான விலையில் வாங்க விரும்பும் வாடிக்கைக்காரர்களுக்குப் பிடித்தமானது.

ஹிந்த் சைகிள்ஸ் லி., 250, வர்லி, பம்பாய் 18.

ASP/HC 498

ஆரோக்கிய ரகசியம்

வி. என். குமாரஸ்வாமி

58. சந்தேக விளக்கம்


கேள்வி: எனக்கு மலேரியாக் கட்டி வந்து இப்பொழுது இடது பக்கம் முழுதும் பரவிவிட்டது. இது கரைவதற்கு ஆசனமேதாவது உண்டா!

பதில்: உண்டு. முதல் வாரம் புஜங்காசனம் 3 தடவை, சலபாசனம் 3 தடவை, பஸ்சிமோத்தானாசனம் 3 தடவை, சர்வாங்காசனம் 1 நிமிஷம் வீதம் 3 தடவை, மத்ஸ்யாசனம் 1 நிமிஷம், அர்த்தமத்ஸ்யேந்திராசனம் 3 தடவை. திரிகோணு 3 தடவை. ஜானுசிர்ஷாசனம் 3 தடவை, சாந்தி ஆசனம் 5 நிமிஷம், நாடி சுத்தி 11 தடவை செய்ய வேண்டும். சர்வாங்காசனம், வாரத்திற்கு 1 நிமிஷம் வீதம் அதிகரித்து வந்து 7 நிமிஷம் 3 தடவை செய்யலாம்; 5வது வாரத்தில் சிரசாசனம் 1 நிமிஷம் ஆரம்பித்து நாளடைவில் 7 நிமிஷம் வீதம் 3 தடவைகள் செய்ய வேண்டும். சிரசாசனத்தை மத்ஸ்யாசனம் செய்த பின் செய்து, பிறகு மேற்கொண்டு செய்ய வேண்டியதைச் செய்யலாம். நாடி சுத்தி 2 தடவைகள் செய்யலாம். ஆகார விஷயத்தில் பத்தியமாய் இருக்கவேண்டும்.

உணவில் தினசரி கீரை அவசியம் சேர்க்க வேண்டும். கரிசலாங்கண்ணி, பொன்னாங்கண்ணி, அரைக்கீரை, வசலை, காசினிக்கீரை, முருங்கை, அகத்தி இலைகளை மாறி, மாறி உபயோகிக்கலாம். காய்கறி அதாவது தக்காளி, காரட் போன்றவைகளின் சூப் நல்லது. பால் சேர்க்கலாம். பழங்கள், பழரசம் தாராளமாய்ச் சேர்க்க வேண்டும். காரம் குறைக்க வேண்டும். புளிக்குப் பதில் எலுமிச்சை நல்லது. முழுத் தவிட்டுடன் அரிசி, கஞ்சி வடிக்காமல் சிறிதும், மற்ற காய்கறி, கீரை வகைகள் அதிகம் சேர்க்கலாம். மோர் நல்லது. காப்பியைச் சிறிது, சிறிதாகக் குறைத்து வந்து நிறுத்திவிடவும். எண்ணெயில் சுட்ட பலகாரங்கள் கூடாது. ஆவியில் வெந்தது நல்லது. 6 மாதத்தில் கட்டி கரைந்துவிடும். சிலருக்கு 3 மாதத்தில் கூடச் சுகமாய் விடும்.

கேள்வி: கல்கியில் ஆரோக்கிய ரகஸ்யக் கட்டுரைகளைப் படித்து, அதன்படி ஆசனம் செய்து, பல குறைகள் நீங்கி சுகமடைந்த பல்லாயிரக் கணக்கானவர்களில் நானும் ஒருவன் என்பதை மிக நன்றியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். எனக்குத் தற்சமயம் ஒருவேலை கிடைத்துச் செய்து வருகிறேன். அது மாதம் 25 நாட்களும் வெளியூர்களில் சுற்றும் வேலை. தவிட்டுடன் கூடிய அரிசியைச் சமைத்துச் சாப்பிட்டு வழக்கமாகி விட்ட எனக்குத் தவிட்டை நீக்கிய முத்துப் போன்ற பாலிஷ் அரிசிச் சாதம் என் கண்களுக்கு விஷத்திலும் கொடியதாகத் தெரிகிறது. இதை இந்த 25 நாளும் சாப்பிடுவது எப்படி என்பதே எனக்கு ஒரே கவலையாய்ப் போய்விட்டது. இந்த சத்தில்லா ஓட்டல் சாப்பாட்டைச் சாப்பிட்டுக் கொண்டு நான் ஆசனம் செய்யலாமா! நான் சர்வாங்காசனம் ஐந்து நிமிஷம், மத்ஸ்யாசனம் ஒன்றேகால் நிமிஷம், சிரசாசனம் ஐந்து நிமிஷம், யோகமுத்ரா ஆறு தடவை அப்யசிக்கிறேன். இதை இப்படியே தொடரலாமா! வேறு ஏதாவது மாறுதல் செய்ய வேண்டுமா! தயவு செய்து விளக்கும்படியாகக் கோருகின்றேன்.

பதில்: நீங்கள் ஆசனங்கள் செய்து உங்கள் குறையை நீக்கிக் கொண்டதற்குச் சந்தோஷம் அடைகின்றேன். வேலை கிடைத்தது. அதனிலும் சந்தோஷம். ஆனால் வெளியூர்களில் சுற்றும் போது வீட்டுச் சௌகரியம் கிடைக்காதுதான். இம்மாதிரி அநேகர் இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் இதே கஷ்டம்தான். அதற்கு ஒரு மாற்றைச் செய்து கொள்ளலாம். வீட்டில் வெல்லப் பாகு செய்து, அதில் சுத்தமான தவிட்டைப் போட்டுக் கலக்கி, சுண்டைக்காய் அளவு சிறு உருண்டைகளாகச் செய்து டப்பியில் போட்டுக் கைவசம் கொண்டு சென்றால், வெளியூர்களில் இம்மாதிரி பாலிஷ் அரிசி சாப்பிட நேரிடும் போது சாப்பாட்டிற்குப் பின்பு ஒன்று அல்லது இரண்டு தவிட்டுக் கோலிகளை வாயில் போட்டுச் சாப்பிடலாம். ருசியாகவும் இருக்கும். இம்மாதிரி செய்து குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். ஆரோக்கியத்திற்கு ஆரோக்கியம். ஒரு தின்பண்டமும் ஆயிற்று. இதை முன் காலத்துப் பாட்டிமார்கள் முக்கியமாய்க் கருப்ப ஸ்திரீகளுக்குக் கொடுப்பார்கள். இப்பொழுதுதான் விட்டமின் மருந்துகளும் பலவித தவிட்டுச் சத்துள்ள மருந்துகளும் ஏராளமாய் ஏற்பட்டு விட்டன. இம்மாதிரி



"நீங்கள் இந்த வீட்டைக் காலி பண்ணிப் போனால் உங்களுக்குத் தட்டு நிறைய அசோகா பாக்கும் தாம்பூலமும் வைத்து அனுப்புவதாக வீட்டுக்காரர் சொல்லுகிறார்!"

"பேஷாக அசோகா பாக்கும் தாம்பூலமும் மறுக்காமல் போட்டுக் கொள்கிறோம்! ஆனால் வீட்டைக் காலி பண்ண மாட்டோம்!"

செய்து தவிட்டுக் குறையை நீக்கினால் யாதொரு கஷ்டம் நேரிடாது.

ஆனால் நீங்கள் செய்யும் ஆசனம் மிகக் குறைந்த அளவேயாகும். அத்துடன் புஜங்காசனம் 3 தடவை, பஸ்சிமோத்தானாசனம், 3 தடவை, சர்வாங்காசனம் 5 நிமிஷம் வீதம் 3 தடவை, மத்ஸ்யாசனம் 2 நிமிஷம் 2 தடவை, சிரசாசனம் 5 நிமிஷம் 3 தடவை, யோகமுத்ரா 3 தடவை, திரிகோணா 3 தடவை, சாந்தி ஆசனம் 7 நிமிஷம், நாடி சுத்தி 21 தடவை செய்யலாம்.

கேள்வி :—நான் மெலிந்திருக்கின்றேன். முட்டை, பால் நிறையச் சாப்பிட்டும் உடல் கனக்கவில்லை. நான் கனக்க வேறு என்ன சாப்பிடலாம்! எந்த வித ஆசனம் செய்யலாம்!

பதில் :—மெலிவதும், கனப்பதும் குடும்பப் பரம்பரையைப் பொறுத்து இருக்கின்றன என்றாலும் ஆசனங்களாலும், ஆசன நியமங்களாலும் ஓரளவு தடுக்கலாம். தவிர கனப்பதும், மெலிவதும் ஓரளவு அவரவர்களின் உடல் உழைப்பு, செல்வாக்கு, நைராய்ட் கோளங்களின் ஆரோக்கிய நிலை இவைகளைப் பொறுத்தும் இருக்கின்றன. போதிய வருவாய் இல்லாமல் நல்ல சாப்பாடு கிடைக்காமல் மெலிந்திருப்பவர்களும் உண்டு. அவர்கள் நல்ல சாப்பாட்டைச் சாப்பிட்டால் கனப்பார்கள். நல்ல செல்வாக்கு இருக்கும். ஆனால் அவர்கள் சாப்பிடும் உணவு உடலில் ஒட்டாமல் குடல்கள், கல்லீரல் முதலியவைகளின் பலஹீனத்தினால் ஒட்டி உலர்ந்தே இருப்பார்கள். சிலர் தங்கள் இந்திரியங்களைக் கண்டபடி செலவிட்டாலும் மெலிவார்கள். முதலில் சொன்ன வறுமையில் வாடுபவர்களைத் தவிர, மற்றவர்கள் ஆசனமும், ஆகாரமும், ஒழுக்கமும் கைக்கொண்டால் கட்டாயம் ஓரளவு நல்லதிடமான உடல் அமைப்பைப் பெறலாம்.

அதற்கு முதலில் விபரீதகரணி 10 நிமிஷம் வீதம் 3 தடவை செய்ய வேண்டும். 2 வாரங்களுக்குப் பின் புஜங்காசனம், பஸ்சிமோத்தானா, சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம், திரிகோணா இவைகளையும் செய்யலாம். ஒரு மாதத்திற்குப் பின் உட்டியாணா, நௌளி செய்யலாம். உணவில் பால், வெண்ணை, பாதாம், பிஸ்தா, நெய், தயிர், பழ வகைகள், நிறையச் சேர்த்து வந்தால் உடல் தேறி வரும். சாப்பிட்ட உணவைக் குடல்கள் கிரகித்து, ரத்தத்துடன் சேர்க்கும். கல்லீரலும் விழிப்படைந்து சத்தை நன்கு சேகரித்துதவும். ஆனால் ஒரு நாளைக்கு மூன்று வேளைகளுக்கு மேல் சாப்பிடக் கூடாது.

கேள்வி :—பீனிசம் உள்ளவர்கள் சிரசாசனம் செய்யலாமா!

பதில் :—செய்யலாம். ஆனால் முதலில் புஜங்காசனம், பஸ்சிமோத்தானாசனம், சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம், அர்த்த மத்ஸ்யேந்திராசனம், யோகமுத்ரா, திரிகோணா இவைகளைச் செய்து ஒரு மாதமான பின் சிரசாசனம் துவங்கிச் செய்யலாம். ஆனால் நாடி சுத்தி தீவிரமாய் ஒரு நாளைக்கு 3 வேளைகளில் 21 தடவைகள் வீதம் செய்ய வேண்டும்; அல்லது கபால பாதி, பஸ்திரிகா செய்யலாம்.

கேள்வி : ஒரு மணி நேரம் ஆசனம் செய்யப் பிரியப்படுகிறவர்கள் எந்தெந்த ஆசனம் எவ்வளவு நேரம் அல்லது எத்தனை தடவை செய்யலாம்! அரை மணி நேரம் செய்ய வேண்டுமானால் எப்படி! அதுவும் முடியாமல் கால்மணி நேரம்தான் ஆசனத்திற்காக ஒதுக்க முடியும் என்பவர்களுக்கு எப்படி!

பதில் :—சாதாரணமாய் இந்த உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வதற்கென்று ஒரு மணி நேரமாவது தினம் ஒதுக்கினால்தான் நியாயம். நல்லதும்கூட. அரை மணி, கால்மணி நேரம் என்பவர்களைப் பற்றிச் சிந்தித்தால் வேடிக்கையாய்த்தான் இருக்கிறது. அவர்கள் தினசரி வாழ்க்கையில் இந்த ஒரு மணி நேரம் கூடவா கிடைக்காமல் போகும் என்று எண்ணத் தோன்றுகிறது. அப்பேர்ப்பட்டவர்களின் வேலை நேரங்களை ஒரு அட்டவணை போட்டுப் பார்த்தால் தெரியும், எவ்வளவு நேரத்தை அனாவசியமாய்ச் செலவு செய்கிறார்கள் என்பதை. ஆனால் ஏதோ ஒரு நாள் ஒரு அவசர காரியத்தின் நிமித்தம் ஒரு மணி நேரம் வழக்கப்படி செய்ய முடியாமல் பூராவும் விட்டு விடுவதைவிட அரை மணி, கால் மணி நேரமாவது ஆசனம் செய்ய விரும்பினால் அது நியாயம். ஆனால் அதையே வழக்கமாக்கி விடக் கூடாது. சாந்தி ஆசனத்தில் உடற் கூறுகளைப் பற்றி நினைத்துச் சாந்தி ஜெபம் அளிப்பதற்கே 10 நிமிஷமாகும்போது எப்படி கால்மணி நேரத்தில் ஆசனங்கள் செய்ய முடியும்!

இதுவரை வெளிவந்த ஆசனப் பிராணாயாமம் சரிவர செய்ய வேண்டுமானால் 2 மணி நேரம் ஆகும். ஆனால் எல்லாரும் அப்படிச் செய்ய வேண்டுமென்று அவசியமில்லை. ஒரு மணி ஒதுக்கினாலே போதும். இது சாதாரணமானவர்களுக்குத் தான். (நோயாளிகளுக்கு நோய்க்குத் தக்க ஆசனமும் நேரமும் மாறுதலடையும்.)

ஒரு மணி நேரம் செய்யக் கூடியவை.

புஜங்காசனம் ஒரு தடவைக்கு 20 விநாடியாக மூன்று தடவைக்கு ஒரு நிமிஷம். பஸ்சிமோத்தானாசனம் ஒரு தடவைக்கு 20 விநாடியாக மூன்று தடவைக்கு ஒரு நிமிஷம். சர்வாங்காசனம் ஒரு தடவைக்கு ஐந்து நிமிஷமாக மூன்று தடவைக்குப் பதினைந்து நிமிஷம். மத்ஸ்யாசனம் ஒரு தடவைக்கு ஒரு நிமிஷமாக மூன்று தடவைக்கு மூன்று நிமிஷம். சிரசாசனம் ஒரு தடவைக்கு ஐந்து நிமிஷமாக மூன்று தடவைக்குப் பதினைந்து நிமிஷம். அர்த்தமத்ஸ்யேந்திரா ஒரு தடவைக்கு அரை நிமிஷமாக இரண்டு பக்கமும் மூன்று தடவைக்கு மூன்று நிமிஷம். திரிகோணா ஒரு தடவைக்கு இருபது விநாடியாக மூன்று தடவைக்கு ஒரு நிமிஷம். உட்டியாணா மூன்று தடவைக்கு ஒரு நிமிஷம். நௌளியும், நௌளிகிரியாவும் ஆறு தடவைக்கு மூன்று நிமிஷம். சாந்தி ஆசனம் பத்து நிமிஷம். நாடிசுத்தி ஐந்து நிமிஷம். தியானம் இரண்டு நிமிஷம்.

இவைகளில் அரை மணி நேரம் செய்ய வேண்டுமானால் சர்வாங்காசனம் ஐந்து நிமிஷம், மத்ஸ்யாசனம் ஒரு நிமிஷம், சிரசாசனம் ஐந்து நிமிஷம், சாந்தி ஆசனம் ஐந்து நிமிஷம், உட்டியாணா, நௌளி ஐந்து நிமிஷம் நாடி சுத்தி தியானம் ஏழு நிமிஷம் இடையில் ஓய்வு இரண்டு நிமிஷம் ஆக அரை மணி செய்யலாம். கால் மணி நேரத்தில் சர்வாங்காசனம் மூன்று நிமிஷம், மத்ஸ்யாசனம் அரை நிமிஷம், சிரசாசனம் இரண்டு நிமிஷம், சாந்தி ஆசனம் ஐந்து நிமிஷம் நாடி சுத்தி தியானம் நாலு நிமிஷம். இடையில் அரை நிமிஷம். ஆக பதினைந்து நிமிஷம் செய்யலாம். சிலர் ஒவ்வொரு ஆசனங்களுக்கும் இடையில் நிறைய ஓய்வு எடுத்து வீணாய் நேரத்தைக் கடத்துகின்றார்கள். பலஹீனர்களும், நோயாளிகளும்தான் அம்மாதிரி ஓய்வு எடுக்கலாம். மற்றவர்கள் சற்று சுறு சுறுப்பாகவே ஆசனங்களைச் செய்ய வேண்டும்.

உங்களுடைய நல்ல அழகான படங்களுக்கு



கேவாபான்

பகல் வெளிச்சத்திலும், செயற்கை வெளிச்சத்திலும் இந்த மின்னல் வேக பான்க்ரோமாடிக் பிலிம் அதி நேர்த்தியான தெளிவையும், கலர்களைத் தத்ரூபமாகக் கிரகிக்கும் தன்மையும் கொண்டது.

சைஸ் 620 & 120—ரூ. 2/4



கேவாகுரோம்

பகல் வெளிச்சத்திற்கு உகந்த ஆர்தோகுரோமாடிக் பிலிம், நல்ல கிரகிக்கும் தன்மை, பிரகாசமான படிகள் பதிவு, விசாலமான தோற்றப் பிடிப்பு, மற்றும் நல்ல தெளிவு வாய்ந்தது.

சைஸ் 620 & 120—ரூ. 2/1



இலவச விளக்கங்களுக்கும் "கேவர்ட்" எக்ஸ்போஷர் கார்டு கேட்டதற்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

Allied Photographics Limited

அல்லீட் போட்டோகிராபிக்ஸ் லிமிடெட்

(மெயிலிங் டிபார்ட்மெண்ட்) கன்னூர் பில்டிங்ஸ், ஜாம்ஷெட்ஜி டாடா ரோடு, பம்பாய்-1

கிளை ஆபீஸ்கள்: பம்பாய் • கல்கத்தா • மதராஸ் • புதுடில்லி

வெற்றி பெறுதல்



100 மீட்டர் தடைவிலக்கான முறையில்

(நீந்துதல்)

நீந்தல் பந்தயத்தில் தொடர்ந்து மூன்று நிகழ்ச்சிகளில் அவன் வெற்றி பெற்றான். அவனுக்கு ஒரு வெற்றி வீரனின் தோற்றம் இருந்தது. அவனுடைய போஜனம் அதிசயிக்கும்படியுள்ளது. அவனுடைய உணவுகள் தயார் செய்யப்படும் துஷார் வனஸ்பதி அவனுக்கு வேண்டிய அதிக போஷாக்கைக் கொடுத்தது.

அவனுடைய உணவு சமைக்கப்பட்டிருந்தது



துஷார் வனஸ்பதியில்

இரட்டிப்பாக சுத்தப்படுத்தி கைபடாமல் செய்யப்பட்ட வனஸ்பதி ஆரோக்கியமான முறையில் பாக் செய்யப்பட்டது.

T-1/53

துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கர்னூல்.






உலகத்தில் பல பேரோடு நாம் பழகலாம். ஆனால் நம்முடைய வீட்டிற்குப் பக்கத்து வீட்டிலுள்ளவர்களோடு மாத்திரம் நாம் கொஞ்சம் ஜாக்கிரதையாகத்தான் பழக வேண்டும். இது என் சொந்த அனுபவம். பக்கத்து வீட்டுக்காரரோடு நாம் பேசக் கூடாது. பழகக் கூடாது என்று ஏதாவது சங்கல்பம் செய்து கொள்ளலாம். ஆனால் பக்கத்து வீட்டு மனிதருக்கு நம்மோடு பேசிப் பழக வேண்டும் என்று ஆவல் ஏற்படுவதை நம்மால் தடுத்து விட முடியுமா? அவர் முகத்தைப் பார்க்காமலோ அவரோடு பேசாமலோ நாம் எந்த வகையில் தப்பித்துக் கொண்டு போகலாம் என்று உத்தேசித்தாலும் ஏதோ ஒரு விதிதான் இருந்து அவரோடு பழகும்படி நம்மைச் செய்துவிடுகிறது.

அப்பொழுதுதான் அந்த வீட்டிற்கு நான் குடி வந்தேன். என் வீட்டிற்கு இருபுறமுமுள்ள வீடுகளில் உள்ள மனிதர்கள் யார் என்று பராபரியாகக் கேட்டுத் தெரிந்து கொண்டேனே தவிர, தப்பித் தவறிக் கூட அவர்களுடைய நட்பு எனக்கு ஏற்பட்டு விடக் கூடாது என்று ஜாக்கிரதையாகவே இருந்தேன். நான் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்து என்ன புண்ணியம்? விதி இருந்தால் மனிதனை அது விட்டுவிடுமா?

ஒருநாள் திடீரென்று என் வீட்டுக்கு மேலண்டை வீட்டுக்காரர் கையில் ஒரு மட்டை உரிக்காத தேங்காயுடன் என் எதிரில் பிரசன்னமாகி நின்றார். ஆரம்பத்தில் அவரைக் கண்டதும் எனக்கொரு திகைப்பு ஏற்பட்டாலும் பின்னால் அவரை வரவேற்பது போல் ஒரு சிரிப்புச் சிரித்தேன். உடனே அந்த மனிதரும் சிரித்துக் கொண்டே "ஸார்! இந்தத் தேங்காய் உங்கள் வீட்டு மரத்திலேயிருந்து எங்கள் வீட்டுக் கொல்லையில் விழுந்திருந்தது. அதைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போகலாமென்று வந்தேன்" என்று ஆரம்பித்தார்.


'அடாடா! இந்த மனிதர்தான் எவ்வளவு யோக்கியராக இருக்கிறார்!' என்ற வியப்பில் நான் மூழ்கிவிட்டேன். இதுவரையில் நான் எவ்வளவோ வீடுகளில் இருந்திருக்கிறேன். ஆனால் அந்த வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலிருந்த மனிதர்கள் இவ்வளவு யோக்கியப் பொறுப்புள்ளவர்களாக இருந்ததே இல்லை. நான் அந்தத் தேங்காயை வாங்கிக் கொண்டு "ஸார்! பக்கத்து வீட்டிலே குடி இருக்கிற மனிதர்கள் அப்படித்தான் இருக்கணும். முன்பு நான் இருந்த வீட்டிற்குப் பக்கத்து வீட்டிலிருந்தவன் சுத்த அயோக்கியன். ஒருநாள் அவன் வீட்டிற்குத் திருடன் வந்து அவனைச் செம்மையாகப் புடைத்துச் சாமான்களை எடுத்துக் கொண்டு போகிறபொழுது என்னை உதவிக்குக் கூப்பிட்டான். நான் போகவில்லை. பக்கத்து வீட்டுக்காரனுக்கு உதவி செய்யப் போய் நாம் ஏன் ஸார் திருடன் கையால் அடி வாங்க வேண்டும்? நான் அவனுக்கு உதவி செய்யாததற்காக ஒரு வாரம் வரை ஓயாமல் திட்டினான். திட்டினால் என்ன? நான் காதில் வாங்கிக் கொண்டால்தானே? பஞ்சை அடைத்துக் கொண்டு பேசாமல் இருந்து விடுவேன். ஸார்! அதிலிருந்து பக்கத்து வீட்டுக்காரர்களைக் கண்டாலே நான் அவர்கள் அயோக்கியர்கள் என்று தீர்மானித்து விடுவேன், ஸார்!" என்றேன்.



“பக்கத்து வீட்டுக்காரர் என்னைக் கெட்டவன் என்று நினைத்து விடப் போகிறாரே என்ற பயம் எனக்கு எப்பொழுதும் உண்டு ஸார்! அதற்காகவே நான் ஆரம்பத்திலிருந்தே ஒழுங்காகநடந்துகொள்ளப் பார்ப்பேன். அதிருக்கட்டும், என் வீட்டுத் தென்னை மரத்திலிருந்து உங்கள் வீட்டுக் கொல்லைப் புறத்திலே மூன்று தேங்காய் விழுந்திருக்கணும். ஏனென்றால் எங்கள் வீட்டு மரத்திலிருந்த தேங்காயில் மூன்று குறைகிறது. அதனால் உங்கள் வீட்டு மரத்திலிருந்து எங்கள் வீட்டில் விழுந்த ஒரு தேங்காயைக் கொடுத்து விட்டு எங்கள் வீட்டிலிருந்து உங்கள் வீட்டில் விழுந்த மூன்று தேங்காயையும் வாங்கிக்கொண்டு போகலாமென்று வந்தேன்...” என்று இழுத்தார்.

உண்மையாக அன்று என் வீட்டுக் கொல்லையில் மூன்று தேங்காய்கள் விழுந்திருந்தன. அதை நான் எடுத்து வைத்திருந்தேன். அவைகள் எங்கள் வீட்டு மரத்திலிருந்து விழுந்தவைகளா என்று எனக்குத் தெரியாது. பக்கத்து வீட்டு நண்பர் தன்னுடையது என்று சொன்னால் தர்ம நியாயமாகக் கொடுத்துவிட வேண்டியதுதானே? மூன்று தேங்காய்களை அவரிடம் கொண்டு வந்து கொடுத்தேன். அவரும் முகமலர்ச்சியோடு அவைகளை வாங்கிக் கொண்டு போனார்.

என் வீட்டில் ஒரே ஒரு தென்னைமரம். மேல் வீட்டிலும் ஒரே ஒரு தென்னை மரம்தான். இந்த இரண்டு தென்னை மரங்களும் மிகவும் நெருங்கினாற் போலிருந்தன. இந்த இரண்டு மரங்களுக் கிடையே வேலி அமைக்கப்பட்டிருந்தது. தென்னை மரங்கள் இருந்த நிலையில் அவர் வீட்டு மரத்துத் தேங்காய் என் வீட்டிலும் என் வீட்டுத் தேங்காய் அவர் வீட்டிலும் விழுவதற்கு வழி இருந்தது. ஆனாலும் மேல் வீட்டுக்காரர் தேங்காயில் இவ்வளவு குறியாக இருந்தது எனக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. இதிலிருந்து இனி மேல் நாமும் மரத்திலுள்ள தேங்காய் எவ்வளவு என்று எண்ணிக் கணக்குப் பார்த்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்தேன். அவர் வீட்டு மரத்தில் எவ்வளவு தேங்காய் இருக்கிறது என்று எண்ணிக் கணக்கிட்டு ஒவ்வொரு நாளும் கவனமாகப் பார்த்துக்கொண்டு வந்தேன்.



ஒரு நாள் என் வீட்டுத் தோட்டத்தில் மூன்று தேங்காய்கள் விழுந்து கிடந்தன. உடனே அது யார் வீட்டுத் தேங்காயாய் இருக்குமென்று என் வீட்டு மரத்திலிருந்த தேங்காயையும் எண்ணிப் பார்த்தேன். என் வீட்டு மரத்தில்தான் மூன்று தேங்காய்கள் குறைந்திருந்தன. அவைகள் என் வீட்டுத் தேங்காய்தான் என்ற உறுதியோடு உள்ளே கொண்டு வந்து வைத்தேன்.

அன்று மத்தியானம் பக்கத்து வீட்டு நண்பர் கையில் ஒரு தேங்காயுடன் வந்து நின்றார். “ஸார் உங்கள் வீட்டுத் தேங்காய் ஒன்று என் வீட்டில் விழுந்திருந்தது” என்று சொல்லிக்கொண்டே கையிலிருந்த தேங்காயைக் கீழே வைத்தார்.

நான் “அப்படியா? இருக்கலாம்” என்று சொல்லிக்கொண்டே அந்தத் தேங்காயைப் பத்திரமாக உள்ளே வைத்துவிட்டு வந்தேன்.

நண்பர் சிரித்துக் கொண்டே மெதுவாக “இன்று எங்கள் வீட்டு மரத்திலிருந்து உங்கள் வீட்டில் மூன்று தேங்காய் விழுந்திருக்கிறது...” என்றார்.

“எங்கள் வீட்டுக் கொல்லையில் மூன்று தேங்காய் விழுந்தது வாஸ்தவம்—ஆனால் அது உங்கள் வீட்டு மரத்திலிருந்து விழுந்ததில்லை—எங்கள் வீட்டு மரத்திலிருந்துதான் விழுந்தது” என்றேன் அமைதியாக.

“உங்கள் வீட்டு மரத்திலிருந்து விழுந்ததா? அது எப்படி உங்களுக்குத் தெரியும்...?” என்றார் நண்பர் பதட்டத்துடன்.

“உங்கள் வீட்டு மரத்திலிருந்து விழுந்ததுதான் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்...?” என்று கேட்டேன் நான் பதிலுக்கு.

“என் வீட்டு மரத்தில் எத்தனை தேங்காய் இருக்கிறது என்று நான்தான் எண்ணி வைத்திருக்கிறேனே!” என்றார்.

நானும் சும்மா யில்லை. “என் வீட்டு மரத்தில் எத்தனை தேங்காய் இருக்கிறது, உங்கள் வீட்டு மரத்தில் எத்தனை இருக்கிறது என்று தினம் கணக்குப் பார்த்துத்தான் வைத்திருக்கிறேன். உங்கள் வீட்டு மரத்திலிருந்த பதினொரு தேங்காயும் அப்படியே இருக்கிறது. என் வீட்டு மரத்திலிருந்த ஒன்பது காயில் மூன்று காய் குறைந்திருக்கிறது. இதிலிருந்து யார் வீட்டு மரத்திலிருந்து தேங்காய் விழுந்திருக்க வேண்டுமென்று தெரியவில்லையா......?” என்றேன்.

இதைக் கேட்டதும் அவர் முகத்தில் அசடு வழிந்தது. அப்படி வழிந்த அசடோடு ஒரு சிரிப்பும் மலர்ந்தது. “ஸார், நீங்களும் கண் விழித்துண்டுதான் இருக்கிறீங்க! எப்பொழுதும் பக்கத்து வீட்டுக்காரரிடம் ஜாக்கிரதையாய் இருக்கணும் என்கிறதை உங்களுக்குக் காட்டத்தான் இதைச் செய்தேன். உங்களுக்கு முன்னால் இந்த வீட்டில் ஒரு மகானுபாவன் இருந்தான். அவன் இப்படித்தான் பரம யோக்கியனைப் போல ஒரு தேங்காயை என்னிடம் கொடுத்து விட்டு மூன்று தேங்காய்களை என்னிடம் வாங்கிக் கொண்டுபோய் விடுவான். நான் வெகு நாள் இப்படி ஏமாந்து விட்டு அப்புறம்தான் இரண்டு மரங்களிலும் உள்ள தேங்காயை எண்ணிக் கணக்கு வைத்துக்கொள்ள ஆரம்பித்தேன்!” என்றார்.

"சரிதான்! ஆனால் நான் முதல் தடவையிலேயே விழித்துக் கொண்டு விட்டேன்" என்றேன் நான்.

"அதுதான் புத்திசாலித்தனம். அதிருக்கட்டும். நான் கொண்டு வந்த ஒரு தேங்காயையாவது திருப்பிக் கொடுத்து விடுங்கள்!" என்றார் மெதுவாகப் பரிதாபத்தோடு என்னைப் பார்த்துக் கொண்டே. "எதற்காக? உங்களிடமிருந்து தான் எனக்கு இன்னும் ஒரு தேங்காய் வரவேண்டியிருக்கிறது. முன்னொரு தடவை ஒரு தேங்காயைக்



கொடுத்து விட்டு மூன்று தேங்காயை வாங்கிக் கொண்டு போனீர்கள் அல்லவா?" என்றேன். அந்த மனிதர் பதில் பேசாமல் போய் விட்டார். அதிலிருந்து ஒருவருக்கொருவர் தென்னை மரத்திலுள்ள காய்களை எண்ணிக் கணக்கு வைத்துக் கொள்வதில் சூரர்களாய் இருந்தோம். அவர் வீட்டு மரத்திலிருந்து எத்தனை தேங்காய் விழுந்திருந்தாலும் நான் அவர் வீட்டில் கொண்டு போய்க் கொடுத்து விடுவதும் என் வீட்டுத் தேங்காய் அவர் வீட்டில் விழுந்திருந்தால் அவர் கொண்டு வந்து கொடுத்து விடுவதுமாக யோக்கியதை பிறழாமல் நடந்து கொண்டோம். என் வீட்டுக்கு மேல் வீட்டுக்காரரின் நட்பு வைபவம் இப்படி. கீழ் வீட்டுக்காரரிடம் எனக்கு ஏற்பட்ட நட்பு வேறுவிதம். எனக்கும் அவருக்கும் தேங்காய் மூலமோ மாங்காய் மூலமோ நட்பு ஏற்படவில்லை.

அப்பொழுது கோடை காலமானதால் காற்றுக்காக நான் இரவு வேளையில் தெருக் குறட்டில்தான் படுப்பது வழக்கம். கீழ் வீட்டுக்காரரும் இந்த முறையையே அனுசரித்து வந்தார். நான் அந்த வீட்டிற்கு வந்த நாளிலிருந்து தினமும் வாசற் குறட்டிலேயே இரவு வேளையில் படுத்துக் கொண்டாலும் பக்கத்து வீட்டில் படுத்திருக்கும் மனிதரிடம் பேசப் பிரியப்படவில்லை. அந்த மனிதர் என்னிடம் நேர்முகமாக வந்து பேசப் பிரியப்படா விட்டாலும் என்னோடு பேசுவதற்கு ஆவலுள்ளவராக இருக்கிறார் என்பது தெளிவாகத் தெரிந்தது. அவர் தன் வீட்டு வாசலில் வந்து படுக்கையைப் பலமாக உதறித் தட்டிப் போட்டுக் கொள்ளுவார். நானும் அவரை விடப் படுக்கையைப் பலமாக உதறித் தட்டிப் போட்டுக் கொள்வேன். அவர் படுக்கையில் படுத்துக் கொண்டதும் பலமாக ஒரு கனைப்புக் கனைப்பார். நானும் ஒரு கனைப்புக் கனைப்பேன். இப்படிச் சில நிமிஷங்கள் ஓடும் திடீரென்று அவர் 'ஹரே ராமா, நாராயணா, கோவிந்தா!' என்பார். நானும் அவருக்குச் சளைக்காமல் "அப்பனே! முருகா, ஷண்முகா, குருநாதா!" என்று கூவுவேன். இப்படிப் பரஸ்பரம் கனைப்பும் நாமாவளிகளும் எங்களுக்குத் தூக்கம் வரும் வரையில் நடக்கும். இப்படியாக நாட்கள் ஓடிக் கொண்டிருந்தன. ஒரு நாள் அந்த மனிதரே துணிச்சலாக என்னிடம் பேசுவதற்கு வந்து விட்டார்.

"சார், உங்கபேர் தானே ராஜா ராமய்யர்!" என்றார் தன் படுக்கையைப் பலமாக உதறிக் கொண்டே.

"ஆமாம்! என்ன விசேஷம்?" என்றேன்.

"நேற்று ஒரு மனிதர் பெயர் விசாரித்துக் கொண்டு வந்தார். அது நீங்களாகத்தானிருக்குமென்று உங்கள் வீட்டுக்கு அனுப்பினேன். பார்த்தீர்களா?" என்றார்.

"ஓஹோ, அந்த மனிதரை அனுப்பியது நீங்கள்தானா? அந்த மனிதர் யாரென்று உங்களுக்குத் தெரியுமா?" என்றேன் நான் மெதுவாக.

"தெரியாமலென்ன? தெரிந்துதான் அனுப்பினேன். 'மேலத் தெருவிலே கந்தபுராணம் காலக்ஷேபம் வைக்கிறோம், ஏதாவது உங்கள் கையிலே கிடைத்ததைக் கொடுங்கோ'ன்னு கேட்டார். நம்ம காலக்ஷேபம் நடக்கிறதே கஷ்டமாயிருக்கிறது, என்னிடம் ஒன்றுமில்லை என்று கையை விரித்து விட்டேன். அதற்கு மேல் அந்த மனிதர் உங்கள் பெயரைச் சொல்லி விசாரித்தார். 'நல்ல இடம்—நல்ல மனிதர்—கந்தனிடம் பரம பக்தி கொண்டவர். இதற்கு இல்லை என்று சொல்ல மாட்டார். பக்கத்து வீடுதான். போய்ப் பாருங்கள்' என்று சொன்னேன்" என்றார்.

"நீங்கள் அடையாளம் சொல்லி அனுப்பிய வரையில் சரிதான். ஆனால் நீங்கள் அவரிடம் என்னைப்பற்றி இவ்வளவு சிலாக்கியமாகச் சொல்லி இருக்க வேண்டாம்" என்றேன். அத்துடன் அன்று நாங்கள் தொடங்கிய பேச்சு நின்றது.

மறுநாள் நான் படுக்கையை உதறிப் போட்டுப் படுத்துக் கொண்டபோது பக்கத்து வீட்டுக் குறட்டில் படுத்துக் கொண்டிருந்த மனிதர் எழுந்து உட்கார்ந்து "என்ன சார்! இப்படிக் கொஞ்சம் வாருங்களேன். கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்கலாம்" என்றார். அவருடைய அழைப்பிற்கு இணங்கி நானும் அவர் வீட்டுக் குறட்டில் போய் உட்கார்ந்து கொண்டேன்.

"சார்! இந்தத் தெருவைப் போல மகா மட்டமான தெரு கிடையாது. இது என்னுடைய முப்பது வருஷ அனுபவம். உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்ற பூர்வ பீடிகையுடன் ஆரம்பித்தார்.

"எனக்கு முப்பது வருஷ அனுபவம் கிடையாது. இந்தத் தெருவிற்குக் குடி வந்தே ஒரு வாரம் தானே ஆகிறது? எனக்குத் தெரிந்த வரையில் அவ்வளவு மட்டமாகத் தெரியவில்லை. வீடுகளெல்லாம் சௌகரியமாய்த் தானிருக்கிறது. குழாயில் எப்பொழுதும் தண்ணீர் கொட்டிக் கொண்டே இருக்கிறது. நல்ல காற்று. கொசு இல்லை."

"வீடு வாசலெல்லாம் ஒழுங்காய்த்தானிருக்கிறது. மனுஷ்யாளைப் பற்றித்தான் சொல்ல வந்தேன். இந்தத் தெருவிலே இருக்கிற மகா பாவிகளை எண்ணிச் சொல்ல முடியாது, ஸார். கிராதகன்கள் எல்லாம் 'அதைச் செய்தேன் இதைச் செய்தேன்' என்று தற்பெருமை பேசிக்கிறதைப் பார்த்தால் இந்தத் தெருவை மாத்திரமில்லை. இந்த உலகத்தையே அவன்தான் தாங்குகிறானோ என்று சந்தேகம் ஏற்படும்......"



நண்பர் பேசும் வேகத்திலிருந்து தெருவில் அவர் மனத்திற்குப் பிடிக்காத மனிதர்களைப் பற்றிப் பேசுகிறார் என்று நன்கு தெரிந்தது. முப்பது வருட அனுபவம் உள்ளவர் சொல்லுவதை நான் எப்படி ஆக்ஷேபிக்க முடியும்? "சரிதான்" என்று அவர் பேச்சிடையே மூச்சு வாங்கும் நேரத்தில் ஒரு வார்த்தையைப் போட்டு வைத்தேன்.

"எல்லோரும் சுயநலக்காரன்கள். பக்கத்து வீட்டிலே கொலை விழுந்தாலும் திரும்பிப் பார்க்க மாட்டான்கள். ஒரு உதவி கிடையாது. உபகாரம் கிடையாது. உங்களை ஏமாற்றி ஏதாவது காரியத்தைச் சாதித்துக் கொண்டு போகலாமா என்பதிலேயே குறியாய் இருப்பான்கள். அவனைப் பற்றி இவன் தூஷிப்பான். இவனைப் பற்றி அவன் தூஷிப்பான். இதுதான் வேலை......"

"சரிதான். நீங்க சொல்கிறது ரொம்ப வாஸ்தவம். நான் இரண்டொருவரோடு பழகிய வரையில் அப்படித்தான் தெரிகிறது......" என்றேன்.

"அப்படியேதான் சார். சமீபத்திலே முனிஸிபாலிடி தேர்தல் வந்தபோது திடீர்னு சமாஜம் என்று எதையோ கிளப்பிப் பண வரவு செலவெல்லாம் செய்திருக்கா. தேர்தல் முடிந்த பிறகு சமாஜத்திற்கு ஆறு உபதலைவர் வேணுமா, ஏழு உபதலைவர் வேணுமான்னு தகராறு செய்துண்டு சமாஜத்தின் அடுத்த கூட்டத்தை அடுத்த முனிஸிபல் தேர்தல் வரும்போது கூட்டிக் கொள்ளலாம் என்று ஒத்தி வைச்சிருக்கா..." ராத்திரி தூக்கம் வரும் வரையில் இப்படி இருவரின் பேச்சு இருந்தால் சரியான பொழுது போக்காகத்தானே இருக்கும்? பக்கத்து வீட்டு நண்பரின் மூலமாகத் தெருவிலுள்ள விநோதப் பிரகிருதிகளையெல்லாம் பற்றித் தெரிந்து கொள்ளலா மல்லவா.........?" நண்பரை அவர் இஷ்டப் பிரகாரம் பேச விட்டு விட்டேன்.

"இன்று ஒரு அநியாயம் நடந்தது ஸார். கேளுங்கோ" என்றார்.

"என்ன......?" என்றேன் நான் மிகுந்த ஆர்வத்தோடு.

"இந்தத் தெருவிலே சிறு பையன்களெல்லாம் சேர்ந்து ஒற்றுமையாக ஒரு வாசகசாலை நடத்துகிறார்கள். பெரியவர்களைவிட ஒற்றுமையாகவும் ஒழுங்காகவும் குழந்தைகளெல்லாம் பிரயாசைப்பட்டு இன்று அந்த வாசகசாலையிலே ஒரு பாகவதரைக் கூப்பிட்டுப் பஜனை வைத்தார்கள். பெரியவர்களெல்லாம் அதைக் கேட்க வந்தார்கள். பஜனை முடிந்தவுடனே அந்த வாசகசாலைக் காரியதரிசியாக இருக்கும் பையன் வந்தனோபசாரம் சொல்ல ஒலிப் பெருக்கிக்குச் சமீபமாக வந்தான். அந்தச் சமயத்தில் இந்தத் தெருவில் இரண்டு மாதமாக எதற்காகவோ கதர் உடுத்திக்கொண்டு வளைய வரும் ஆசாமி ஒருவர் அந்தப் பையனைத் தடுத்து நிறுத்தி விட்டு ஜிப்பாவை மடக்கிக்கொண்டு, தான் அந்த பஜனையை நடத்த அசாத்தியப் பிரயாசை எடுத்துக் கொண்டதுபோல் பேசி வந்தனோபசாரம் சொன்னார்..."

"பாவம்! அந்த மனிதருக்குப் பத்திரிகையில் தன்னுடைய பெயர் வரணும்னு ஆசையாய் இருக்கலாம்..."

"பத்திரிகையில் பெயர் வரணும்னா தற்கொலை செய்துக்கட்டும். அதற்காக நல்ல காரியங்களெல்லாம் நான்தான் செய்தேன் என்று சொல்லுகிறதா?"

"என்ன செய்கிறது? காலம் அப்படி. உலகத்திலே ரொம்பப் பேர் இப்படித்தான் போலித்தனமாகப் பெயர் வாங்கிக் கொண்டு முன்னுக்கு வரலாம்னு நினைக்கிறா. ஒன்றுமில்லாத மனிதன் எதற்காகவாவது ஆசைப்பட்டால் காரியவாதியாய் உள்ளவர்களின் கடமை அவனை உயரத்தில் தூக்கி வைத்து உருட்டி விடுவதுதான். ஆகையால் எங்காவது ஒரு இடத்தில் இந்த ஆசைக்கு முடிவு ஏற்பட்டு விடும்..." என்றேன் நான்.

"அப்படித்தான் நடக்கும். அது எனக்குத் தெரியும்......" என்றார் நண்பர்.

நண்பர் இன்னும் பல மணி நேரம் பேசுவார் போலிருந்தது. ஆனால் எனக்குத் தூக்கம் வந்து விட்டது. "எனக்குத் தூக்கம் வருகிறது, போகட்டுமா?" என்றேன்.

"கொஞ்சம் இருங்கோ! உங்களிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும்...எங்க வீட்டிலே இருந்த ஒரு தென்னை மரம் புயல் அடித்தபொழுது விழுந்து விட்டது. அதிலிருந்து தேங்காய்க்கு ரொம்பக் கஷ்டம் ஏற்பட்டுப் போச்சு. நாளைக்கு ஏதோ நோன்பாம். இந்தத் தெருவிலே எத்தனையோ வீட்டில் தென்னை மரம் இருக்கு. ஒரு பிச்சைக்காரன் கிட்டேயும் நான் போய்க் கேட்க மாட்டேன். கடையில் போய்க் கேட்டால் ஒரு தேங்காய் நாலணா சொல்கிறான். காசு கிடக்கிறது. ஆனால் இத்தனை நாளும் இல்லாமல் இப்போ கேவலம் தேங்காய்க்குக் காசு கொடுக்கிறதுன்னு மனசாகல்லே. 'தேங்காயைப்பற்றிக் கவலைப்படாதே—அடுத்த வீட்டுக்காரர் இருக்கிறார் – ரொம்பத் தங்கமான மனிதர். ஒரு தேங்காய் கேட்டால் கொடுக்காமல் இருக்க மாட்டார்'ன்னு என் சம்சாரத்தினிடம் சொன்னேன்" என்றார் முகத்தைப் பலவிதமாக வைத்துக் கொண்டு.

"அதற்கென்ன நாளையதினம் உங்களுக்கு ஒரு தேங்காய் தருகிறேன்" என்று சொல்லி விட்டு எழுந்து வந்தேன்.

மறு நாள் காலையில் பக்கத்து வீட்டுக்காரருக்கு ஒரு தேங்காய் கொடுத்தேன். அந்த ஒரு தேங்காயுடன் நண்பர் நம்மை விட்டால் போதும் என்ற எண்ணத்தில் அன்றிலிருந்து காற்றில்லாவிட்டாலும் வீட்டிற்குள்ளேயே படுப்பதுதான் நலம் என்று தீர்மானித்தேன்.

படித்துப் பாருங்கள்!

1. இன்னிசைக் கவிமலர்கள்
2. பாரதக் கவி மலர்கள்
3. கந்தன் கவி மலர்கள்

இனிய தமிழில் பாடி இசைக் கலையை வளர்க்கும் பணி இன்று நல்ல வளர்ச்சியடைந்து விட்டது. தமிழில் இனிமையான சாகித்தியங்கள் கொண்ட நூல்கள் நிறைய வெளிவந்திருக்கின்றன.

"இன்னிசைக் கவி மலர்கள்" என்னும் நூலில் கண்ணனைப் பற்றியும், முருகனைப் பற்றியும் அழகான கீர்த்தனங்கள் அடங்கி யிருக்கின்றன.

"கண்ணனைக் கண்டதுண்டோ—அம்மா [கண்"
கன்றுகள் மேய்த்திடச் சென்ற செந்தாமரைக்

என்ற செஞ்சுருட்டி ராகக் கீர்த்தனம் சொற்சுவை, பொருட்சுவை ததும்பி நிற்கிறது. விலை: ரூ. 2-4-0.

"பாரதக் கவிமலர்கள்" என்னும் தொகுப்பில் தேசபக்தி ஆர்வம் ததும்பும் கீர்த்தனைகள் அடங்கி யிருக்கின்றன.

"முல்லைக்குத் தேர்தந்த பாரி—எனும்
வள்ளல் பிறந்த தமிழ்நாடு
கல்லும் மிதக்கத் திருநாவின்—அரசர்
கடவுளைப் பாடிய நாடு."

என்ற நித்தமிழ்ச் சொற்கள் கலந்து நிற்கும் அழகிய கீர்த்தனங்களைப் படிக்கும் போது, இந் நூலில் உள்ள கீர்த்தனங்களைப் பாடவும், பாடிக் கேட்கவும் விருப்பம் உண்டாவது நிச்சயம்.

அத்தகைய ஆர்வங்கொள்ளும் அன்பர்களுக்கு ராகங்களையும் தாளங்களையும் தேடியலையும் சிரமத்தை வைக்காமல், எல்லாக் கீர்த்தனங்களுக்கும் ராகம், தாளம் குறிப்பிட்டு ஸ்வரமும் அமைக்கப்பட்டிருக்கிறது. விலை: அணா 8.

"கந்தன் கவி மலர்கள்" என்னும் நூலில் முருகப் பெருமானை நினைந்து அகங்கனிந்து பாடிய கீர்த்தனங்கள் அடங்கியிருக்கின்றன.

"மன்னும் ஸ்வாமிமலையின்
முனியாய் விளங்குகின்றான்
வாடும் அன்பருக்கருள்
வாரி வழங்குகின்றான்."

என்பவை போன்ற தமிழ்ச் சுவை கலந்த பாடல்கள் நிறைந்திருக்கின்றன. "முத்தமிழால் வைதாரையும் வாழவைக்கும்" வரதனை முருகன் இத்தகைய இனிய எளிய தமிழில் அமைந்த கீர்த்தனங்களுக்கு வசப்படாமல் தப்ப முடியுமா! விலை; அணா 6.

மூன்று நூல்களையும் இயற்றியவர்: ஸ்ரீமதி ராஜம் சீதாராமய்யர்; கிடைக்குமிடம்; கிரி பிரஸ், பப்ளிஷர்ஸ், திருவல்லிக்கேணி, சென்னை-5

ஸ்ரீ தீக்ஷித கீர்த்தனமாலா (முதல் பாகம்)

கர்நாடக சங்கீதத்தைப் பற்றித் தெரிந்தவர்களுக் கெல்லாம் ஸ்ரீ தீக்ஷிதர் கீர்த்தனங்களைப் பற்றித் தெரியாமல் இராது. ஸ்ரீ தீக்ஷிதர், கர்நாடக சங்கீதத்துக்கு மெருகும் மேன்மையும் தேடித்தந்தவர்; பேரும் புகழும் தேடித்தந்தவர்.

கல்லிடைக் குறிச்சி வைணிக வித்வான் ஸ்ரீ ஏ. சுந்தரமய்யர், ஸ்ரீ தீக்ஷிதரின் கீர்த்தனங்களில் ஊறித் திளைத்தவர்; சங்கீதத்திலும் அநுபவம் மிக்கவர். அவர் இந்த முதல் பாகத்தில் முப்பத்திரண்டு கீர்த்தனங்களை ஸ்வரப் படுத்தி வெளியிட்டிருக்கிறார். கீர்த்தனங்கள் நாகர லிபியில் வெளியிடப் பட்டிருக்கின்றன. ஸ்வர சாகித்யம் தமிழில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்நூலின் இன்னொரு விசேஷம், மேற்படி முப்பத்திரண்டு கீர்த்தனங்களில் பொதிந்து கிடக்கும் கருத்துக்களும் நூலின் பிற்பகுதியில் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பிரசுரம்: கல்லிடைக் குறிச்சி வைணிக வித்வான் ஏ. சுந்தரமய்யர், கெ. 8, காட்டு சுப்பராய முதலித் தெரு, மயிலாப்பூர், சென்னை—4. விலை: ரூ. 2—0—0.

ஸ்ரீ சங்கர நவராகதான கீர்த்தனாவளி

ஆதி சங்கரரின் அருட்பெருக்கையும் ஞான விலாசத்தையும் அறியாதவர் இல்லை யென்றே கூறலாம். அந்த மகா புருஷரின் மகிமையை வடமொழியில் ஒன்பது கீர்த்தனங்களில் பாடி யிருக்கிறார் இந்நூலாசிரியர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து இசைக் கலை வீணை ஆசிரியர் ஸ்ரீ வி. எஸ். கோமதி சங்கரய்யர் அவர்கள் மேற்படி கீர்த்தனங்களுக்குப் பொருத்தமாக ஸ்வரம் அமைத்திருக்கிறார்.

இயற்றியவர்: சிதம்பரம் ஸ்ரீ வி. வி. ஸ்வர்ண வெங்கடேச தீக்ஷிதர்; கிடைக்குமிடம்: வி. வி. கல்யாணஸ்வாமி தீக்ஷிதர், கெ. 100, கிழக்கு ரத வீதி, சிதம்பரம்; விலை: ரூ. 2—4—0.



மனோரமா



1. கண்கள் கலந்தன!

ஆஜானுபாகு. சிவந்த மேனி. வெள்ளி இழைக் கம்பிகளைப் போன்ற நீண்ட தாடி. வயது ஐம்பது ஐம்பத்தைந்து இருக்கலாம். முகத்திலே தேஜஸ் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. அந்தத் தெரு வழியே வந்து கொண்டிருந்த அவர், அப்பொழுது தான் தன் வீட்டிலிருந்து வெளியே போவதற்காக வாசற்படி இறங்கிக் கொண்டிருந்த அந்த அழகிய வாலிபனைப் பார்த்து, "ஏன், அப்பா! ராமலாலின் வீடு எங்கேயிருக்கிறது?" என்று கேட்டார்.

"என்ன ஸார், ராமலாலின் வீடா? அதோ எதிர்த்தாற் போலத்தான் இருக்கிறது" என்றான் அந்த வாலிபன்.

வயது முதிர்ந்த அப் பெரியவர் இலேசாக ஒரு முறை சிரித்தார். பிறகு, "உலகம் சீர்திருந்திக் கொண்டு வருகிறது......ஆமாம். நீங்கள் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறீர்களோ?" என்று கேட்டார்.

"ஆமாம். நான் கல்லூரியில் தான் படித்துக் கொண்டிருக்கிறேன்......ஆனால் நீங்கள் உலகம் சீர்திருந்திக் கொண்டிருக்கிறது என்றீர்களே! என்ன அபிப்பிராயத்தில் சொன்னீர்கள்?" என்று கேட்டான் வாலிபன்.

"ஏன்? நல்ல அபிப்பிராயத்துடன்தான் சொன்னேன். அதாவது உன் அத்தனை வயதாக இருந்த பொழுது நாங்கள் அயலூரார்கள் யாருக்கும் இவ்வளவு சுலபமாக வழி சொன்னதில்லை. அப்படியே ஏதாவது வழியோ வீடோ காட்டினாலும் வந்தவன் திக்கிமுக்கித் திண்டாடிப் போகும்படிதான் காட்டுவோம். ஆனால் அந்தக் காலம் இப்பொழுது மலையேறி விட்டது. அதாவது உலகம் ரொம்பச் சீர் திருந்தி விட்டது. இன்னொரு விஷயம்கூடப் பாரேன். நீங்கள் எல்லோரும் இப்பொழுது 'மாமா, தாத்தா' என்று கூப்பிடாமல் 'ஸார்!' என்னும் சொல்லை மட்டும் உபயோகிக்கத் தொடங்கி விட்டீர்கள். இதெல்லாம் எதனால் என்கிறாய்? தற்காலத்திய கல்லூரிப் படிப்பினாலும், கலாசாலைப் படிப்பினாலும் வந்த வினைதான்!" என்றார் கிழவர்.

வாலிபனுக்குக் கிழவர் பேசிய அந்தப் பேச்சு மிகுந்த வியப்பை அளித்தது. அத்துடன் கல்லூரி கலாசாலையை அவர் கிண்டல் செய்ததனால் கொஞ்சம் கோபம் கூட உண்டாகியது. ஏனென்றால் அவன் கல்லூரி மாணவன். அவனுக்குப் பள்ளிப் படிப்பு, கல்லூரிக் கல்வி ஆகியவற்றில் பெருமையும் பூரிப்பும் ஏற்பட்டிருந்தன.

"ஏன்? உங்களுக்குப் புது நாகரிகம் என்றால் பிடிக்கவில்லையா, என்ன?" என்று கேட்டான் அந்த வாலிபன்.

"பிடிக்காமல் என்ன? நாகரிகம் என்பது நல்லதுதானே? ஆனால் இந்த நவ நாகரிகம் மனிதனை நல்ல நேர் வழிக்கு இட்டுச் செல்லாமல் கெட்ட கோணல் வழியில் இழுத்துச்





செல்கிறது. அதனால்தான் நான் இதை நாகரிகத்துக்குப் புறம்பானது என்று சொல்கிறேன்!" என்று விளக்கினார் பெரியவர்.

"இதுதான் வீடு. ஜன்னல் அருகே அதோ நின்றுகொண்டிருக்கிறாளே, அவள்தான் ராமலாலின் பெண் மனோரமா!" என்றான் வாலிபன். அதற்கு மேல் அதிகமாக அந்த முதியவரிடம் நாகரிகத்தைப் பற்றிப் பேச்சுக் கொடுக்க அவனுக்கு மனம் இல்லை.

"ராமலாலின் வீடு இவ்வளவு சின்னதா? என்னிடம் நீ வேடிக்கை-கிடிக்கை செய்யவில்லையே?" என்று கேட்டார் பெரியவர்.

"எனக்கு அம்மாதிரியெல்லாம் குறும்புத்தனம் செய்ய வராது" என்றான் வாலிபன் சிறிது இறுமாப்புடன்.

"உம்......" ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார் பெரியவர். பிறகு "எல்லாம் விதியின் விளையாட்டு!" என்று கூறி மார்பைப் பிடித்துக்கொண்டு ஒரு குறுமூச்சு விட்டார்.

ராமலாலின் குடும்பம் பரம்பரையாகவே பசையுள்ள பணக்காரக் குடும்பம். தானம், தர்மம், தயை ஆகிய விஷயங்களில் அவருடைய முன்னோர்களின் பெயர் வெகுதூரம் வரை பரவியிருந்தது. பழைய காலத்துப் பேர்வழிகள் ராமலாலின் குடும்பத்தவர்களின் தானதர்மங்களைப் பற்றிக் கதை கதையாகச் சொல்வார்கள். அந்தக் கதையைக் கேட்கும் 'தற்காலத்து நவ நாகரிக வாலிபர்களின் விழிகள் வியப்பினால் அகல விரியும். ஆனால் அவர்கள் கூறும் விஷயங்கள் கூட்டிக் குறைத்து மிகைப் படுத்திச் சொல்லிய விஷயங்கள் அல்ல; நூற்றுக்கு நூறு உண்மையானவை. அப்படிப்பட்ட குடும்பத்தில் பிறவி யெடுத்ததன் பயனாக, ராமலாலின் ரத்தத்திலும் பண்பாடுகளிலும் பரம்பரைப் பிறவிக் குணமாகவே தயை-தர்மம் ஆகியவை ஊறிப் போயிருந்தன. சிறு பிள்ளைப் பிராயத்திலேயே 'அறம் செய்ய விரும்பு!' என்னும் பாடத்தை ராமலால் நன்கு கற்றுத் தேர்ந்திருந்தார். தயைதான் தர்மத்தின் ஆணிவேர் என்பது அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கை.

ராமலால் பிறந்தபொழுது, அவருடைய வீட்டில் சாக்ஷாத் லக்ஷ்மி தேவியே வாசம் செய்து வந்தாள். நாளுக்கு நாள் அந்தக் குடும்பத்தின் செல்வ நிலை செழித்து ஓங்கவே, 'இந்தக் குடும்பத்தில் லக்ஷ்மி காலை ஒடித்துக் கொண்டு உட்கார்ந்து விட்டாள். ஒரு நாளும் இந்த வீட்டை விட்டுப் போக மாட்டாள்' என்று ஜனங்கள் சொல்லிக் கொண்டார்கள்.

ராமலால் பெரியவரானதும் இத்தனை சுக போக ஐசுவரியங்களைத் தாம் மட்டும்



காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராச்சாரியார் அவர்களின் கட்டளைக்கு இணங்க, சென்னை புரசவாக்கம் வேதாந்த ஞான சபை, சன்மார்க்க சபைகளின் ஆதரவில் ஸ்ரீ சங்கரஜெயந்தி மஹோத்ஸவம் வெகு விமரிசையாக நடந்தது. அந்த வைபவத்தை முன்னிட்டு மே மாதம் பதினேழாம் தேதியிலிருந்து ஜூன் மூன்றாம் தேதி வரையில் தினசரி உபநிஷத பாராயணம், லக்ஷார்ச்சனை, பஜனை, ஏழைகளுக்கு உணவளிப்பு முதலியவை நடைபெற்றன.

தனியே அனுபவிப்பது பாவம், தம் உற்றார்களுக்கும் உறவினர்களுக்கும் இதை அனுபவிக்கப் பங்கு உண்டு. அவர்களும் இதை அனுபவிப்பதில் தவறில்லை என்று எண்ணினார். ராமலாலின் இந்த நல்ல எண்ணம் உற்றார் உறவினர்கள் வரை காற்றில் மிதந்து செல்லவே, அவர்கள் ராமலாலின் வீட்டில் வந்து குடியேறத் தொடங்கிவிட்டார்கள். எனவே, குடும்பத்தில் நபர்களின் எண்ணிக்கை வர வர அதிகரிக்கத் தொடங்கியது. ராமலால் இயல்பாகவே தயையும், தாக்ஷிண்யமும், தாராள சிந்தையும் படைத்தவர். ஆகவே, ஒவ்வொருவரும் அவரிடம் சென்று தங்கள் தங்கள் காரியத்தைச் சுலபமாகச் சாதித்துக் கொள்ள முடிந்தது. அவ்வளவு நல்ல குணம் படைத்தவரை நான்கு பேர் புகழத் தொடங்கியதில் ஆச்சரியம் இல்லையல்லவா? கிட்டத்து உறவினர்கள், தூரத்து உறவினர்கள் யாருமே, மூக்கைச் சுற்றி வளைத்துத் தொட்டுத் தங்கள் தங்கள் உறவைச் சொல்லிக் கொண்டு ராமலால் வீட்டிற்கு வந்து வாசம் செய்யத் தொடங்கிவிடுவார்கள். மாதக் கணக்கில் மனம்போன போக்குப்படி உண்டுகளித்து வாழ்வார்கள். பிறகு கையில் கொஞ்சம் காசும் வாங்கிக் கொண்டு, மறுபடியும் கூடிய சீக்கிரமே திரும்பி வருவதாக வாக்களித்து விட்டு விடை பெற்றுக் கொள்வார்கள். ராமலால் யாருக்கும் எவ்விதக் குறைவும் ஏற்படாத வகையில் மரியாதை செய்வார். எல்லோருடைய எண்ணத்தையும் ஈடேற்ற முயற்சிப்பார். அவர் பொருள் உதவி மட்டும் செய்வதில்லை, உடலினாலும் உள்ளத்தினாலும் கூட உதவி செய்வார். பிறர் வருந்திப் பார்க்கச் சகியார். வரும் விருந்தினர்களுக்கு வேண்டிய உதவிகள் செய்து திருப்திப்படுத்துவது என்பது அவருடைய வாழ்க்கையில் மிகவும் மகத்துவம் வாய்ந்த தர்மமாகி விட்டது. அவர் செய்யும் ஆசார - உபசாரங்களில் திளைக்கும் நபர்களுக்கு ராமலாலின் வீட்டை விட்டு இலேசில் போக மனம் வராது. சிலர் ஏதாவது காரியம் என்று வந்து விட்டால் போவார்கள். சிலர் போக மாட்டார்கள். ஒருவேளை அவர்களுக்கு 'இங்கே இருப்பதை விட அங்கே என்ன பெரிய காரியம் கிடக்கிறது?' என்ற எண்ணமாயிருக்கலாம். விருந்தினராக வந்து ராமலாலின் வீடே கதியென்று இருப்பவர்களுக்கே கூட விருந்து உபசாரத்தில் எவ்விதமான குறைவுக்கும் இடம் வைப்பதில்லை.

இவ்வாறு ராமலாலின் வீடு உற்றார் உறவினர்கள் புடை சூழ 'ஜே! ஜே!' என்றிருந்தது. ஆயினும் உண்மையைக் கேட்கப் போனால் காலியாக வெறிச்சோடியிருந்தது என்றுதான் கூறவேண்டும்.


காரணம், அவருக்குப் புத்திர பாக்கியம் எதுவும் இல்லாததுதான்!

ராமலாலின் மனைவி சுபத்திரா தூய உள்ளமும், இனிய சுபாவமும் படைத்தவள். அவளுக்கு எல்லாக் குழந்தைகளும் தன் குழந்தைகளாகவேதான் தோன்றும். ஏனெனில் தன்னுடையதென்று உரிமை கொண்டாடக் கூடிய குழந்தை ஒன்றுமே அவளுக்கு இல்லையல்லவா? காலை ஐந்து மணியிலிருந்து இரவு ஒன்பது மணி வரை அவளுக்கு ஓய்வு ஒழிச்சலே இருக்காது.

ராமலாலுக்கு அவள் தன் கையாலேயே தான் சமைத்துப் போடுவாள். மற்ற நேரங்களிலெல்லாம் அக்கம் பக்கத்து வீட்டுக் குழந்தைகளுடன் வேடிக்கையாகப் பொழுது போக்குவது, அவர்களுக்குச் சட்டை, துணிமணி தைத்துக் கொடுப்பது, யாராவது நோய்வாய்ப்பட்டிருந்தால் அவர்களுக்கு மருந்து - மாயம் என்று கொடுத்துக் கவனிப்பது ஆகிய காரியங்களில் தன் பொழுதைப் போக்குவாள். அக்கம் பக்கத்தில் எந்தப் பெண்மணிக்காவது உடல் நலம் சரியில்லை என்று தெரிந்தால், கூப்பிடாமலேயே அவளுக்கு ஊழியம் செய்யப் புறப்பட்டு விடுவாள். பெரிய வீட்டு மாட்டுப் பெண் வந்து தனக்கு இப்படி ஊழியம் செய்வதைப் பார்க்கும் பொழுது அந்தப் பெண்மணிகளுக்கு ஒருபுறம் வெட்கமாயிருக்கும்; இன்னொரு

ரேயான் நூல்கள் அழகும், உழைப்பும் பொருந்திய ஆடைகளுக்கு

இந்தியாவின் முதன் முதலான ரேயான் தொழிற்சாலையில் நூற்கப்படும் நூல்கள் தினசரி அணியும் ஆடைகளையும், பனியன்கள், லேஸிங்குகள், இலாஸ்டிக் சாமான்கள், மேஜை நாற்காலி துணிகள் முதலியவைகளைத் தயாரிக்க சிறந்தவை. 120 டீ.யும் 150 டினையர்களில் கிடைக்கும். பிரகாசமான, பளபளப்பான, நீடித்துழைக்கக் கூடிய அமைப்புள்ளவை.



TRAYONS

வியாபார விபரங்களுக்கு:
தி திருவாங்கூர் ரேயான்ஸ் லிமிட்,
ரேயான்புரம் போஸ்ட்,
வடக்கு திருவாங்கூர்.
மேனேஜிங் ஏஜெண்ட்கள்:
[illegible]
திருவாங்கூர் லிமிட்.

TR 3652

அரித்து, எரிந்து கொப்பளிக்கும் எக்ஸிமா 10 நிமிஷத்தில் குணமடைகிறது

நிக்ஸோடேர்ம் (Nixoderm) கண்டு பிடித்தது முதல் யாரும் எக்ஸிமா, பரு, ரத்தக் கட்டி ஆகிய சரும வியாதிகளால் அவதியுறவும், உங்களுக்கும் பிறருக்கும் வெறுப்பு ஏற்படவும் வேண்டாம். ரஸாயன முறையில் தயாரித்த நிக்ஸோடேர்ம் (Nixoderm) உதவியால் சருமத்தை சுத்தமாக்குங்கள். அஜாக்கிரதையாக வைத்துக்கொண்டு பிறர் உங்களை வியாதிஸ்தரெனக் கருத இடம் தராதீர்.

ஒரு புதிய சாதனம்

நிக்ஸோடேர்ம் (Nixoderm) ஒரு புதிய களிம்பு. ஆனால் நீங்கள் உபயோகித்த இதர களிம்பைப் போன்றதல்ல. பிசுக்கற்றது. மேலே தடவும் போதே ஒரு பவுடரைப்போல உணருவீர்கள். சருமத் துவாரங்களினூடே சென்று வியாதிக்கு மூலமான இடத்தை தாக்குகிறது. நிக்ஸோடேர்ம் (Nixoderm) மூன்று வழிகளில் உபாதையைத் தாக்குகிறது: (1) நோய்க்குக் காரணமாகும் கிருமிகளைக் கொல்லுகிறது. (2) அரித்து, எரிந்து வெந்து போவதை 7 முதல் 10 நிமிஷத்தில் தடுத்து சருமத்தை மென்மையாக்குகிறது. (3) இயற்கையாகவே ஆற்றி, சுத்தமாக, மிருதுவாகப் பட்டுப் போல வழ வழப்பாகவும் ஆக்குகிறது.

விரைவில் பலனளிக்கிறது

சரும நோய்களை நிவர்த்திக்கவே விஞ்ஞான முறையில் தயாரான நிக்ஸோடேர்ம் (Nixoderm) மற்றதைவிட சீக்கிரம் வேலை செய்கிறது. தமைச்சல், எரிச்சலை சில நிமிஷத்தில் நிறுத்தி விரைவில் சருமத்தை சுத்தமாக ஆற்றி, மிருதுவாகவும் வழ வழப்பாகவும் செய்கிறது. ஓரிரண்டு தினங்களில் கண்ணாடியில் பார்த்துக் கொள்ளுங்கள். தேடிய சஞ்சீவி—நாடிய வைத்தியம் கிடைத்ததை உணர்வீர்கள். நிக்ஸோடேர்ம் (Nixoderm) ஆயிரக்கணக்கானவர்களது சருமத்தைச் சுத்தமாக்கி



BEFORE

AFTER

புஷ்டியாக்கியது. அவர்களில் ஒருவரான மிஸ்டர் R. K. கூறுகிறார்: "12 வருஷமாக தமைச்சலும் எரிச்சலும் தரும் எக்ஸிமாவினால் கஷ்டப்பட்டேன். பல மருந்துகளுக்குப்பிறகு நிக்ஸோடேர்ம் (Nixoderm) உபயோகித்தேன். 10 நிமிஷத்தில் தமைச்சல் நின்று மறுநாளே சருமம் சுத்தமாகியது. என் தோற்றத்தின் மாறுதலைக் கண்ட நண்பர்கள் ஆச்சரியமடைந்தனர்.

திருப்திக்கு உத்தரவாதம்

சருமம் திருப்தியாகதவரை நிக்ஸோடேர்ம் (Nixoderm) மதிப்பை இழக்கிறது. இன்றே நிக்ஸோடேர்ம் (Nixoderm) வாங்குங்கள். தோற்றத்தில் ஏற்படும் அபிவிருத்தியைக் காண ஆச்சரியப்படுவீர்கள். ஒரு வாரத்துக்கு உபயோகித்தால் சருமம் வழவழப்பாயும் மிருதுவாயும் சுத்தமாயும் வசீகரமாகவும் ஆவது நிச்சயம். இல்லையேல் காலிப் பெட்டியைத் திருப்பிக் கொடுத்து, கொடுத்த விலையை வாபஸ் பெறுங்கள். இன்றே நிக்ஸோடேர்ம் (Nixoderm) வாங்குங்கள். அதற்களித்த உத்திரவாதமே உங்களுக்கான உறுதி.

புறம் பெருமையாயிருக்கும். சுபத்திராவின் உண்மை அன்பும், உற்சாகமும் எல்லாரையும் அவளுக்கெதிரே தலை பணியச் செய்யும்.

இம்மாதிரி ராமலாலும் சுபத்திராவும் அள்ளிஞலும் குறையாத புண்யத்தைச் சேமித்துக் குவிக்கலாயினர். புண்யம் குவிந்தது; ஆனால் பணம் குறைந்தது. செலவு நாளுக்கு நாள் அதிகரிக்கலாயிற்று. எஜமானரின் இந்த எளிய சுபாவம், கணக்குப் பிள்ளை, குமாஸ்தாக்கள், மற்ற பணியாட்கள் ஆகியவர்களுக்கு அசாத்தியத் துணிவை உண்டுபண்ணி அநுசிதமான முறையில் பலன் பெறத் தூண்டி விட்டது. எனவே, கண்களுக் கெதிரிலேயே வேண்டிய பொருள்களைக் கொண்டு போகத் தொடங்கினார்கள்.


குமாஸ்தாவைப் பற்றியோ கணக்குப் பிள்ளையைப் பற்றியோ யாராவது ராமலாவிடம் சென்று குறைகூறத் தொடங்கினால், அதற்கு ராமலால், "இப்படியும் எங்கேயாவது நடக்குமா? அவர்கள் உழைப்பின் காரணமாகத் தானே என் இல்லத்தில் லக்ஷ்மி குடி புகுந்திருக்கிறாள்? அவர்கள் வைத்த மரத்தை அவர்களே வெட்டுவார்களா? ஊஹூம், அப்படியெல்லாம் இருக்கவே முடியாது. உங்களுக்கெல்லாம் ஏதோ வீண் பிரமை உண்டாயிருக்கிறது!" என்பார்.

ஆனால் இப்படியே கட்டுக் கடங்காத தொழில் எவ்வளவு நாட்கள்தான் நடக்க முடியும்? உலகத்தை நடத்துவதற்குப் பொருளாதார சாஸ்திரம் என்று ஒன்று உபயோகத்தில் இல்லாவிட்டால், தாராள மனப்பான்மை கொண்டவர்கள் தங்கள் தாராள மனப்பான்மைக்கு ஒரு வரையறை கட்டிக்கொள்ள வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்கிராது. மொத்த இருப்பு என்ன, செலவு என்ன, பாக்கி இருப்பு என்ன என்று கணக்கு எழுதியோ எழுதாமலோ பார்த்துக்கொள்ள வேண்டியிருப்பதனால்தான் தாராள மனப்பான்மை படைத்தவர்கள் கூடத் தங்கள் தாராளத்துக்கும் ஒரு எல்லை உண்டு என்பதை உணர வேண்டியிருக்கிறது.

ஆனால் உள்ளத்தில் ஊறும் பண்பு என்பது ஒரு நாளில் உண்டாவதும் இல்லை, ஒரே நாளில் அழிந்து விடுவதும் இல்லையே! வியாபாரத்தில் மந்தம் ஏற்பட்டு விட்டது; தொழிலில் சுணக்கம் ஏற்பட்டு விட்டது. கடன் சுமை ஏகமாக ஏறிக்கொண்டே போகிறது என்பதை அறிந்தும் ராமலாலினால் தம் கையைக் கட்ட முடியவில்லை. விரிவான முறையில் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள் சட்டென்று சுருக்கமான முறையில் வாழ நேர்ந்தால் சிரம சாத்தியந்தானே? ஆகவேதான், ராமலாலின் குடும்பத்தில் பழைய தான தருமங்களுக்கு எவ்விதக் குறைவும் ஏற்படவில்லை. எனவே, கடன் சுமையின் நிறையும் ஏறிக்கொண்டே போயிற்று.

இம்மாதிரி நிலையில்தான் ராமலாலின் வீட்டில் பெண் பிறந்தாள். அதற்காக அவர்கள் வருந்தவில்லை; பெரு மகிழ்ச்சியே அடைந்தார்கள். குழந்தை பிறந்த விஷயத்தில் அந்தத் தம்பதிகளிடையே ஏற்பட்ட மகிழ்ச்சி செயற்கையானதல்ல; இயற்கையானதே. குழந்தையற்ற குடும்ப வாழ்க்கையில் குழந்தை பிறந்து விட்டால் கொம்மாளத்துக்கும் களிப்புக்கும் கேட்பானேன்? பட்ட மரம் துளிர்த்த கதையாக அந்தக் குடும்பத்திலே மகிழ்ச்சி பொங்கியது. எவ்வளவுதான் எண்ணற்ற இன்பச் சாதனங்கள் இருந்த பொழுதிலும் குழந்தையில்லாத வீடு ஒரு வீடா? செல்வத்தில் உயர்ந்த செல்வம் குழந்தைச் செல்வம் அல்லவா? எனவே, அந்தத் தம்பதிகள் மகிழ்ச்சியில் மிதந்து இன்பத்தில் திளைத்து ஊறினர். பிறந்த பெண்ணுக்குப் பெயர் மனோரமா என்று வைக்கப்பட்டது.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் என்பார்களே, அப்படி அப்பெண் குழந்தை வளர்ந்து வந்தாள். ஆனால் ராம



லாலின் குடும்ப கௌரவம் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்தது. கடன் ஏற ஏறக் கௌரவத்தில் குறை ஏற்படுவது இயல்புதானே? கடன் கொடுத்தவர்கள் கடனைத் திருப்பிக் கேட்கத் தொடங்கினர். தவணைப்படி! கடன் திரும்பி வராமற்போகவே வழக்கே தொடுத்தனர். ஆகவே, அமைதியான வாழ்வு நடத்திவந்த ராமலாலைக் கவலை பிடித்துக் கொண்டது. கவலை வாட்ட வாட்ட அவர் உடம்பும் காயத் தொடங்கியது.

எத்தனையோ குடும்பங்களை ஆதரவுடன் அரவணைத்து ராமலாலே பாதுகாத்து வந்தது ஒருகாலம். ஆனால் இப்பொழுதோ?

அவரை, அண்டிச் சுரண்டிச் சாப்பிடவந்த அத்தனை குடும்பங்களும் வந்த சுவடு தெரியாமல் வந்தவழியே வந்த இடத்துக்கே திரும்பிப் போய் விட்டன. அவருடைய உதவியைப் பெறாத நண்பர்களே கிடையாது. அவர் வீட்டில் கல்லடி மங்களுக உட்கார்ந்து தவங்கிடந்து தன் தேவையைப் பெற்றுப் போனவர்களுக்கு, இப்பொழுது வேலைத் தொல்லை ஏகமாக அதிகரித்து விட்டது. காரணம், ராமலாலைப் பார்த்துப் பேசுவதே அவர்களுக்குக் கொஞ்சமும் பிடிக்காமற் போனதுதான்!

எத்தனையோ பெண்களைப் பரிபாலித்துத் திருமணமே செய்து கொடுத்திருந்தார் ராமலால். ஆனால் தம்முடைய சொந்தப் பெண்ணைப் பராமரிக்கப் படாத பாடுகள் படும்படியாகி விட்டது அவருக்கு. கடன் சுமையிலிருந்து விடுபட்டால் போதும் என்ற எண்ணம் எழவே, சொத்துக்களை விற்று விடுவோமா என்று எண்ணினார் ராமலால்.

சொத்து விற்பனைக்கு வருகிறது என்பதை அறிந்ததும் கடன் கொடுத்தவர்கள் அத்தனை பேரும் ஏககாலத்தில் பணங் கேட்டுப் படையெடுத்து விட்டனர். எனவே, சொத்து படிக்குப் பாதியாகத்தான் விலை போயிற்று. அப்பொழுதுதான் ராமலாலுக்குத் தமது கடன் எத்தனை ஏறியிருக்கிறது என்பது தெரிந்தது. சொத்து முழுவதும் கரைந்தது. கடனும் தீர்ந்தது. அதற்குப் பின் அவரிடம் எஞ்சியது ஒரு சின்னஞ் சிறு வீடும், சில நகைகளும் கொஞ்சம் நிலமும்தான். மற்றபடி இருந்த வண்டி – இண்டி, மாடு - ஓடு, குதிரை - இதிரை, வீடு வாசல், தோட்டந் துரவு பங்களா எல்லாம் கைமாறி விட்டன.

ஏழ்மை மிகக் கொடியது; பெருந் துயர் விளைவிப்பது; தாங்க முடியாத தொல்லைகளைத் தருவது.

ஆனால் குழவிப் பருவம், காளைப் பருவம் எல்லாவற்றையும் பணத்திலேயே புரண்டு மிதந்து கழித்தவனுக்கு, அதர்மமான வழியிலோ தீச்செயல்களிலோ தம்பிடியேனும் தம்பிடி கூடச் செலவழித்து அறியாதவனுக்கு, 'தான தருமம் செய்து சொத்து அழிந்ததில்லை' என்ற முதுமொழியில் பூரண நம்பிக்கை கொண்டவனுக்குத் தன் சொத்தெல்லாம் அழிந்து ஏழையாகி விட்டான் என்றால், எத்தனை மனக் கஷ்டம், துயரம் வேதனை ஏற்படும் என்பதைப் பணம் படைத்தவனால் புரிந்துகொள்ள முடியாது. ஏழையினால்தான் புரிந்து கொள்ள முடியும். ஆனால்......

அத்தனை துயரம் தருவதாயிருந்தாலும் ஏழ்மை பாவகரமானதல்ல; தீயதல்ல.

ராமலாலின் வீட்டைப் பார்த்து, "எல்லாம் விதியின் விளையாட்டு!" என்று பெருமூச் செறிந்த பெரியவர், அந்த வாலிபனைப் பார்த்து, "ஏன் அப்பா! ஏழ்மை தீயதல்லவே?" என்று கேட்டார்.

"தீயதா யிருக்கலாம்; தீயதற்றதாயும் இருக்கலாம்!" என்று சந்தேகாஸ்பதமான பதிலை அளித்த வாலிபன், "நல்லது. நான் உத்தரவு வாங்கிக் கொள்ளட்டுமா?" என்று கேட்டான்.

"ரொம்ப சரி! தாங்கள் செய்த இந்த உபகாரத்துக்கு நான் 'தாங்க்ஸ்' அளிக்காவிட்டால் என்னைக் காட்டுமிராண்டி, நாகரிகம் தெரியாதவன், பழகத் தெரியாதவன் என்றெல்லாம் எண்ணி விடுவீர்கள். அதற்காக வந்தனம்! நான் இன்னும் இங்கே இரண்டொரு நாள் இருப்பேன். அதனால் நாம் மறுபடியும் பல முறை சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தாலும் கிடைக்கலாம்!"

வாலிபனின் கவனம் பெரியவரின் பேச்சில் செல்ல வில்லை; ஜன்னலருகில் நின்றுகொண்டிருந்த மனோரமாவிடம் சென்றிருந்தது. அதே சமயம் மனோரமாவின் மான் விழிகள் அவனை நோக்கவே, இருவருடைய கண்களும் ஒன்றோ டொன்று கலந்து உறவாடின. ஆனால் அடுத்த கணமே, அவன் தன் கண்களைக் குனிந்து கொண்டான். அப்புறம் அங்கிருந்து தன் வழியே நடந்தான்.

"அண்ணா வீட்டில் இருக்கிறாரா?" என்று கேட்டார் தங்க மேனி படைத்த அந்தப் பெரியவர், ஜன்னலருகில் நின்று கொண்டிருந்த மனோரமாவை நெருங்கி.

பணங்காசு படைத்த காலத்தில் எல்லாரும் ராமலாலை 'அண்ணா' என்றுதான் அழைப்பது வழக்கம்.

அறையில் உட்கார்ந்திருந்த ராமலாலின் உள்ளத்திலே 'அண்ணா' என்ற சொல்லைக் கேட்டதும் பழைய நினைவுகள் குமிழியிட்டுக் கொண்டு வந்தன. அவர் மனம் வேதனையுற்றது; முகம் வாட்ட முற்றது.

மனோரமா தனது மதுரமான குரலில், "இருக்கிறார்!" என்று ரத்னச் சுருக்கமாகப் பதில் அளித்தாள்.

அந்தப் பெரியவர் உடனே உள்ளே நுழைந்தார். ராமலால் அவரைப் பார்த்ததும் ஆனந்தம், ஆச்சரியம் அன்பு ஆகிய பாவங்கள் ஒன்றை யொன்று முந்திக்கொண்டு வர, எழுந்து சென்று மார்புறத் தழுவிக் கொண்டார். கண்கள் நீரை வடித்தன. தழுதழுத்துப் போன அவருடைய தொண்டையிலிருந்து, "பரமானந்தம்! பரமானந்தம்!" என்ற சொற்கள் எழுந்தன. (தொடரும்)


இப்பொழுது! மக்ளீன்ஸ் க்ளோரோபில் சேர்ந்த

மற்றொரு உயர்தரப் பற்பசையைத் தருகின்றனர்!

உலகிலேயே மிகச் சிறப்பாகப் பற்களை வெளுக்கும் பற்பசையுடன் இயற்கைவழங்கும் துர்க்கந்த நாசினி சேர்ந்ததுதான் இப்புதிய உன்னத பற்பசை—மக்ளீன்ஸ் பெராக்ஸைட், க்ளோரோபில் சேர்ந்த பற்பசையாகும்



இதில் உண்மையில் புதிய அம்சங்களிருக்கின்றன. மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையுடன் க்ளோரோபில் சேர்ந்திருக்கிறது. அசல் பற்பசை விலகவில்லை, கால சோதனையில் நிரூபணமான எந்தப் பொருளும் இதில் நீக்கப்படவில்லை—அதே விசேஷத் திட்டத்தின்படி உருவானதுதான்—ஆனால் க்ளோரோபில் சேர்க்கப்பட்டது. ஆகவே க்ளோரோபில் பற்களை சுத்தம் செய்யாது. ஸ்வாசத்தை சுத்தமாக்குகிறது. ஆகவே க்ளோரோபில்லின் பயனை அனுபவிக்கும்போதே பற்களும் தூவெண்மையுடன் பிரகாசிக்கவேண்டியது எவ்வளவு அவசியம்! மக்ளீன்ஸ் பெராக்ஸைட்—க்ளோரோபில் சேர்ந்த—பற்பசை உபயோகிப்பதுதான் அதற்கு நிச்சயமான வழி.



க்ளோரோபில் சேர்ந்த மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசை

— பற்களை அதிக வெண்மையாக்குகிறது
— ஸ்வாசத்தை மணம்பெறச்செய்கிறது

மக்ளீன்ஸ் உபயோகிப்போர் கவனிக்கவும்:— அசல் மக்ளீன்ஸ் பெராக்ஸைட் பற்பசையும் வழக்கம்போல எங்கும் கிடைக்கும்.

வியாபார விவரங்களுக்கு

ஜெ. எல். மாரிஸன் ஸன் & ஜோன்ஸ் (இந்தியா) லிமிடெட்.

தபால் பெட்டி 6527, பம்பாய் 26. தபால் பெட்டி 387, கல்கத்தா.

தபால் பெட்டி 1370, சென்னை

CPH - 1- TAM

தமிழ்க் களஞ்சியம்

டி. கே. சி.

30. அறிவு ஒன்று போதும்!

தமிழ்ப் பாடல்களை அனுபவிக்கிறோம். தமிழ் பாஷையினுடைய அற்புதச் செயல்களை அனுபவிக்கிறோம். 'கவி கிடைத்து விட்டது' என்று கூத்தாடுகிறோம்.

எத்தனையோ விதமான கவிகள் எத்தனையோ பாவங்கள் கொண்ட கவிகள். பாவங்கள் நம்முடைய உள்ளத்தைக் கவருகின்றன.

திருவள்ளுவர் குறளிலும் எத்தனையோ பாவங்கள் கொண்ட கவிகள் இருக்கின்றன. தமிழுக்கு வாய்த்த கவிகள். நம்முடைய நாவுக்கும் வாய்த்த கவிகள். அவைகளில் சிலவற்றைப் பார்க்கலாம்.

பட்டினத்தார் காரியம் எல்லாருக்கும் தெரிந்த காரியம். ஒரு காசு கையில் கிடையாது. நிலம் வேண்டுமே என்கிற ஆசையும் கிடையாது. முற்றத் துறந்த முனிவர் அவர்.

ஆனாலும் ஒன்று: உண்மையான அறிவு படைத்தவர். அப்படியானால் அவருடைய ஆனந்தத்துக்கும் உத்ஸாகத்துக்கும் குறைவேது?

தமிழ் நாடு உஷ்ணப் பிரதேசம். மனுஷனுக்கு வேண்டிய காரியம் எல்லாம் ரொம்ப ரொம்பச் சுருக்கம். இலகுவில் கிடைத்து விடும் அவை. அந்தக் காலத்தில் வயலில் நெல் விளைந்து கொட்டிக் கிடக்கும். புன்செய்களில் தான்ய வகைகள் விளைந்து கொட்டிக் கிடக்கும்.

அவைகளை விற்றுக் காசாக்குகிறது என்பது கிடையாது. சாப்பிட்டுத் தீர்க்க வேண்டியது தான்.

இப்போது தெரியவரும் பட்டினத்தார் பாடலின் உண்மை.

சோறிடும் நாடு
துணியும் தரும், தொண்டர்
ஆனவர்க் கே
ஏறிடும் கைகள்
இறங்கிடும் தீவினை
ஏகம தாய்
நீறிடும் மேனியர்
சிற்றம் பலவர்
நிருத்தம் கண்(டு)
ஊறிடும் கண்கள்
உருகிடும் காண்என் தன்
உள்ளமு மே.

[சோறிடும் நாடு: எந்தப் பட்டிக் காட்டுக்குப் போனாலும் நாலு வீட்டில் கையை ஏந்தினால் வயிறு நிறைந்து விடும்; துணியும் தரும்; மூன்று முழத் துண்டுக்குப் பஞ்சம் கிடையாது; தொண்டர் ஆனவர்க்கே ஏறிடும் கைகள்: பணக்காரர்களை அல்ல துறவிகளைக் கண்டால் ஆனந்தத்தில் இரண்டு கைகளும் தலைக்கு மேல் குவிந்து நிற்கும்; இறங்கிடும் தீவினை: ஆணவச் செயல் எப்படி அவர்களை விட்டு ஓடி விட்டதோ அப்படியே நம்மை விட்டும் ஓடியே போய் விடும்; இது ஒரு ஆனந்தம்.

ஏகமதாய் நீறிடும் மேனியர்: இறுதியற்ற மேனி முழுதும் திருநீறு அணிந்தவனை; சிற்றம்பலவர் நிருத்தம் கண்டு: நடராஜப் பெருமானது நடனத்தைக் கண்டு தரிசித்து; ஊறிடும் கண்கள்: ஆனந்தக் கண்ணீர் பெருகி விடும்; உருகிடும் காண் என்தன் உள்ளமுமே: மனம் கரைந்து போய் இறைவனோடு கலந்து விடும்.]

ஆனந்த மயமாய் இருக்கிறது பாடல். ஆனந்தத்தை அளப்பதற்குக் கருவி ஒன்று உண்டானால், பட்டினத்தார் உள்ளந்தான் அது.

அறிவுடையார் எல்லாம்
உடையர்

திருவள்ளுவர் ஒப்புக் கொண்டார். அடுத்து வருகிறது பரிவும் கோபமும்.

ஒருவருக்கு நாற்பத்தாறு ஏக்கர் நன்செய். அந்த நன்செய் நிலத்தில் ஒரு மூக்குக் கோடியில் நாலு ஏக்கர். அது வேறு ஒரு ஆசாமிக்கு உரியது. அந்த நாலு ஏக்கரையும் சேர்த்து விட்டால் ஐம்பது ஏக்கர் ஆகி ஒரு கணக்காய் இருக்குமே என்று இருபது வருஷமாகக் கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார்.

கணக்குச் சின்னக் கணக்காய் இருந்தாலும் இராப் பகலாய்ப் போட்டுக் கொண்டே இருப்பார்—நாற்பத்தாறும் நான்கும் ஐம்பது என்று. கடைசியாக அந்த நாலு ஏக்கர் ஆசாமி நிலத்துக்கு விலை பேச ஆரம்பித்தார். பலர் நிலத்தை நாடினார்கள். நாற்பத்தாறு ஏக்கர் ஆசாமியும் நாடினார். யாரோ ஒருவர் தட்டிக் கொண்டு போனார் நாலு ஏக்கரை.

இருபது வருஷமாகப் போட்ட கணக்கெல்லாம் வீணாய்ப் போய் விட்டது. இரவு தூக்கம் வரவில்லை. சாப்பாடு இறங்கவில்லை. அன்னத்வேஷம் வந்தது. கரண்டிக் கணக்குக்கு வந்து விட்டது சாப்பாடு. நாற்பத்தாறு ஏக்கர் நன்செய் இருந்து என்ன செய்ய? நாற்பத்தாறும் இல்லை என்று ஆயிற்று.

குறளாசிரியருக்குக் கோபம் வராமல் என்ன செய்யும்?

அறிவுடையார் எல்லாம்
உடையர், அறிவிலார்
என்னுடைய ரேனும்
இலர்.

'இலர்' என்று முடிகிறதில் கோபம் தொனிக்கிறது.


வெண்மையாக
சலவை செய்யப்
பட்டுள்ளன
பிரகாசமாக
சலவை செய்யப்
பட்டுள்ளன
ஸன்லைட்
சோப்பினால் தான்
துணிகளை
அடித்துத் துவைக்காமலே
வெண்மையாகவும்
பிரகாசமாகவும்
சலவை செய்கிறது!
SUNLIGHT
SOAP
SUNLIGHT SOAP

S. 200-50 TM

REGD. NO. M. 4392

Registered as a newspaper in Ceylon

டால்டா வனஸ்பதி எல்லா சமையல்களுக்கும் மிகச்சிறந்தது



"நான் இப்பொழுது டால்டா உபயோகித்துச் சமைப்பதால் என் குடும்பத்தினர் ஒருபொழுதும் அவ்வுணவைச் சாப்பிடத் தவறுவதில்லை"

சிறந்த

தின்பண்டமான சேம்பு இலை வடை

தயாரிக்க டால்டா செய்முறைக் குறிப்பைத் தவறவிடாதீர்கள்!

½ கப் கடலை மாவு, சிட்டிக்கை பேகிங் பௌடர், மஞ்சள் பொடி, ருசிக்குத் தேவையான உப்பு இவைகளைக் கலந்து கெட்டியான தோசை மாவுப்பருவத்திற்கு தயாரித்துக் கொள்ளவும். சேம்பு இலையில் மாவைப் பரத்தி அருவிய தேங்காயைத் தூவவும். இலையின் ஓரத்தை மடக்கி சுருட்டவும். பிரிந்துவிடாமலிருக்க கிராம்பைக் குத்தவும். ½ மணி நேரம் ஆவியில் வேகவும். பரிமாறுவதற்கு முன் துண்டுகளாக குறுக்கே வெட்டி குழிவு குறைந்த வாணலியில் சிறிது டால்டாவில் பொரிக்கவும்.

டால்டா சமையல் புத்தகம் தமிழ், வங்காளி, ஹிந்தி, ஆங்கிலம் என்ற பாஷைகளில் இப்பொழுது கிடைக்கிறது—300 செய்முறைக் குறிப்புகள்—விலை ரூ. 1/- தபால் செலவு அணா 10 தனி. இன்றே எழுதுங்கள்:

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1



டால்டா

எல்லாச் சமையல்களுக்கும் உகந்த ஆதர்ச சமையல்- வஸ்து

10, 5, 2, 1, பவுண்டு டின்களில் கிடைக்கிறது

HVM. 201-50 TM